தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

14வது சமுக கைத்தறி, இளைஞர் மாநில மாநாடு



செங்கை மாவட்டம்

காஞ்சிபுரம்
பிப்ரவரி 4,5-1984

தென்னிந்திய செங்குந்தர்

சமூக, இளைஞர், மாதர், கைத்தறி

14-வது

மாநில மாநாடு

காஞ்சிபுரம்.

சிறப்பு மலர்

1984

வழங்குவோர் :

செங்கை மாவட்ட

செங்குந்த மகாஜன சங்கம்

காஞ்சிபுரம்.

சென்டெக்ஸ் கைத்தறி

எங்களது சென்னிமலை தலைமை நிலையத்திற்கும் மற்றும் கீழ்கண்ட எங்கள் பிரத்தியேக ஷோரூம்களுக்கும் வருகை தாருங்கள்.

* உம்மிடியார் அங்காடி மையம்,
  811, அண்ணா சாலை, சென்னை-600 002.
  போன் : 810241

* நீல்கிரீஸ் டெக்ஸ்டைல்ஸ்,
  நீல்கிரீஸ் பில்டிங்,
  பிரிகேட் ரோடு,
  பெங்களூர்-1.

* சென்டெக்ஸ் ஷோரூம்,
  ராஜாராம் மோகன்ராய் ரோடு,
  எம். ஜி. சி. மார்க்கெட் எதிரில்,
  சிராலா, ஆந்திரப் பிரதேசம்.

சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
சென்னிமலை.

எம். பி. நாச்சிமுத்து, பி.ஏ., பி.எல்.,
தலைவர்.

தென்னிந்திய செங்குந்தர்
14-வது மாநில மாநாடு
காஞ்சிபுரம்.
ருத்ரோத்காரி, தை 21, 22
1984 பிப்ரவரி 4, 5

அச்சிட்டோர்:
துரை அச்சகம்,
35-A, நிமந்தகார ஒற்றைவாடைத் தெரு,
காஞ்சிபுரம்-631 502.
போன்: 2 6 3 1

செங்குந்தர்தம் குல முதற்கடவுள்



காஞ்சிக்குமரகோட்டம்

ஆறுமுகப்பெருமான்

பணிவுடன் படைக்கிறோம்

காஞ்சியில் நடைபெற்ற—கண்டவர் வியக்கும் வகையில் சிறப்புற நிகழ்ந்த—செங்குந்தர் 14-வது மாநில மாநாட்டின் சிறப்பு மலரை நம் குலமுதற் கடவுள் குமரன் திருவடிகளில் வைத்து, "மணங்கமழ் தெய்வத்து இளநலம்" கூட்டி, காலமெலாம் மணம் பரப்பி, மாண் பயன் அளிக்கும் வண்ணம், நம் மரபினர் வாழ்வு தழைக்க, முனைந்து தொண்டாற்றிய — தொண்டாற்றுகின்ற நல்லோர் தமக்குப் படைத்துப் பணிகிறோம்.

—இங்ஙனம்,

மலர் வெளியிடுவோர்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

14-வது சமூக, மகளிர், கைத்தறி, இளைஞர் மாநில மாநாடு

காஞ்சிபுரம்.

அழைப்பு இதழ்

பேரன்புடையீர், வணக்கம்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கச் சார்பில் 14வது சமூக, மகளிர், கைத்தறி மற்றும் இளைஞர் மாநாடு காஞ்சிபுரம் Dr. P. S. S. நகராட்சி மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலில் (காந்தி மைதானம்) அமரர் சேர்மன் சாமிநாத செங்குந்தர் பந்தலில் அமரர் வி. ரத்தின செங்குந்தர் அரங்கில், சீரோடும் சிறப்போடும் 1984 பிப்ரவரி 4,5 தேதிகளில் நடைபெற உள்ளது. இம்மாநாட்டு நிகழ்ச்சிகளில் தமிழக அமைச்சர் பெருமக்களும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் செங்குந்தர் குலச் செம்மல்களும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு காஞ்சியில் நடைபெறும் வரலாற்றுச் சிறப்புடைய இம் மாநாட்டிற்குத் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்மஸ்ரீ M. P நாச்சிமுத்து B.A.,B.L.,
மாநிலத் தலைவர்.

M. M. சரவணன் B.A.,L.T.,
தலைவர்.

T. R. செல்வராசன் M.A., M.Lit.
D. சேதுராமன்,
மாநிலச் செயலர்கள்.

அரிமா A. சம்பந்தன்
பொதுச் செயலர்.

மற்றும் வரவேற்புக் குழுவினர்
தொலைபேசி: 2551.

நிகழ்ச்சி நிரல்

4—2—1984 சனிக்கிழமை	**ஊர்வலம்**
காலை 8-30 மணிக்கு	காந்திரோடு தேரடியில் இருந்து முக்கிய சாலைகள் வழியாக மாநாட்டுத் திடல் அடைதல்.
ஊர்வலத் தலைமை:	திரு. **P. வெங்கடசுப்பிரமணியம்** M.A., B.L., M.L.A., சட்டப் பேரவை உறுப்பினர், காஞ்சிபுரம்.
பகல் 12-00 மணி	குலக்கொடி ஏற்றல். **திரு. P.S. பாலசுப்பிரமணிய செங்குந்தர்** தலைவர், சென்னை செங்கை மாவட்ட செ.ம. சங்கம்

சமூக மாநாடு

மாலை 2-00 மணி — இன்னிசை அரங்கு
கலைமாமணி A. விநாயக செங்குந்தர் காஞ்சிபுரம்.

மாலை 3-00 மணி
வரவேற்புரை — திரு M. M சரவணன் B.A., L.T.,
மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர்.

முன்னிலை — பத்மஸ்ரீ M. P. நாச்சிமுத்து B.A ,B.L.,
தலைவர், தெ செ. ம. சங்கம.

தலைவர் — திரு. A. V. Rm. V. சங்கரநாராயணன்
மேலாண்மை இயக்குநர் 'கோமதி மில்ஸ்' அம்பாசமுத்திரம்.

திறப்பாளர் — திரு A. சங்கரசெங்குந்தர், B.A ,B.L.
புரவலர், சேலம் மா. செ. ம. சங்கம.

வாழ்த்துரை — திரு. C. நடராஜ செங்குந்தர், B.A ,B.L.,
துணைத்தலைவர் தெ. செ. ம. சங்கம்
திரு R. சம்பந்தமூர்த்தி செங்குந்தர்
துணைத்தலைவர், தெ. செ. ம. சங்கம்

சொற்பொழிவு : திரு. K. A. S பத்மநாபன் வடஆற்காடு
" C. காந்திதாஸ் M.A , B.L, மதுரை
" R. N. சந்தானராஜகோபாலன் தஞ்சை
" R A N. முத்துசாமிசெங்குந்தர் பெரியார்
" P. ராமசாமிசெங்குந்தர், B.A., B L. சேலம்
" K. P. பாலகிருஷ்ணன், M. S.C, கோவை
" C. அருணாசல செங்குந்தர், B.A., B T , நெல்லை
" R. சோமசுந்தரம், M A. B.L., தென்ஆற்காடு
" T. குட்டியப்பன், EX M C. தருமபுரி
" சரவணபழநிவேலு சென்னை
" டாக்டர் M கருணாநிதி, M.B., B S., திருச்சி.
" I. தனசீலன், B.A., இராமநாதபுரம்
" டாக்டர் C பாலசுப்பிரமணியம், M.A.M. Lit., Ph. D.
" டாக்டர் வெங்கடேசன், M.A., Ph D.
முதல்வர். ராஜூ கல்லூரி ராஜபாளையம்
" E. S. தியாகராஜன், EX M.L A. திருத்தணி
" ச. கு பா. பழநிவேலு, மாநில கிளைச் சங்க அமைப்பாளர்
" சீனிவாசன் நீலகிரி
" V. K. சீனுவாசன் நகரி
" L. செங்கோட முதலியார் நாகர்கோயில்
" A. S. செல்வரத்தினம் B. SC., இலங்கை
" K. A. குருபாதம் காஞ்சிபுரம்

நன்றியுரை : திரு. மு சண்முகம் M.A., B.T.,

மகளிர் மாநாடு

மாலை 6-00 மணி	
வரவேற்புரை	திருமதி. K. G. திருஞானம், காஞ்சிபுரம்
தலைவர்	" **யசோதா சண்முகம்**, M. A., சென்னை.
திறப்பாளர்	" **முத்துலட்சுமி இராமலிங்கம் ஆக்கூர்.**
நன்றியுரை	" **மீனாட்சி தணிகைமலை**, சென்னை
இரவு 7-00 மணி	பரதநாட்டியம் நாட்டிய கலாமணி, நாட்டிய திலகம் செல்வி: **M. P. சசிரேகா**, சென்னை.
இரவு 8-00 மணி	இன்னிசை. சங்கீத வித்வான் திரு. S. சுப்பிரமணிய முதலியார் & குழுவினர் Partner: நெல்லை சாரீஸ், 208, பெரிய தெரு, திருநெல்வேலி-6.
இரவு 9.00 மணி	வழக்காடு மன்றம்.
வழக்கு	"தமிழ்கேட்ட செங்குந்தர்களிடம் ஒட்டக்கூத்தர் தலை கேட்டது தவறே"
நடுவர்	இலக்கியச் செல்வர் திரு. T. விசுவநாதன், ஈரோடு.
தொடுப்பவர்	திரு. த ஜெகதீசன், B Sc., ஈரோடு
மறுப்பவர்	" டாக்டர் நா. ஆறுமுகம், காஞ்சிபுரம்.
நன்றியுரை:	" A. K G. சம்பந்தன், பொருளாளர்.

5—2—1984 ஞாயிறு கைத்தறி வளர்ச்சி மாநாடு

காலை 8-00 மணி இசையரங்கு	கலைமாமணி N. ஆறுமுகம், வடபழனி. திருமுறைத்திலகம் கு. புண்ணியகோட்டி.
காலை 9-00 மணி	**மாநாடு தொடக்கம்.**
வரவேற்புரை	திரு. M. M தணிகைமலை.
முன்னிலை	**திரு. P. வெங்கடசுப்பிரமணியம் M.A., B L., M.L.A.**
தலைவர்	**கைத்தறிக் காவலர்** பத்மஸ்ரீ **M. P. நாச்சிமுத்து B.A., B.L.,**
திறப்பாளர்	மாண்புமிகு **இராம. வீரப்பன்,** செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் தமிழ்நாடு அரசு.
வாழ்த்துரை	திரு. **M. பக்தவத்சலம்**, முன்னாள் முதல் அமைச்சர்,
சொற்பொழிவு	திரு. S. முருகையன், M.P.
	" D. பட்டுசாமி M.P.
	" M. சுந்தரம் M.L A.
	" C. கோபால், B.Sc., B.L., M.L.A.
	" R சண்முகம் M L A.
	" C. R. உமாபதி
	" K. T. S. மணி
	" S. M. T. பொன்னுசாமி முதலியார்
	" K. S. பார்த்தசாரதி
	" M. வேதாசலனார்
	" E நரேந்திரன் B.A.,
	" A. சுப்பிரமணியம்
	" K. A. பழனியப்பன்
	" P. A. வட்டமலை
நன்றியுரை	" A. சம்பந்தன் பொதுச் செயலர்.

இளைஞர் மாநாடு

மாலை 2-30 மணி இன்னிசை	திரு. S. சரவணன் காஞ்சிபுரம்
	" கிருஷ்ணன் திருத்தணி
மாலை 3-00 மணி	
வரவேற்புரை	டாக்டர் நா. ஆறுமுகம், M.A., Ph.D.
தலைவர்	**J. சுத்தானந்தன்,** ஈரோடு.
திறப்பாளர்	மாண்புமிகு நீதிபதி **T. N. சிங்காரவேலு,** B.A.,B.L.,
சொற்பொழிவு	திரு. S. தியாகராஜன் B,E., சென்னை
	" **A. ஜெகந்நாதன்,** B.A., திருப்பூர். திரைப்பட இயக்குநர்,
	" புலவர் சிலம்படியான், சேலம்
	" புலவர் மி.ச. நடேசன் சென்னை
	" பேராசிரியர் K. பஞ்சாட்சரம், M.SC., ஆலந்தூர்
	" ப. கணபதி, நெய்வேலி
	" மன்னர்மன்னன், புதுவை
	" டாக்டர் E. S. S. இராமன், M.B.B S., பொதட்டூர்பேட்டை.
	" L. நாகப்பன், குன்றத்தூர்
	" மு. சிவசண்முகம் உடுமலை
	" உமாபழனியப்பன், பு. புளியம்பட்டி.
	" K. M. எல்லப்பன் அரக்கோணம்
	" து பழனியாண்டி திருச்சி.
	" N டோமேசன், B.A., B L., காஞ்சி.
	" R. சண்முகவேலு, B.A., B.L., காஞ்சி.
	" K. அரங்கநாதன் B.A., மற்றும் பலர்.
நன்றியுரை	திரு. G. S. துரைசாமி செங்குந்தர் துணைத் தலைவர்.
மாலை 5-00 மணி	

மாநாட்டு மலர் வெளியீடு

வெளியிடுபவர்	திரு. **C. K. குமாரசாமி,** M.A., பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.
முதல்மலர் நுகர்பவர்	திரு M. எத்திராஜ், நிர்வாக இயக்குநர். திருமகள் மில்ஸ், குடியேற்றம்.
நன்றியுரை	" T. R. செல்வராசன், செயலாளர்.
இரவு 7-00 மணி	**மாநாட்டுத் தீர்மானங்கள்**

திரைப்பட நடிகர், மலையூர் மம்பட்டியான் புகழ், நடிகர் தியாகராசன் விழாவில் கலந்துகொள்வார்.

வரவேற்புக் குழு

புரவலர் :— திரு. **P. வெங்கடசுப்பிரமணியம்,** M.A.,B.L., M.L.A.
ஐயன்பேட்டை, காஞ்சிபுரம்.

தலைவர் :— திரு. **M. M. சரவண முதலியார்,** B.A.,L.T.,
காஞ்சிபுரம்.

துணைத்தலைவர்கள்:—திரு. **G. S. துரைசாமி முதலியார்,**
அம்மையார்குப்பம்
திரு. **T. S. கணேசன்,** திருமழிசை.

பொதுச்செயலர்:— அரிமா திரு. **A. சம்பந்தம்,** காஞ்சிபுரம்.

செயலாளர்கள் :— திரு. **M. M. தணிகைமலை,** காஞ்சிபுரம்.
திரு. **சரவண பழநிவேலு,** சைதாப்பேட்டை.
திரு. **M. சண்முகம்,** M.A.,B.T., காஞ்சிபுரம்.

பொருளாளர்:— திரு. **A. K. G. சம்பந்தம்,** காஞ்சிபுரம்.

உறுப்பினர்கள் :—

திரு. B. சரவண முதலியார், காஞ்சிபுரம்
" கார்த்திகேய முதலியார், மாணம்பதி
" வ. கந்தசாமி, காஞ்சிபுரம்
" V. C. K. சஞ்சீவி முதலியார், மத்தூர்
" K. M. எல்லப்பன், அரக்கோணம்
" பீதாம்பரம், சம்பத்துராயன்பேட்டை
" T. நடராஜ முதலியார், குன்றத்தூர்
" E. S. தியாகராஜ முதலியார், பொதட்டூர்பேட்டை
" R. ரத்னவேல் முதலியார், திருக்கழுக்குன்றம்
" S. பெருமாள், காஞ்சிபுரம்
" P. M. முருகப்ப முதலியார், வங்கனூர்
" S. சடையாண்டி முதலியார், காஞ்சிபுரம்
" V. V. சண்முகம், B.A., B.L., திருத்தணி
" N. டோமேசன், B.Sc., B.L., ஐயன்பேட்டை
" S. ஏகாம்பரம், ஐயங்கார்குளம்
" வெங்கடாசலம், பழையசீவரம்.
" ஏழுமலை முதலியார், கயப்பாக்கம்
" T. V. செல்வராஜு, குன்றத்தூர்

மலர்க் குழு

தலைவர்: திரு. **சி. பாலசுப்பிரமணியனார்,** M.A., M.Lit., Phd., சென்னை.

செயலர்: புரவலர் திரு. **சா. ர. ஜகந்நாதன்,** B.Lit., காஞ்சிபுரம்

உறுப்பினர்கள்:

புலவர் திரு. ச. சதாசிவம், M.A., காஞ்சிபுரம்
" " தா. சுப்பிரமணியம், இராசாம்பேட்டை
" " பா. மாணிக்கவேலு, காஞ்சிபுரம்
" S. சதாசிவம், காஞ்சிபுரம்
" துரை. சௌந்தரராஜன், காஞ்சிபுரம்.
" கா. வே. முருகேசன், காஞ்சிபுரம்
" V. தேவராஜன், M.com., ஐயன்பேட்டை
" N. பாலசுப்பிரமணியன், காஞ்சிபுரம்
" A. மோகன்தாஸ், காஞ்சிபுரம்.

நிதிக் குழு

திரு. T. கங்காதர முதலியார், ஐயன்பேட்டை
" அண்ணாமலை முதலியார், காஞ்சிபுரம்
" G. பெருமாள், காஞ்சிபுரம்
" P. திருவேகம்ப முதலியார், ஐயங்கார்குளம்
" P. வெங்கடாசலம், பழயசீவரம்
" விநாயக முதலியார், திருக்கழுக்குன்றம்
" கணபதி முதலியார், மாணும்பதி, திருக்கழுக்குன்றம்.
" N. கனகசபாபதி முதலியார், ஐயன்பேட்டை
" V. D. சிங்காரம், உத்திரமேரூர்
" T. K. ஆறுமுக முதலியார், பொலம்பாக்கம்
" தாமோதர முதலியார், பொதட்டூர்பேட்டை
" K. மணி, கருங்குழி
" குமாரசாமி முதலியார், மதுராந்தகம்
" ஆறுமுக முதலியார், அச்சிறுப்பாக்கம்
" T. C. K. பாலசுந்தரம், மத்தூர்
" மு. கந்தசாமி முதலியார், காஞ்சிபுரம்

விளம்பரக் குழு

தலைவர்: திரு. சு. **திருவேங்கடம்**, காஞ்சிபுரம்.

செயலர்: புலவர் திரு. **C. E. S. பெருமாள்**, காஞ்சிபுரம்.

உறுப்பினர்கள் :

திரு. கு. புண்ணியகோடி, காஞ்சிபுரம்.
புலவர் " மி. ச. நடேசன், சைதாப்பேட்டை.
" க. தங்கவேல், காஞ்சிபுரம்.
" A, நீலகண்டன், காஞ்சிபுரம்.
" T. P. லட்சுமணன், காஞ்சிபுரம்.
" A. நடராஜன். காஞ்சிபுரம்.
" மா நடராஜன், தேசுமுகிப்பேட்டை.
" V. அண்ணாதுரை. காஞ்சிபுரம்.
" C. குப்புசாமி, காஞ்சிபுரம்.

உணவுக் குழு

தலைவர்: திரு. **A. சோமசுந்தரம்**, காஞ்சிபுரம்.

செயலர்: திரு **A. குருபாதம்**, ஐயன்பேட்டை.

உறுப்பினர்கள் :

திரு. A லோகநாதன், காஞ்சிபுரம்.
" V. தியாகராஜன், காஞ்சிபுரம்.
" V. கிருஷ்ணன், B.A B.Ed. காஞ்சிபுரம்.
" K. சுப்பிரமணியன், காஞ்சிபுரம்.
" D. விநாயக முதலியார், காஞ்சிபுரம்.
" N. ஆறுமுகம், B Sc.,M.Ed., நரசிங்கபுரம்.
" E. S. சுவாமிநாதன், பொதட்டூர்பேட்டை.
" S. துரைவேலு, காஞ்சிபுரம்.
" A. K. G. ஜெயபாலன், காஞ்சிபுரம்.

ஊர்வலக் குழு

தலைவர்: திரு. **N. கோதண்டபாணி,** காஞ்சிபுரம்.

செயலர்: திரு. **V. மாசிலாமணி,** காஞ்சிபுரம்.

உறுப்பினர்கள் :

திரு. விசுவநாதன், காஞ்சிபுரம்.
" கோ. பாலகிருஷ்ணன், காஞ்சிபுரம்.
" காசிலிங்கம், காஞ்சிபுரம்.
" V. சிவப்பிரகாசம், காஞ்சிபுரம்.
" கோபால், காஞ்சிபுரம்.
" M. அழகானந்த முதலியார், மஞ்சப்பதி.
" இளங்கோ, நாயகன்பேட்டை.
" தணிகைமலை, ஏகனம்பேட்டை.
" தட்சணாமூர்த்தி, திம்மையன்பேட்டை

தொண்டர் படைக் குழு

தலைவர்: திரு. **கு. ப. கண்ணன்,** காஞ்சிபுரம்.

செயலர்: திரு. **V. குமார்,** காஞ்சிபுரம்.

உறுப்பினர்கள் :

திரு. வேலாயுதம், காஞ்சிபுரம்.
" D. K. ஏகாம்பரம், காஞ்சிபுரம்.
" செல்வராஜு, காஞ்சிபுரம்.
" லோ. மனோகரன், காஞ்சிபுரம்.
" K. அன்பழகன், காஞ்சிபுரம்.
" தணிகாசலம், திருக்கழுக்குன்றம்.
" நெடுஞ்சேரன், ஐயன்பேட்டை.
" ஜகந்நாதன், கயப்பாக்கம்.
" இளங்கோ, ஒரக்காட்டுப்பேட்டை.

நம் குலக் கவிக்கோ

செங்குந்தர் குலதிலகம் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

நீதி அரசர்
T. N. சிங்காரவேல்

சென்னை
25—1—1984

-: வாழ்த்துரை :-

" கூட்டுறவே நாட்டுயர்வு " என்ற கொள்கையை நம் மக்கள் உணரவேண்டும் என்பதற்காகவே இம்மாதிரி சிறப்புக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. தனி மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்தால் சமுதாயம் சிறப்படையும். நல்ல சமுதாயம் உருவானால் நாடு நலமடையும், வளம் பெறும். நாடும் அரசும் நமக்கு என்ன செய்தது என்ற எண்ணத்தைத் தவிர்த்து, நாம் நாட்டுக்கு என்ன செய்கிறோம் என்ற உணர்வு வளரவேண்டும். எந்தக் காரியத்திலும் ஒரு பொது நோக்கு மிக மிக அவசியம். நாம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற நிலைமாறி, மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டும் என்ற பரந்த நோக்கம் நம் சமுதாயத்தினரிடையே வளர்ந்தால் அதுவே நம் வாழ்க்கையின் வெற்றி.

அந்தப் பணியிலே நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்காகவே இந்த சிறப்புக் கூட்டம் அமைக்கப்பட்டுள்ளது. " செய்யும் தொழிலே தெய்வம் ; அந்தத் திறமை தான் நமது செல்வம் ' என்பதற்கிணங்க, நாம் எத்தொழிலைச் செய்தாலும் அதில் நேர்மையும் நாணயமும் கொண்டு கட்டுப்பாட்டுடன் வாழவேண்டும் என்பதை லட்சியமாகக் கொள்ள வேண்டும். அந்த வகையிலே செங்குந்த சமுதாயத்தினர் தம் பணிகளை, கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு இந்த மன்றம் வழிகாட்டும் என்று உறுதியாக நம்புகிறேன்.

உலகமெலாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும் ;
உழவரெல்லாம் தானியத்தை உவப்புடனே பெருக்கட்டும் ;

பலதொழில்கள் புரிகின்ற பட்டாளி உயரட்டும் ;
பகுத்துணர்வில் தொகுத்துணர்வு பண்பாட்டை உயர்த்தட்டும் ;

கலகங்கள், போட்டி, பகை கடந்த ஆட்சி நடக்கட்டும் ;
கல்லாமை, கடன், வறுமை, களங்கங்கள் மறையட்டும் ;

நலவாழ்வை அளிக்கும் மெய்ஞ் ஞானஒளி வீசட்டும் ;
நம்கடமை அறவாழ்வின் நாட்டத்தே சிறக்கட்டும்.

அன்பன்,

தி. ந. சிங்காரவேல்,
உயர்நீதி மன்றம், சென்னை.

மதுரை மாவட்ட
செங்குந்தர் மகாசன சங்கம்

4-B, பள்ளிவாசல் தெரு, கோரிப்பாளையம்.

மதுரை - 625 002.

பதிவு எண். 105/975

நாள் : 28—1—84

C. காந்திதாஸ், M. A. B. L.
தலைவர்.
652. K. K. நகர், மதுரை-625020.

மா. கன்னையா,
துணைத்தலைவர்.

M. மாணிக்கம்,
செயலாளர்.

S. இரத்தின சபாபதி,
துணைச் செயலாளர்.

S. சாமி, B.A.
பொருளாளர்.

வாழ்த்து

காஞ்சிபுரத்தில் 1984ம் வருடம் பிப்ரவரித் திங்கள் 4, 5 தேதிகளில் செங்குந்தர் மாநில மாநாடு நடப்பது குறித்தும், மாநாட்டினையொட்டி மலர் வெளியிடுவது குறித்தும் மிக்க மகிழ்ச்சி. மக்களின் மானத்தைக் காக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள செங்குந்தர் சமுதாயம் பல துறைகளிலுய் முன்னேறி வளமான வாழ்வு பெற மாநாடும், மலரும் வழி காட்ட வேண்டுமென்றும், மாநாடு சிறப்புடன் நடைபெறவும், மலர் சிறப்பாக அமையவும் எங்கள் மாவட்டச் சங்கத்தின் உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

C. காந்திதாஸ்
தலைவர்.

நல்வாழ்த்து!

அங்கிங்கெ னுதபடி எங்குமுள செங்குந்தர்
அனைவோரும் ஒன்று கூடி
ஆன்ருேர்கள் எஞ்ஞான்றும் அன்போடும் அறிவோடும்
ஆவலுடன் ஏத்தி மகிழும்

தங்கநிகர் என்னம்மை காமாட்சி யுறத்தழுவும்
தனிமாவின் கீழி ருந்து
தரணிமுழு தருளாட்சி செய்துவரும் ஏகம்பன்
தண்ணருள் துணையி னேடு

செங்குந்தர் மாநாட்டைச் சீராக நடத்திமகிழ்
செவ்வேளின் இளைய பெரியீர்!
செந்தமிழ்நாட் டிற்புகழோ டின்பமுற வாழ்தற்குச்
செய்வதனை ஆய்ந்து பார்த்துத்

திங்களொடு செங்கதிரும் சேர்ந்துநலம் செய்புவியில்
சிறப்புமிக வாழி! வாழி!
செகமிதனில் கல்வியறி வாற்றலுடன் ஆட்சியிலும்
சிறப்புமிக வாழி! வாழி!

காஞ்சிபுரத்தில் 1984, பிப்ரவரி, 4, 5, நாள்களில் நிகழ்ந்த செங்குந்தர் 14-வது மாநில மாநாட்டில் வாலாஜாபாத் திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் கல்வி நிலையங்களின் செயலராக இருந்து செங்குந்தர் குலச்செல்வங்களுக்கும் பிறருக்கும் பணிபுரியும் பாவலர் திரு. **நா. ப. தணிகையரசு** அவர்கள் பாடியது.

சேலம் மாவட்ட
செங்குந்த மகாஜன சங்கம்

தலைவர்:

P. இராமசாமி முதலியார், B.A., B L,

வாழ்த்து

"காஞ்சீபுரத்தில் பிப்ரவரி 4,5 தேதிகளில் நடைபெறும் செங்குந்தர் மாநில மாநாடு எல்லாம் வல்ல இறைவன் காஞ்சீபுரம் அருள்மிகு வரதராஜ பெருமாள், அருள்மிகு காஞ்சி காமாட்சி தாயார், நம் சமூக தெய்வமாம் அருள்மிகு முருகப்பெருமான் அருளாலும் இனிது நடைபெற வாழ்த்துகிறேன்"

தங்களன்புள்ள,

P. ராமசாமி முதலியார்

செங்குந்த மகாஜன சங்கத்தைத் தோற்றுவித்த



சைவசித்தாந்த விற்பன்னர், வண்ணக்களஞ்சியம்
காஞ்சி. நாகலிங்க முனிவர் அவர்கள்

அரச வீதியில் அருமைச் செங்குந்தர்கள் அகமகிழ்ந்து
வலம்வரும் அற்புதக் காட்சி.

ஊர்வலத்தில்,
ஊர்வலத் தலைவர், திரு. P. வெங்கடசுப்பிரமணியம், M.L.A.
மாநாட்டுப் பொதுச் செயலர், திரு. A. சம்பந்தம்,
சங்கத் துணைத் தலைவர் திரு. J. சுத்தானந்தம்,
ஈரோடு திரு. த. விசுவநாதம்.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்-தமிழ் மொழித்துறைத் தலைவர்
கல்வி அவை, பேரவை உறுப்பினர்
தலைவர், தமிழ்ப் பாடத் திட்டக் குழு
(பொது & தேர்ச்சி)
உறுப்பினர், தமிழ்ப் பாடத் திட்டக் குழு (முதுகலை)
தலைவர், இந்திய, பிற மொழிகள் புலம்
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை-600 005

தொலைபேசி : பணிமனை : 841172
வாழ்மனை : 420121

''தமிழகம்''
19, செயம்மாள் தெரு,
ஐயாவு நாயுடு குடியிருப்பு,
சென்னை-600 029.

வாழ்த்துரை

பழம் பெருமையும் பண்பாட்டுச் சிறப்பும் இனமாண்பும் குன்றுமல் விளங்கும் திருத்தலம் காஞ்சிபுரமாகும் செங்குந்தர் குலப்பெருமக்கள் தொன்று தொட்டு வாழும் இத்திருத்தலம், செங்குந்தர்தம் சீரிய வாழ்வோடு இணைந்த சிவபக்தியுடனும், நெசவுத் தொழிலுடனும் சிறப்புறத் துவங்குகின்றது. முருகனின் அருளை முன் வைத்து எச்செயலையும் செம்மையுறச் செய்யும் செங்குந்தர் குலப் பெருமக்களின் தலைநாடும் தலையூரும் இஃதேயாகும். குமரகோட்டத்துறை குகன், செங்குந்தர் குலத்தைத் தன் தண்ணளியால் காக்கும் அருளாளன். வீரமும் கலைத்திறன் போற்றும் பண்பும் மிக்க வேந்தர்களையும், காவியங்களையும், ஓவியங்களையும் உருவாக்கும் கவிஞர்களையும், ஓவியர்களையும், சிற்பக்கலையில் தேர்ந்த சிற்பிகளையும் கண்ட இத்திருத்தலம் இன்று மீண்டும் ஒரு முறை, மாண்ட (மாட்சிமையுடைய) புகழினை மீண்டும் பெறுவதற்கு பிப்ரவரித் திங்கள் 4,5 ஆம் நாட்களில் பதினொன்காவது மாநில மாநாட்டைக் காணுகின்றது. தமிழகத்தின் அரசியல், சமுதாய வாழ்வில் கேள்விக்குறியாக நிற்கும் நம் இனம் சில ஆக்கபூர்வமான முடிவுகளை எடுத்துச் செயல்பட வேண்டிய நேரம் இது எனவே அறிவிலும் அனுபவத்திலும் மூத்த நம் தலைவர்கள் நமக்கெல்லாம் வழிகாட்டிகளாக அமைந்து சில புதிய முடிவுகளை எடுத்து நம்மை வழிநடத்திச் செல்ல வேண்டும். அதற்கெல்லாம் கச்சாலை எம்மான் துணை நிற்க வேண்டும்.

சி. பாலசுப்பிரமணியன்

முதலியார் கல்வி நிறுவனம்

(பதிவு எண்· S. 78/1971)

121, ஈஸ்வரன்கோயில் தெரு, ஈரோடு-633001.

தலைவர்: **ஆர். எ. என். முத்துசாமி முதலியார்,**

ஈரோடு கலைக்கல்லூரி,

ஈரோடு தொழில் நுணுக்கப்பயிற்சி நிறுவனம்.

நகரங்களில் சிறந்த காஞ்சிமா நகரம், செங்குந்தர் சங்க வரலாற்றிலும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் திகழ்கின்றது.

1927 ம் ஆண்டில் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தொடங்கப் பெறுவதற்கு முன், சென்னையில் வாழ்ந்து வந்த **காஞ்சி நாகலிங்க முனிவர்** அவர்களின் முயற்சியினால். காஞ்சித் தலைவர் உயர்திரு. **ம. த. சாமிநாத முதலியார்** அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் திருக்கச்சபேசர் திருக்கோயிலில் 30—12—1912இல் முதன் முதலில் செங்குந்தர் சங்கம் அமைக்கப் பெற்றதாம் !

அன்று, சங்கம் தொடங்குவதற்கே வழிகாட்டியது காஞ்சிபுரம் !

இன்று ! பிற்படுத்தப்பட்டோர் வரலாற்றில் ஒரு நெருக்கடியான கட்டம். மத்திய அரசு அமைத்த மண்டல கமிஷன் பரிந்துரைகள் வந்துள்ள நேரம்! தமிழக அரசு அமைத்த **பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு** திரு அம்பாசங்கர் அவர்கள் தலைமையில் நாடெங்கும் மாவட்டங்கள் தோறும் ஆய்வு—பேட்டிகளை முடித்துள்ள நேரம் !

ஒவ்வொரு குலத்தவரும் — இனத்தவரும் — தனித்தனி மாநாடுகள் நடத்தித் தங்களுக்குப் பின்னால் உள்ள மக்கள் தொகைக் கணக்கைக் காட்டிச் சலுகைகளையும் உதவிகளையும் கேட்டுப்பெறும் செய்தி நாளிதழ்களில் வந்து கொண்டிருக்கின்றது !

அறுபது லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட நம் செங்குந்தர் இனத்திற்கு நல்வாழ்வு கிடைத்திட காஞ்சிபுரத்தில் நடைபெறும் 14-வது செங்குந்தர் மாநில மாநாடு விடிவெள்ளியாய் விளங்கி, வழி காட்டிட வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

முதலியார் கல்வி நிறுவனம் நடத்திவரும் ஈரோடு கலைக் கல்லூரி, ஈரோடு தொழில் நுணுக்கப் பயிற்சி நிறுவனம் ஆகிய வற்றின் சார்பிலும் மாநாடு வெற்றிபெற நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

ஆர். எ. என். முத்துசாமி முதலியார்

Capt. V.S. சுப்பாராமன் M.A.
இணைக்குநர், நாட்டு நலப்பணித் திட்டம்,
பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம்.

சென்னை-6
12-1-'84

வாழ்த்துப்பா

தொண்டை நன்னாட்டின் தொல்பதியாம் காஞ்சிதனில்
பண்டைச் சிறப்புடைய பகர்செங்குந் தர்மரபு
கண்டெடுக்கும் மாநாடு கனிந்து சிறப்புறவே
தண்டமிழால் வாழ்த்துவன்யான் தமிழ்மரபு தழைத்திடவே!

இங்ஙனம்,

V. S. சுப்பாராமன்

செ. கு. குமாரசாமி
பதிவாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்

வாழ்த்துரை

பாரத நாட்டுப் புண்ணிய நகரங்களுள் ஒன்றுவதும், திருநாவுக்கரசர் பெருமானால் 'கல்வியிற் கரையிலாத காஞ்சி மாநகர்' என்று போற்றப் பெற்றதுமான காஞ்சிபுரத்தில் செங்குந்தர் குலப் பெருமக்களின் 14வது மாநில மாநாடு 1984 பிப்ரவரித் திங்கள்' 4, 5 ஆகிய நாட்களில் நடைபெறவிருப்பது மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றது.

செங்குந்தர் குலப் பெருமக்கள் காலத்தோடு ஒட்டி வளர வேண்டும். இன்று அறிவியல் துறையில் உலகம் விரைந்த முன்னேற்றத்தைக் கண்டு வருகிறது. நம் இனத்து இளைஞர்கள் நாளும் வளர்ந்துவரும் அற்வியற் செல்வத்தினைக் கசடறக் கற்று உலகின் முன்னணியில் நிற்க முயல வேண்டும்.

"உழப்பின் வாரா உறுதிகள் உளவோ" என்பது ஆன்றோர் கண்ட முதுமொழி. இளைஞர்கள் உறுதியாக உழைக்க வேண்டும்; செயலாண்மை மிக்கவர்களாகத் திகழ வேண்டும்; உறுதி கொண்ட நெஞ்சுடன் எடுத்த செயலுக்கு எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் அவற்றையெல்லாம் முறியடித்துவிட்டு முன்னேறுவோம் என்ற நம்பிக்கையினை இளைஞர்கள் கொள்ள வேண்டும். நாளைய உலகம் இத்தகைய நம்பிக்கை கொண்ட வருங்காலச் சந்ததியினரிடமே உள்ளது. எனவே உண்மை, உழைப்பு இவற்றை இளைஞர் மேற்கொள்வாராக.

நம் இனத்துப் பெரியவர்கள் இளைஞர் வளர்ச்சிக்கு வித்திடுபவர்களாக விளங்க வேண்டும்; அவர்களுக்கு நல்வழி காட்டி வளர்க்க வேண்டும். அனுபவம் மிக்க அத்தகைய பெரியோரின் அரவணைப்பு, நம் இனத்திற்கு நல்லதோர் எதிர் காலத்தை வழங்கும்.

எனவே அரசியல், சமுதாயம், கல்வி முதலிய பல துறை களிலும் நாம் முன்னேற்றங் காணுவதற்கு நம்மை ஆயத்தப் படுத்திக் கொள்ளும் வகையில் காஞ்சிபுரத்தில் நடைபெற இருக்கும் 14வது மாநில மாநாடு, நமக்கு வழிவகைகளைத் தோற்றுவிப்பதாக. கச்சி ஏகம்பர் திருவருளால் மாநாடு வெற்றி பெறுவதாக.

ச. கு. பா. பழநிவேலு,
பொதுச்செயலர்,
தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்.

கூறைநாடு,
மயிலாடுதுறை
17—12—1983

அன்புடையீர், வணக்கம்.

செங்குந்தர் பெருமக்களின் எதிர்கால வளர்ச்சித் திட்டங்களை திட்டமிட 14-வது மாநாடும், அதன் நினைவாக மலர் ஒன்று மலர இருப்பதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

தொன்றுதொட்டு பழமையானதும், நம் செங்குந்தர் குலப் பேரரசின் 72 கிளைநாடுகளுக்கும் அதன் தொகுப்பான 1. சிவபுரம், 2. தொந்திபுரம், 3. விரிஞ்சிபுரம், 4. சோளிங்கபுரம் ஆகிய நான்கு திசைநாடுகளுக்கும் தலைமைப் பீடமாகவும், மகாநாடு என்ற சிறப்புப் பெயர் பெற்றதுமான செங்குந்தர் குலப் பேரரசின் தலைநகராகியதும், நமது குல சக்தி தெய்வமாம் அன்னை காமாட்சி அருள் பாலித்து வருவதுமான காஞ்சிபுரத்தில் மிகவும் வரலாற்றுச் சிறப்புடைய நமது தென்னிந்தியசெங்குந்தப்பெருமக்களின் மாநில14-வது சமூக,இளைஞர், கைத்தறி, வர்த்தகர் மாநாடுகள் 52 ஆண்டுகள் இடைவெளிக்குப்பின் இரண்டாவது சுற்றில் நடைபெறும் இப்பெருவிழாவில் செங்குந்தர் சமுதாயத்தின் பண்டைச் சிறப்புக்களையும், மாநில சங்கத்தின் கடந்த 57 ஆண்டுகளின் வளர்ச்சி பற்றிய அறிஞர்களின் கருத்துக்களையும், செங்குந்தர்களின் வரலாற்றுச் சிறப்புக் களஞ்சியமாக அமையவும், மாநாடுகள் சிறப்புற நடைபெறவும் நம் சமூக முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்ட நம்குல பெருமக்களின் நினைவைப் போற்றி வணங்கவும் இனி செய்யவேண்டிய நமது கடமைகளை இம்மாநாட்டில் மனநிறைவு செய்து செயலாற்றத் துணியவும், இளைஞர்களையும், மகளிரையும், நாகரீகத்திற்கு அடிப்படையான துணியை அறுவை செய்து கொடுக்கும் நெசவாளர் பெருமக்களையும், நம்குல வணிகப் பெருமக்களையும், புத்துணர்ச்சி பெற்று ஆக்கவழியில் ஈடுபடச் செய்யும் இம்மாநாடும், அன்று மலரும் என்றும் வாடாத இம்மலரும் வழிவகுக்க எல்லாம்வல்ல அருள்மிகு வள்ளி, தெய்வயானை துணையுடன் அருள்பாலிக்கும் செந்திலாண்டவன் திருவடிகளையும், நம்குல சக்தி அன்னை காமாட்சி அருளையும் போற்றி வாழ்த்துகிறேன்.

நல் வாழ்த்து

அன்புள்ள
ச. கு. பா. பழநிவேலு

செயற்குழு உறுப்பினர்கள் பட்டியல்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
சென்னை-1

தொகுதி—1

சென்னை மாவட்டம்

1. திரு. பி. எஸ். பாலசுப்பிரமணியன்,
10, டி. எஸ். வி. கோயில் தெரு,
மயிலை, சென்னை-600 004

2. திரு. சரவண பழநிவேலு,
9, 11 குறுக்குத் தெரு,
119. ராகவரெட்டியார் காலனி,
சென்னை-600 095

3. திரு தி ரா. செல்வராசன், M.A., M.Lit,
6 பேராசிரியர் காலனி,
கிழக்கு தாம்பரம், சென்னை-600 059

4. திரு. டி நாகப்பன்,
15. பெரிய தெரு, குன்றத்தூர்,
சென்னை-600 069

5. திரு. கே. பஞ்சாட்சரம் M.Sc.,
28. கற்பக விநாயகர் கோயில் தெரு,
ஆலந்தூர், சென்னை-600 016

6. திரு மி. ச. நடேசன்,
74, மேற்கு ஜோன்ஸ் ரோடு,
சைதாப்பேட்டை, சென்னை-600 015

தொகுதி—1

செங்கற்பட்டு மாவட்டம்

(நியமன உறுப்பினர்கள்)

1. திரு. P. வெங்கடசுப்ரமணியன்,
M.A.B.L M.L.A.,
எண்ணெய்க்காரத் தெரு,
காஞ்சிபுரம் 631 501

2. திரு ஏ சம்பந்தன்,
48 டி, மேட்டுத் தெரு,
காஞ்சிபுரம்-631 501

3. திரு எம். சண்முகம் M.A.B.T.,
தலைமை ஆசிரியர்,
555 காந்தி ரோடு, காஞ்சிபுரம்-1

4. திரு ஜி. எஸ் துரைசாமி,
முன்னாள் அறங்காவலர் குழுத்தலைவர்,
அம்மையார்குப்பம்,
திருத்தணி வட்டம்

5. திரு. எம். எம் தணிகைமலை
சேர்மன் சாமிநாத முதலியார் தெரு
காஞ்சிபுரம்

6. திரு கே. ஏ குருபாதம்,
நடுத் தெரு, அய்யம்பேட்டை,
காஞ்சிபுரம்

தொகுதி—1

வட ஆற்காடு மாவட்டம்

1. திரு கே. ஏ. எஸ் பத்மநாபன்
தலைவர், வ ஆ மாவட்ட செ ம சங்கம்,
5, சேர்மன் பெரியவர் ஷண்முகனார்
தெரு, திருப்பத்தூர்-635 601

2. திரு.எஸ் ஆர். நடராஜன் M.A. M.Com.
பொதுச்செயலர், வ. ஆ. மாவட்ட
செ.ம சங்கம், 17 பில்டெர்பெட்ரோடு
வேலூர்-632 001

3. திரு புலவர் சி. சோமசுந்தரம் M.A.BT.,
அப்பு சுப்பய்யர் தெரு,
பிச்சனூர், குடியேற்றம்-632 602

4. திரு. புலவர் கோ. இளையபெருமாள்
25 ஏ, தருமராஜா கோயில் தெரு,
சைதாப்பேட்டை, ஆரணி-632 301

5. திரு. கே ஜி இராமசாமி
முன்னாள் பஞ்சாயத்து தலைவர்,
கொரட்டி, திருப்பத்தூர்-635 611

6. திரு ஏ பீதாம்பரம்
முன்னாள் பஞ்சாயத்து தலைவர்,
145 நடுத்தெரு,
சம்பத்துராயன் பேட்டை,
அரக்கோணம்

தொகுதி—2

தென்னார்க்காடு மாவட்டம்

1. ஆர் சோமசுந்தரம் M.A., B.L.,
தலைவர்,
தெ. ஆ. மாவட்ட செ. ம. சங்கம்,
விருத்தாசலம்-606 001

2 திரு. மா. பொன்னம்பலம்
பொதுச்செயலர்,
தெ. ஆ. மாவட்ட செ. ம. சங்கம்,
9 மெயின் ரோடு, புவனகிரி

3 திரு டாக்டர் கே பழநிவேல்
வாணி பார்மஸி, 147 மேல ரத வீதி,
சிதம்பரம்

4 திரு. ஏ. பி. வைத்தியலிங்கம்
ஞானம்பாள் இல்லம்,
திருவள்ளுவர் திடல், விழாப்பள்ளம்,
குறிஞ்சிப்பாடி

5. திரு. ப. கணபதி
சி 21, சிதம்பரம் சாலை, 8 வது வட்டம்,
நெய்வேலி-1

6 திரு. ஆர் பழநி M.A. B.Lit.,
14 தெற்கு வீதி
காட்டுமன்னார்கோயில்

தொகுதி—2

திருச்சி மாவட்டம்

1. திரு. எம் ஆர். பழனியாண்டி
தலைவர், திருச்சி மாவட்ட
செ. ம. சங்கம், உடையார்பாளையம்

2. திரு. டாக்டர் மு. கருணாநிதி M.B.B.S.,
டி. சி எம்., எப். சி. ஐ. பி.,
பொதுச்செயலர்,
திருச்சி மாவட்ட செ ம. சங்கம்,
ஜெயங்கொண்டம்-621 802

3. திரு. டி.வி. முருகேசன்
இராதாபுரம்,
எரவாங்குடி-621 803

4. திரு. து. பழனியாண்டி
செங்குந்தபுரம்,
ஜெயங்கொண்டம்-621 802

5. திரு மு. சின்னு
மேட்டுப்பாளையம், முசிறி வட்டம்

6. திரு நா. சு. பொன்னுசாமி
கீழத்தெரு, விளந்தை,
ஆண்டிமடம்-621 801

தொகுதி—2

தஞ்சை மாவட்டம்

1. திரு. ஆர். என். சந்தானராஜ
கோபாலன்
தலைவர், தஞ்சை ஜில்லா செ.ம. கல்விச் சங்கம், 9 10 அக்கரை நடராஜ முதலியார் தெரு, மன்னார்குடி-614001

2. ச. கு. பா. பழநிவேலு
பொதுச்செயலர், தஞ்சை ஜில்லா செ .ம. கல்விச் சங்கம்,
41 தனியூர் வாணியத் தெரு,
கூறைநாடு, மயிலாடுதுறை-609 002

3. திரு. இராம. சம்பந்தமூர்த்தி
குமரன் கீழ வீதி, மஞ்சக்கொல்லை,
அந்தணப்பேட்டை S.RY-611 106

4. திரு. தெ. சம்பந்தம்
5 புழுகாப்பேட்டைத்தெரு,
சீர்காழி-609 110

5. திரு. ஆர். திருநாவுக்கரசு
17 மேல செங்குந்தர் தெரு,
வங்காரம்பேட்டை,
பாபநாசம்-614 205

6 திரு. தெ சேதுராமன்
லட்சுமி விலாஸ், மடப்புரம்,
திருவாரூர்-610 002

தொகுதி—3

மதுரை மாவட்டம்

1. திரு சி. காந்திதாஸ், M A , B.L.,
தலைவர், மதுரை மாவட்ட செ. ம. சங்கம், பிளாட் நெ 652, கே.கே. நகர்
மதுரை-625 020

2 திரு. எம். மாணிக்கம்
முன்னாள் மாநகராட்சி உறுப்பினர்,
செயலர், மதுரை மாவட்ட செ. ம. சங்கம், 19, சுயராஜ்யபுரம் கிழக்கு மெயின்ரோடு, செல்லூர்
மதுரை 625002

3. திரு. கே. அழகு
9-ஏ ஆசாரி சந்து, வடக்கு ரத வீதி,
திருப்பரங்குன்றம், மதுரை 625002

4. திரு எஸ். சாலை, B.A.,
7, சாவடித் தெரு, கோரிப்பாளையம்,
மதுரை-625002

5. திரு. ஏ. நடராஜன்,
ஜவுளிவியாபாரம் நீலமலைக்கோட்டை
(வழி) ஒட்டன்சத்திரம்,
திண்டுக்கல் தாலுக்கா-624 629

6. திரு. பி. பி. சுப்ரமணியன்
முன்னாள் பஞ்சாயத்து தலைவர்,
பூம்பாறை, கொடைக்கானல் 62410[illegible]

தொகுதி—3

திருநெல்வேலி மாவட்டம்

1. திரு எஸ். வி. ஆர். எம். நடராசன்
தலைவர், திருநெல்வேலி மாவட்ட செ. சங்கம், ஜவுளி வியாபாரம்,
100, வடக்கு வீதி, அம்பாசமுத்திரம்

2. திரு. சி. அருணாசலம், B.A.,L.T,
பொதுச்செயலர், திருநெல்வேலி மாவட்ட செ. சங்கம், முதல்வர்,
ஏ. வி. ஆர் எம். வி. மெட்ரிகுலேசன் பள்ளி, அம்பாசமுத்திரம்

3. திரு. ஏ. வி. ஆர். எம். வி. சங்கர நாராயணன், மானேஜிங் பார்ட்னர், கோமதி மில்ஸ், வீரவநல்லூர், அம்பை வட்டம்.

4. திரு. ஏ. பழனிச்சாமி, B.Com., முன்னாள் நகர்மன்றத் தலைவர், சங்கரன்கோயில்

5. திரு. மாரி ராமச்சந்திரன் ஆனந்த முதலியார் (பர்ம்), ஜவுளி வியாபாரம், ஏரல், ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா

6. திரு. பி. கே. வி. குத்தாலிங்கம் தெற்கு ஒப்பனைத் தெரு, தென்காசி

தொகுதி—3

இராமநாதபுரம் மாவட்டம்

1. திரு. ஐ. தனசீலன். B A , 4-61 லஜபதிராய் தெரு, பரமக்குடி-623 707

2. திரு மு. முனுசாமி, M.A., செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், மண்டலமாணிக்கம்-623605

3. திரு. V. சுப்ரமணியன் வெள்ளைக்கோட்டை, அருப்புக்கோட்டை

4. S. முத்துமாரி, மண்டலமாணிக்கம்

5 திரு. B. பிரபாகரன், மண்டல மாணிக்கம்

6 திரு. இரவீந்திரன், பணிதி வயல்

தொகுதி—4

சேலம் மாவட்டம்

1. திரு. ஏ சங்கர முதலியார், B A ,B.L., 15 காந்தி சாலை, சேலம் 636 007

2. திரு பி. ராமசாமி, B.A.,B.L., 79 முதல் அக்ரஹாரம், சேலம்-636 001

3. திரு. ஏ. துரைசாமி B.A.,B L., சொர்ணம்பிகை தெரு, சேலம்-636 001

4. திரு. எஸ். பி. சம்பந்தம் மேலாண்மை இயக்குனர், சம்பந்தம் மில்ஸ், மாரிமுத்து முதலியார் தெரு, அம்மாப்பேட்டை, சேலம்-3

5. திரு. கே. ஆர். மாணிக்கம் செவ்வாய்பேட்டை, சேலம்-636 002

6. திரு. கே. டி. சம்பந்தம் 58 தங்கசெங்கோட முதலி தெரு, சேலம்

தொகுதி—4

தருமபுரி மாவட்டம்

1. திரு. த. குட்டியப்பன், தலைவர் தருமபுரி மாவட்ட செங். பேரவை, குமாரசாமி பேட்டை, தருமபுரி-3

2. திரு. எஸ். வி. கோபால், துணைத்தலைவர், அண்ணசாகரம், தருமபுரி-636 704

3. திரு எம். எஸ். அய்யம்பெருமாள்
பாரதிபுரம், தருமபுரி-636 705

4. திரு. கா. சிவப்பிரகாசம்
இணைச்செயலர்,
குருபரஹள்ளி-635 302,
அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்

5. திரு. பி முனுசாமி
பாப்பாரப்பட்டி அஞ்சல்,
தருமபுரி மாவட்டம்

6. திரு. வடிவேல் இருளப்பட்டி,
எ' பள்ளிப்பட்டி அஞ்சல்,
அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்

தொகுதி—4

பெரியார் மாவட்டம்

1. திரு. M P நாச்சிமுத்து. B.A.,B L.,
H-52 பெரியார் நகர்,
ஈரோடு-638 001

2. திரு. J. சுத்தானந்தன்
75 திருநகர் காலனி, ஈரோடு-638 003

3. திரு. R. A. N. முத்துசாமிமுதலியார்
ஈசுவரன் கோயில் தெரு, ஈரோடு-1

4. திரு. T. R. சுவாமிநாத முதலியார்
திருமுருகன் லாரி சர்வீஸ்,
பவானி ரோடு, பெருந்துறை 638 502

5. திரு K. P. ராமசாமி
தலைவர், தாண்டெக்ஸ்,
தாண்டாம்பாளையம் 638 118

6. திரு உமா பழனியப்பன்
2 ஆசாத் தெரு,
புஞ்சை புளியம்பட்டி 638 459

தலைவர் நியமன உறுப்பினர்கள்

1. திரு. கே ஏ.பழனியப்பன்
புஞ்சைப் புளியம்பட்டி,
பெரியார் மாவட்டம்

2. திரு. க. திருஞானசம்பந்தம்,
செம்பொனார் கோயில்,
தஞ்சை மாவட்டம்

3. திரு. எம். எஸ் ரெங்கையா, B.A.,
6 மெக்கினிகால்ஸ் ரோடு,
சேத்துப்பட்டு சென்னை

4. திரு. டி. எஸ். சுப்ரமணியன்
வேலவர் பளையகாட் கம்பெனி,
கச்சாலீஸ்வரர் அக்ரஹாரம்,
சென்னை-1

5 திரு. த. விஸ்வநாதன்
செங்குந்தர் வீதி ஈரோடு

6 திரு. பி. கே. சுவாமிநாதன்
62-வது குறுக்குத் தெரு, சேத் நகர்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை-28.

7. திருமதி முத்துலட்சுமி இராமலிங்கம்
நேரு கடை வீதி, ஆக்கூர்,
தரங்கம்பாடி வட்டம்,
தஞ்சை மாவட்டம்

8. திருமதி செல்வம்சுந்தரம்
ஈரோடு, பெரியார் மாவட்டம்

9. திருமதி மங்கையர்க்கரசி
நடனசிகாமணி
ராஜாஜி நகர், அரியலூர்,
திருச்சி மாவட்டம்

10. திருமதி செல்வி சபாநாயகம்,
M.SC., B.Ed.,
23 திருப்பாட்டன் தெரு,
சிதம்பரம், தென்னாற்காடு மாவட்டம்

செங்குந்தர் குலச்செம்மல்
கைத்தறிக் காவலர்



பத்மஸ்ரீ M. P. நாச்சிமுத்து முதலியார்,
தலைவர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

திரு. தி. ரா. செல்வராஜன், M A . M. Lit.
செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.



திரு. D. சேதுராமன்
செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம், சென்னை.

சமூக மாநாட்டு வரவேற்புரை நிகழ்த்திய



திரு. ம. மு. சரவண முதலியார், B.A., L.T.,
(ஓய்வு பெற்ற மாவட்டக் கல்வி அலுவலர்)
மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர்.

அரிமா. திரு. A. சம்பந்தம்
பொதுச் செயலாளர்,
14வது மாநில மாநாடு, காஞ்சிபுரம்.

திரு. A. K. G. சம்பந்தம்
பொருளாளர்,
14வது மாநில மாநாடு, காஞ்சிபுரம்.

நாடாளு மன்ற சட்ட மன்ற உறுப்பினர் பெருமகனுர்களே !

செந்தமிழ் நாட்டிலிருந்தும். நாட்டின் பலபாகங்களிலிருந்தும், தலைநகரைத் தேடி வருகை புரிந்திருக்கும் செங்குந்தர் குலப் பெருமக்களே! எல்லோருக்கும் எனது இதயம் கனிந்த நல்வரவேற்பை முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வரவேற்பு :-

இன்றைக்கு 54 ஆண்டுகளுக்கு முன்பு 1930ஆம் ஆண்டில் ஈரோட்டில் நம்மாநிலத்தின் முதல் மாநாடு மிகச் சிறப்பாக நடந்ததும், அடுத்த ஆண்டில் இங்கு (காஞ்சிபுரத்தில்) இரண்டாவது மாநாடு நடந்ததும் என் நினைவுக்கு வருகிறது. காஞ்சிபுரத்தில் முதல்முறையாக நடந்த மாநாட்டில் தொண்டர் படையில் ஒரு சிறு தொண்டனுகப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இரண்டாம் முறையாக இப்பொழுதுநடைபெறும் இப்பெரிய மாநாட்டில் உங்கள் எல்லோருடைய ஆசியோடும் வரவேற்புக் குழுவின் தலைவனுகப் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். 50 ஆண்டுகளுக்குப் பின் இப்பதவி உயர்வைப் பெற்றிருப்பதை எண்ணி உள்ளவாறு மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்த மாநாட்டில் காஞ்கிபுரம் நகராட்சியின் தலைவராக 20 ஆண்டுகள் பணியாற்றிய என் பெரிய தந்தையார் உயர் திரு. ம. த. சாமிநாத முதலியார் அவர்கள் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்தார். அப்பெருமகனுர் குடும்பத்தில் வந்ததனுலும், நம் குலத்துப் பெருமக்கள் விரும்பியதாலும், எனது அருமை அம்மான் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் துணைத்தலைவர் திரு. C நடராஜ முதலியார் பி.எ., பி.எல்., அவர்களைப் போன்ற பெருமக்களின் ஆசியினுலும், இன்று இம்மாநாட்டில் உங்கள் அனைவரையும் வரவேற்கும் பேறு பெற்றிருக்கிறேன். இவ்வாய்ப்பை அருள்மிகு கச்சபேசப் பெருமான் திருவருளால் என் ஆயுளில் யான் பெற்றுள்ள பேறுகள் எல்லாவற்றுள்ளும் தலைமையானதாகக் கொள்ளுகிறேன். இதற்குக் காரணர்களாக உள்ள அனைவருக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

காஞ்சியின் பெருமை

காஞ்சிபுரம் பழம் பெருமையுடைய நகரமாகும். 'நகரேஷு காஞ்சி' எனவும், முத்தி தரும் நகரேழில் முதன்மையது, கச்சி' எனவும் வழங்குவதாலும், பழைய தமிழ் இலக்கியங்கள் காஞ்சியைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் 'கச்சி மூதூர்' என்றே குறிப்பிடுவதாலும் யாப்பருங்கலக்காரிகையிலுள்ள ஒரு பாடல்.

'கடலிலுண்டாவன எல்லாம் காஞ்சியில் உண்டு. ஆனுல் காஞ்சியில் உண்டாவன எல்லாம் கடலில் கிடைக்கா'

எனப் புகழ்வதாலும் இது நன்கு விளங்கும். நிலவுலகில் புகழுடன் விளங்கும் சக்திபீடங்களில் இருந்த (உட்கார்ந்திருக்கும்) கோலத்தில் ஆட்சிசெய்யும் காமாட்சியம்மையார் பீடமே சிறந்ததென்பார்கள். செந்தமிழ் மொழியில் சைவசித்தாந்தத்தை எளிய முறையில் பரப்பும் சிறந்த புராணங்களாகிய பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம் ஆகிய மூன்றில், கந்தபுராணம் அருள்மிகு கச்சியப்ப சிவாசாரியரால் இங்குதான் அருளப் பெற்றது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பெருமக்களாலும் பாடல் பெற்ற திருத்தலமாகவும், சைவமடங்களில் மிகப் பழமையான சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரியர் திருமடமும், ஸ்ரீசங்கரர் திருமடமும், இராமகிருஷ்ணர் திருமடமும் சமயப் பணிபுரியும் புண்ணிய நகரமாகவும் இது விளங்குகிறது. இன்னும்

பல பெருமைகளையுடைய இந்நகரம் நம் குலத்தினருக்கும் தலைநகரமாக இருக்கிறது இங்கு நடைபெறும் மாநாட்டிற்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் எழுந்தருளியுள்ள பெருமக்களை வரவேற்கும் பேறு பெற்று மகிழ்கின்றேன்.

குலப்பெருமை

இந்நிலைமையில் நம் குலத்தின் பெருமையையும் நாம் சிறிது நினைவு கூறலாம். புராண வழியாகப் பார்க்குமிடத்துச் செங்குந்த குலத்தவர் அத்தனை பேரும் சிவகோத்திரத்தைச் சேர்ந்தவர்களெனத் திருக்கோயில்களிற் குறிப்பிடப் பெறுவதே பெருமை தருகிறது. திருமுருகப்பெருமானுக்கு இளையவர்களாகத் தோன்றிய நவவீரர் வழி வந்தவர்களே செங்குந்தர்கள்; அவர்கள் வீரர்களாகவும் மன்னர்களாகவும் நாட்டின் பல பகுதிகளில் திகழ்ந்தார்கள் என்பதும் சிறப்பைத் தருகின்றது. அன்று மாநாடு, திசைநாடு, கிளைநாடு என விளங்கியவை. இன்று தலைச்சங்கமெனவும் மாவட்டச் சங்கங்கள் எனவும், கிளைச் சங்கங்கள் எனவும் அமைந்து செயலாற்றுவதைக் காண்கின்றோம். இவைகளால் நாம் பழைய பெருமையை அடைய வேண்டியவர்களாக இருக்கிறோம். நல்ல பண்பாட்டிலும், நாகரிகத்திலும் நாம் சிறந்து விளங்கியமை கந்தபுராணம், ஈட்டியெழுபது முதலிய நூல்களால் அறியப்படுகிறது.

கல்வி வளர்ச்சி

இனி நம் குலத்தாரின் இன்றைய நிலைமையைப் பார்ப்போம். எந்த ஒரு சமூகமும் முன்னேற வேண்டுமானல் அச் சமூகத்தினரிடம் கல்வி வளரவேண்டும். பொருளாதாரம் பெருக வேண்டும். நாகரிகம் சிறக்கவேண்டும். இன்று நடைபெறும் சமூக மாநாடும், மாதர் மாநாடும், கைத்தறி மாநாடும், இளைஞர் மாநாடும் இவற்றையெல்லாம் ஆராய்ந்து, நம் குலத்தாரின் வருங்கால முன்னேற்றத்திற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்யும் என எண்ணுகிறேன். அதற்கு ஆவன செய்யுமாறு அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இருபதாம் நூற்ருண்டின் முதலில் நம் சமூகத்தினரின் கல்வி நிலை எவ்வாறிருந்தது என்பதையும், இப்பொழுது எவ்வாறுள்ளது என்பதையும் ஆராய்வோம். அப்பொழுது காஞ்சிபுரத்தில் இரண்டு மூன்று பேர்களே நம் குலத்தில் பட்டம் பெற்றவர்கள் இருந்தனர். ஏறக்குறைய ஒரு நூற்ருண்டு முடிகிறது. இப்பொழுது எண்ணிப் பார்த்தால் 100 பட்டதாரிகளும் இலர் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியவர்களா யிருக்கிறோம் எனவே தறித்தொழிலையே நம்பியிருக்கும் நம்மவர்களின் முன்னேற்றத்திற்குரிய வழிகளும் மிகக் குறைவாகவே உள்ளன.

எல்லாச் சமுகங்களைச் சேர்ந்தவர்களும் கல்வியில் உயரவேண்டும் எனக் கருதிய மாட்சிமிக்க நம் தமிழக அரசு கல்வியில் உண்மையாகவே பிற்பட்டிருக்கும் சமூகங்கள் எவை என ஆராயத் தொடங்கியது. அதற்காக உயர்திரு. அம்பாசங்கர், ஐ.ஏ.எஸ். அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவை அமைத்தது நம் குலத்தைச் சேர்ந்த பல கிளைச் சங்கங்களும், மாவட்டச் சங்கங்களும், தலைச்சங்கமும் அக்குழுவினரைச் சந்தித்து, கல்வியில் போதுமான அளவு முன்னேற்றம் பெருத நம் குலத்தைக் கல்வியில் மிகவும் பிற்பட்டவர்கள் என்ற பகுப்பில் சேர்க்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டன. தமிழகஅரசு நன்கு பரிசீலித்து, நம் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து நம் சமூகத்தைக் கல்வியில் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துத் தருமாறு மாநாட்டின் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொருளாதார முன்னேற்றம்

பொருளாதாரத்திலும் நாம் முன்னேற வேண்டும். நெசவுத் தொழில் உயர்ந்தது

என்றாலும் அத்தொழிலில் வருவாய் மிகுதியாகத் தரத்தக்கவைகளையே நம்மவர் மேற்கொள்ள வேண்டும். தறிக்குழி நமக்குக் கீழ்மையை உண்டாக்காதவாறு மாற்றுத் தொழில்களிலும் நம்இளைஞர்கள் பயிலவேண்டும். நம் இளைஞர்கள் கல்வி கற்று நல்ல மதிப்பெண்கள் பெறுதற்கும், அதனால் வருவாய் தரக்கூடிய தொழிற் பயிற்சிகள் பெறுதற்கும், பிற்காலத்தில் நல்ல பதவிகளில் சேர்ந்து பொருளீட்டுதற்கும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

நம் குலத்தவர் செய்யும் திருமணம் முதலிய சடங்குகளை அறிவாகச் செய்யவும், வீண் ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கவும் பழகிக்கொள்ள நம் உள்ளத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். செல்வந்தர்கள் இவ்வழிகளில் பிறர்க்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்பது என் ஆழ்ந்தகருத்தாகும். நம்மவர் வதியும் ஒவ்வொரு ஊரிலும் பொதுவான திருமண மண்டபங்கள் அமைப்பதும், அவற்றில் அனைவரும் திருமணங்களைச் செய்து கொள்வதும் நம் பொருளாதார வளர்ச்சிக்கும், மற்ற வசதிகளின் வளர்ச்சிக்கும் துணையாயிருக்கும், கோயில்களில் திருமணம் செய்வதைச் சிலர் குறைவானதாக எண்ணுகிறார்கள். அவ்வாறு எண்ணாமல் பொது இடங்களில் வசதியாகத் திருமணங்களைச் செய்வதன் நன்மைகளை நம்மவர்கள் உணரவேண்டும்.

நம்மவர்கள் செழுமையாகவும் சிறப்பாகவும் வசித்து வரும் திருப்பூர் முதலிய இடங்களில், ஒரே நாளில் பல திருமணங்களைச் செங்குந்தர் சங்கங்களின் முயற்சியால் செய்து அதனால் பல குடும்பங்கள் நன்மையடைவதை நான் உங்களுக்கு நினைவூட்டி மகிழ்கிறேன். அவர்களை மனமாரப் போற்றுகிறேன். பிறரும் அவ்வாறு கூட்டுத் திருமணங்களைச் செய்து நம்மவர்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க இம்மாநாடு வழி செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசியலில் உயர்வு

இனி நம் நாட்டின் அரசியலை எண்ணிப் பார்க்கும்போது நாம் இன்னும் பெரும் அளவிற்கு முன்னேற்றம் அடைய வேண்டியவர்களாயிருக்கிறோம். பெரும் மக்கள் தொகையினராக இருக்கும் நம் குலத்தாரில் ஊராட்சி மன்றங்களிலும் சட்ட மன்றங்களிலும் உறுப்பினர்களாக இருந்து பணிபுரிபவர்களின் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால் மிகவும் குறைவாகவே இருப்பது மிக மிக வேதனையைத் தருகின்றது. இதற்குத் திறமையில்லாமையை விட, நம்மில் ஒற்றுமையில்லாமையும், சேர்ந்து ஆராய்ந்து பணியாற்றும் பண்பு இல்லாமையுமே காரணங்களாக இருக்கின்றன. மாநிலச் சட்டமன்றங்களிலும், பாரத நாட்டுப் பாராளுமன்றத்திலும் நம்மவர் மிகுதியாக உறுப்பினராவதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றி அதனால் நம் குலத்தை உயரச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒவ்வொருவரும் நம் குலத்தவரின் முன்னேற்றத்திற்காக இயன்ற அளவு ஏதேனும் பணிபுரிய உறுதி செய்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வணக்கம்

பல்வேறிடங்களிலிருந்து மாநாட்டிற்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் மீண்டும் வரவேற்கின்றேன். இரண்டு நாள்கள் இங்குத் தங்கியிருந்து மாநாட்டை வெற்றியடையச் செய்யத் தங்களுக்கு இடம், உணவு முதலிய வசதிகள் செய்திருக்கிறோம். அவற்றில் ஏதேனும் குறைகள் இருப்பினும், அவற்றைப் பொருட்படுத்தாது, 'நமது மாநாடு' என்ற ஒற்றுமை உணர்வோடு யாவற்றையும் செம்மையாக நடத்தத் துணைபுரியக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தம்மை நாடிச் சென்ற போதெல்லாம்

தேவையான அநுபவம் நிறைந்த தம் அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் கூறி வந்த உயர் நீதிமன்ற நடுவர் மாண்புமிகு T N. சிங்காரவேலர், அவர்களுக்கும் நமது ஒப்பற்ற தலைவர் எம். பி. என். அவர்களுக்கும். நமது சட்டமன்ற உறுப்பினர் திரு. P. வெங்கடசுப்பிரமணியம் அவர்களுக்கும், மாநாடு வெற்றியோடு நடைபெறுதற்குப் பொருளுதவி செய்த பெருமக்கட்கும், மலருக்குக் கட்டுரைகளும் விளம்பரங்களும் கொடுத்துச் சிறப்பாகத் துணைபுரிந்தவர்களுக்கும், என்னோடு மூன்று மாதங்களுக்கு மேலாகப் பல வகைகளிலும் உதவியாக இருந்த பெருமக்களுக்கும், தங்கள் வியாபாரம் முதலியவற்றையும் ஒதுக்கிவைத்து எனக்கு இரவு பகலாகத் துணையாயிருந்த இருமாணிக்கங்கள் பொதுச் செயலர் அரிமா திரு ஏ. சம்பந்தம் அவர்களுக்கும், பொருளாளர் திரு ஏ. கே. ஜி. சம்பந்தம் அவர்களுக்கும் திரு. எம். சண்முகம், எம்.ஏ., பி.டி.. திரு சரவணபழனிவேலு, திரு. எம். எம். தணிகைமலை ஆகிய செயலர் மூவருக்கும் எங்களுடனேயே தொண்டாற்றிவரும் திரு. T. R. செல்வராஜன் அவர்களுக்கும் ஏனைய தொண்டர்களுக்கும், சிறப்பாகத் தலைச் சங்கத்தாருக்கும் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். முழுமுதற் கடவுளாம் ஆறுமுகப்பெருமானின் திருவடி மலர்களை மனம் மொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வணங்குகிறேன்.

ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்

கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்

ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க

மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீர் அடியா ரெல்லாம்!

செங்குந்தம்

மலர்மகளும் வாணியும் மடிமீத மைத்திடவும்
மலைமகளின் அருகணைந்து
மாசற்ற மொழிபேசும் மயிலோன் கரத்துளது
மாவீர செங்குந்தமே!
மலர்மீது உறைஅயனைப் பிரணவப் பொருள்வினவ
மால்மருகனுக்கு முன்னர்
மயங்கிமருள் கொண்டவனை மாச்சிறையி லிடுவித்து
மருட்டியதும் செங்குந்தமே!
உலகுபடை பிரமன்முதல் உம்பர்தம் உளம்வெருவும்
உற்றபகை சூர்க்குலத்தை
உதிரக்க டல்தள்ளும் உயர்குமர கோட்டத்தன்
ஒளிர்கையின் செங்குந்தமே!
நிலவுலகில் பகைதீர்த்து நெடியபுக ழேபோர்த்து
நேசர்க்க ருள்புரிந்து
நித்தலும் வளர்குமரன் கைத்தலம் பற்றியொளிர்
நெடுவீர செங்குந்தமே!

புலவர் ச. சதாசிவம், M.A.,

மரபினர் நடத்திய மாண்புகழ்

மாநில மாநாடுகள்

செங்குந்த மக்களுக்கிடையே சமூக எழுச்சியை ஊட்டிச் சமுதாயப் பணிகளுக்குத் திட்டமிட்ட தலைச்சங்க மாநில மாநாடு ஆங்காங்கே நடைபெற்று வந்துள்ளது.

மாநாடு எண்	நடத்தப்பட்ட			நடைபெற்ற	
	ஆண்டு	மாதம்	தேதி	மாவட்டம்	இடம்
1வது மாநாடு	1929	ஜனவரி	19,20	கோயம்பத்தூர் மாவட்டம்	ஈரோடு
2வது ”	1931	மே	16,17	செங்கற்பட்டு ”	காஞ்சீபுரம்
3வது ”	1931	டிசம்பர்	26	சென்னை ”	மயிலாப்பூர்
4வது ”	1933	மார்ச்சு	12,13	தஞ்சை ”	திருவாரூர்
5வது ”	1935	பிப்ரவரி	2, 3	வடஆற்காடு ”	திருவத்திபுரம்
6வது ”	1936	செப்டம்பர்	27,28	திருநெல்வேலி ”	அம்பா சமுத்திரம்
7வது ”	1937	ஜனவரி	29,30	மதுரை ”	மதுரை
8வது ”	1939	செப்டம்பர்	2, 3	திருச்சி ”	திருவானைக்காவல்
9வது ”	1940	டிசம்பர்	26,27	இராமநாதபுரம் ”	பரமக்குடி
10வது ”	1947	ஜூன்	25,26	தென்னாற்காடு ”	குறிஞ்சிப்பாடி
11வது ”	1952	பிப்ரவரி	12,13	சேலம் ”	திருச்செங்கோடு
12வது ”	1960	மார்ச்சு	19,20	சித்தூர் ”	திருத்தணி
13வது ”	1976	டிசம்பர்	25,26	கோவை ”	ஈரோடு
14வது ”	1984	பிப்ரவரி	4, 5	செங்கற்பட்டு ”	காஞ்சிபுரம்

தலைச் சங்கத்து வெள்ளி விழா 1952இல் சென்னையிலும், தலைச் சங்கத்துப் பொன் விழா 1981 டிசம்பர் 12, 13 சேலம் அம்மாபேட்டையிலும் சிறப்புடன் நடைபெற்றன.

14வது மாநில மாநாட்டில், சமூக மாநாட்டிற்குத் தலைமையேற்ற

திரு. **A. V. Rm. V. சங்கரநாராயணன்,**
மேலாண்மை இயக்குநர், கோமதி மில்ஸ்,
அம்பாசமுத்திரம்

மாநாட்டு ஊர்வலத் தலைவர்



திரு P. வெங்கடசுப்பிரமணியம் M.A.,B.L, M.L.A.
துணைத் தலைவர்,
தென்னிந்திய செங்குந்தர் மகாஜன சங்கம், சென்னை.

சென்னை உயர்நீதி மன்ற நீதி அரசர்.

மாண்புமிகு T. N. சிங்காரவேலு, B.A.,B.L,
(இளைஞர் மாநாட்டுத் திறப்பாளர்)

தலைமையுரை

ஏவி. ஆர் எம். வி. சங்கரநாராயணன் அவர்கள்
சமூக மாநாட்டுத் தலைவர், 14-வது செங்குந்தர் மாநில மாநாடு, காஞ்சிபுரம்.

எனது பேரன்புக்கும், மரியாதைக்குரிய எனது அருமை நண்பர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர், கைத்தறிக் காவலர் பத்மஸ்ரீ உயர்திரு. எம். பி. நாச்சிமுத்து அவர்களே, காஞ்சி மாநகரில் நடந்துகொண்டிருக்கும், 14-வதுசெங்குந்தர் மாநில மாநாட்டில் கலந்துகொள்ளத் தமிழகம் முழுவதிலிருந்தும், ஈழத்திலிருந்தும் வந்திருக்கும் செங்குந்தக் குலக் கொழுந்துகளே, எனது அருமைச் செங்குந்தத் தாய்மார்களே, செங்குந்த இளஞ்சிங்கங்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கனிந்த வணக்கம்.

இன்று, 14-வது செங்குந்தர் மாநில மாநாடு மிகவும் கோலாகலமாய் காஞ்சியம்பதியில் நடந்துகொணடிருக்கிறது. காஞ்சியம்பதிதான் செங்குந்தர்களின் பிறப்பிடம் என்பது செங்குந்தர் வரலாறு அறிந்த நாம் ஒவ்வொருவரும் நன்கு அறிந்ததே. காஞ்சியின் நான்கு திசைகளிலிருந்தும், அணி அணியாய் இங்குவந்து குழுமியிருக்கும் ஒவ்வொரு செங்குந்தர் குலப்பெருமகனாரும்,தனது மூதாதையர் வாழ்ந்த காஞ்சி நகரில் இப்போது கூடுவது மிகச் சிறப்புடையது. மேலும் காஞ்சி மாநகரம் பிற நகரங்களைப் போன்றது அல்ல. தெய்வீக மணம் கமழும் காஞ்சி என்றால் மிகையாகாது. காஞ்சியில் தடுக்கி விழுந்தால், ஏதாவது ஒரு கோவிலில்தான் விழவேண்டும். உலகிற்கு ஆன்மீகத்தைப் பரப்பிவரும் காஞ்சி காமகோடி பீடம்இருப்பதும காஞ்சியில்தானே, அதே நகரில்வாழும் காஞ்சி செங்குந்த குலக் கொழுந்துகளே, நீங்கள் நெய்து கொடுக்கும் காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளையல்லவா, மேல்நாடுகள் கூட விரும்பி வாங்குகின்றன என்றால், இக்காஞ்சியின் பெருமையைப் பேசவும் வேண்டுமோ மேலும் இக்காஞ்சியம்பதியில் தானே சிறந்த சிந்தனையின் சின்னமாகிய காஞ்சி நாகலிங்கமுனிவர் செங்குந்த சங்கம் அமைக்க முன்னோடியாக விளங்கினார்என்பது யாவரும் அறிந்த உண்மை அல்லவா? சிறப்புவாய்ந்த இக்காஞ்சி மாநகரில், பல்லவர்களின் தலைநகராய் விளங்கிய இக்காஞ்சி நகரில், தொன்றுதொட்டு இறையருளை உலகத்தாருக்கு வாரிவழங்கும் காஞ்சி நகரில் நமது மாநில மாநாட்டை அமரர் சேர்மன் சாமிநாத செங்குந்தர் பந்தலிலே அமரர் வி. இரத்தின செங்குந்தர் அரங்கிலே நடத்திக் கொண்டிருப்பது போற்றுதலுக்கும், பாராட்டிற்கும் உரியதாகும்.

எனதருமைச் செங்குந்தர்களே, இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடு. சாதி, மதம் வேற்றுமை பாராது, எல்லோரும் இந்தியரே, என்ற கொள்கைக்கு எதிராக, இச்செங்குந்தர்கள் தங்கள், சாதி மாநாட்டை இப்படி பெருந்திரளாய் நடத்துவது, பொருத்தமற்றது என்று சில சாதியினர் கூறுவது என் காதில் விழுகிறது. அந்தக் கூற்றில் உண்மையிருக்கலாம். ஆனால் அவர்களது கொள்கையை எந்த சாதியினர். எந்த மதத்தினர் கடைப்பிடிக்கிறார்கள் என்று நாம் சற்று சிந்திக்கவேண்டும். சாதி, மதம் கூடாது என்று மேடையேறிப் பேசும் பெரியவர்கள், தங்கள் சாதி அல்லது மதத்திற்குவிதிவிலக்கு அளித்துவிடுகிறார்கள். நாம் இக்காலத்தில் தினசரி செய்தித் தாள்களைப் புரட்டினால், ஏதாவது ஒரு சாதி அல்லது மதம் தன்னுடைய மாநாட்டை எப்படி கோலாகலமாய் நடத்தியது, என்ன என்ன தீர்மானங்களை நிறைவேற்றின என்ற செய்தியைப் படிக்கிறோம். ஒவ்வொரு சாதியும், மதமும், தம் தம் சாதி அல்லது மதத்தைப் போற்றி வளர்த்தால் தான், அந்த சாதி அல்லது மதத்தைத் தழுவியவர்கள் முன்னேற முடியும் என்பது நாடறிந்த உண்மை என்பதை நாம் மறக்கவாகாது. சமீப காலமாக, எதிலும் முன்னேறிய சாதியினர்கூட, தங்கள் தங்கள் சாதியினர், அரசாங்கத்திடமிருந்து இன்னும் அதிக சலுகைகளைப் பெற ஊர்வலங்களும், மாநாடுகளும் நடத்துவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அப்படியிருக்க எத்தனையோ லட்சம் எண்ணிக்கையுடைய வறுமையால், கல்வியின்மையால் நோயுற்று நலிந்து வாடுகிற இச்செங்குந்த சாதியினர் மாவட்ட மாநாடுகளும், மாநில மாநாடுகளும் நடத்துவதில் யாதொரு குற்றமுமில்லை என்பதை அவர்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

நமது தென்னிந்திய செங்குநதர் மகாஜன சங்கம் 1929-ஆம் ஆண்டு தொடங்கி இதுவரை 13 மாநில மாநாடுகளை நடத்தியுள்ளன. இப்பொழுது நடந்துகொண்டிருப்பது 14-வது மாநில மாநாடு. நடந்து சென்ற

13 மாநில மாநாடுகள் சாதித்தது என்ன என்று சிலருக்கு ஐயம் ஏற்படலாம். வெளிப்படையாகக் காட்டக்கூடிய பெரும், பெரும் சாதனைகளைச் செய்யாவிட்டாலும் கூட, சில முக்கிய நன்மைகளைச் செய்திருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. முதலாவதாகத் தமிழகத்தில் தென்குமரி, வடவேங்கடம் வரை வாழும் செங்குந்தர்கள், இம்மாதிரி மாநில மாநாடுகளில் கலந்துகொண்டு எல்லைப் பாகுபாடு இல்லாது தாங்கள் எல்லோரும் செங்குந்தரே என்ற ஒருமைப்பாட்டு உணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். மாநில மாநாடுகள் நடத்தப்படாமலிருந்தால் அம்பாசமுத்திரத்தில் வாழ்கின்ற என்னை உங்களுக்குத் தெரிந்து இருக்க முடியாது. கோவையிலும், சென்னையிலும், தஞ்சையிலும் வாழ்கின்ற உங்களை எனக்குத் தெரிந்திருக்க முடியாது. இப்படிக் குமரி முதல் வேங்கடம்வரை வாழும் செங்குந்தர்கள் இப்பொழுது ஒரே இனத்தவர் என்ற எண்ணம் நன்கு வேரூன்றி விட்டது. இதன் காரணமாய், நாம் எல்லைக் கோட்டை உடைத்து நம் பெண்ணைப் பிற ஊர்களில் வாழும் செங்குந்தர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறோம் என்பது வெள்ளிடைமலை. ஆகவே கொள்வினை, கொடுப்பினையை இம்மாநாடுகள் ஊக்குவித்தன. பின்னர் நம் இனத்தவர், யார்யார் என்ன தொழில் செய்கிறார்கள், என்ன வியாபாரம் செய்கிறார்கள், என்ன என்ன அரசாங்க அலுவலர்களாய் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள உதவியாய் இருக்கிறது. இப்படிஎத்தனையோ நன்மைகளை இம்மாநில மாநாடுகள் நமக்கு கொடுத்திருக்கின்றன.

நிற்க, இனிமேல் நம் சமூகத்தினரின் நிலையைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். இன்றைய நிலையென்ன? கல்வி அறிவு மிகக் குறைந்தவர்களாய், தொழில் அதிபர்கள் எனக் கூறுவதற்குக் குதிரைக் கொம்பாய், சிறந்த பணக்காரரர் என அழைப்பதற்கு அத்திப் பூத்ததுபோல, உயர்ந்த அதிகாரிகள் எங்கிருக்கிறார்கள் என்று சந்துபொந்துகளில் தேடி அலைய வேண்டியநிலையில் இருக்கிறோம் செங்குந்தர் என்று சொன்னதும், ஒட்டிய வயிற்றையும், உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் உடலையும், பரட்டைத் தலையையும் கந்தல் துணியையும், கல்வி அறிவற்ற ஒரு மனிதனைத்தான் சுட்டிக்காட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம். தென் இந்தியாவில் பல லட்சம் எண்ணிக்கையைக் கொண்ட சமூகம் நம் சமூகம். எண்ணிக்கையைப் பார்க்கும்பொழுது முக்கியமான சமூகங்களில் நமது சமூகம் ஒன்று. தமிழ் நாட்டில் குமரி மாவட்டம் நீங்கலாக, மற்ற மாவட்டங்களில் செங்குந்தர்களின் எண்ணிக்கை, பிற சமூகத்தினருடன் கல்வி, தொழில், வியாபாரம், அரசியல் இவைகளில் போட்டிபோட்டு முன்னேறவேண்டிய நிலையில் இருக்கிறது. ஆனால் உண்மையில் அப்படி அல்லவே மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய பிற சமூகங்கள் எல்லாத் துறையிலும் முன்னேற்ற உச்சக் கட்டத்தை அடைந்து, சில சமயங்களில் நம் சமூக மக்களையே ஆட்டிப் படைக்கின்ற நிலையில் இருக்கின்றனவே. எத்துறையை எடுத்துக்கொண்டாலும் அத்திப் பூத்ததுபோல் அங்கொன்றும், இங்கொன்றுமாகத்தான் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில், சில பெரியவர்கள் நம் சமூகத்தில் இருக்கின்றார்கள். இரண்டோர் இடங்களில் தனி மனிதன் தன் கடும் உழைப்பால் முன்னேறியிருக்கலாம். ஆனால் "ஒரு மரம் தோப்பாகாது" என்ற பழமொழிக்கு இணங்க ஒரு சிலர் நம் சமூகத்தில் முன்னேறினால் சமூக முன்னேற்றம் அடைந்துவிட்டது என்று ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. நம் தமிழ் நாட்டில் முன்னேற்றப் பாதையில் விளங்கி வரும். சமூகங்கள் ஏன் அந்த முன்னேற்றப் பாதைகளில் செல்கின்றன? அவைகளின் ஒற்றுமை மனப்பான்மை, கைதூக்கிவிடும் மேலான செயல், பரந்த மனப்பான்மைகள் தான் காரணம். எண்ணிக்கையில் மிகவும் குறைவான சமூகங்கள் நல்ல முன்னேற்றப் பாதைகளில் முன்னேறியிருப்பதின் காரணங்களை அறிந்தால், நம் சமூகத்தின் குறைபாடுகளை நாம் அறிந்துகொள்ள முடியும் உத்தியோகம் கொடுப்பதென்றால், உத்தியோக உயர்வு கொடுப்பதென்றால், பாங்கியில் கடன் கொடுப்பதென்றால்கூட, ஏன் பொதுத் தேர்தல்களில் தங்கள் வாக்குச்சீட்டைக் கொடுப்பதென்றால்கூட தமது சமூகத்தினருக்கே கொடுப்பது என்று விரதம் பூண்ட சமூகங்கள் முன்னேறி இருப்பதை, முன்னேறி வருவதை நம் கண் முன்னால் காண்கிறோம். ஒற்றுமை மனப்பான்மை குறைந்து, முன்னேற்றப் பாதையில் செல்ல முடியாமல் இருக்கிறது நம் சமூகத்தின் இன்றைய நிலை.

இனி, நாம் செய்யவேண்டியதென்ன? என் அருமைச் செங்குந்த சகோதர சகோதரிகளே, நம் சமூகம் முன்னேற பல பல திட்டங்களைத் தீட்டவேண்டும். தீட்டினால் மட்டும் போதாது. அவைகளைத் திறமையுடன் செயல்படுத்த வேண்டும். ஒரு மனிதன், வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால், அவனுக்கு ஒரு லக்ஷியம் இருக்கவேண்டும். லக்ஷியத்தை மட்டும் எண்ணிக்கொண்டிருக்கலாகாது. லக்ஷியம் நிறைவேற ஓயாது, ஒழியாது உழைக்கவேண்டும். ஒரு மனிதனுக்குரியது தான் ஒரு சமூகத்திற்கும். ஆகவே நாம் செய்யவேண்டியவை யாவை? அவைகளை எங்ஙனம் நிறைவேற்ற வேண்டும் என்பதை இம்மாநாட்டில் கலந்துகொண்டிருக்கும்

செங்குந்தர்கள் முன் வைக்கலாமென்று எண்ணுகிறேன்.

ஒரு தனி மனிதன் அல்லது ஒரு சமூகம் முன்னேறக் கல்வி மிக முக்கியமானது. முன்னேறி வருகிற சமூகங்கள் ஏன் அப்படி முன்னேறி வருகின்றன? அச்சமூக மக்கள் பெறும் கல்வியே காரணம். எந்த சமூகத்தில் கல்வி அறிவு பெற்றவர்கள் அதிகம் இல்லையோ, அச்சமூகம் நத்தை வேகத்தில் தான் முன்னேறும் என்பதில் ஐயமில்லை. கல்வியென்றால் வெறும் எழுதப் படிக்கத் தெரிந்தால் மட்டும் போதாது. அல்லது வெறும் பட்டப்படிப்பு மட்டும் போதாது. சிலகாலத்திற்கு முன், பட்டதாரிகளும் முதுநிலைப் பட்டதாரிகளும் நல்ல வாய்ப்புகளைப் பெற்றனர். இக்காலத்திலோ பட்டதாரியாகவோ, முதுநிலை பட்டதாரியாகவோ இருந்தால் காலவேகத்தில் நாம் பின்தங்கி விடுவோம் என்பதை நன்கு உணர வேண்டும். இனிமேல் தொழில் கல்விதான் நமக்கு நன்கு பலனைக் கொடுத்து வாழ்க்கையை முன்னேறச் செய்யும். பல பட்டதாரிகள் ஏன் முதுநிலைப் பட்டதாரிகள் வேலையற்று மனமுடைந்திருப்பதை நாம் காண்கிறோம்.

நம் சமூகத்தினரிடையே பட்டதாரிகளும் முதுநிலைப் பட்டதாரிகளும் மிகக் குறைவு தான். அவர்கள்கூட வேலையற்று வாழ்வதைப் பார்க்கும்பொழுது இனிமேல் நமக்குத் தொழில் கல்விதான் தேவையென்பதை உணரவேண்டும். அவரவர் வசதிக்கேற்ற, பொதுக் கல்விக்கு ஏற்றவாறு தொழில் பயிலகங்களில் இடம்பிடிக்க வேண்டும். குறைந்த பொதுக்கல்வி பெற்றவர்கள் ஐ. டி. ஐ. நிறுவனங்களிலும், பள்ளியிறுதி யாண்டு தேர்ந்தவர்கள் பாலிடெக்னிக்குகளிலும், மேல்நிலைப் பள்ளியில் வெற்றி பெற்றவர்கள் மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி விவசாயக் கல்லூரி முதலியவற்றில் இடங்களைப் பெற்றாக வேண்டும். தொழில் கல்வி பெற்றதன் காரணமாய் அரசாங்கம் அல்லது தனியார் நடத்தும் நிறுவனங்களில் வேலை பெறப் பெரும் வாய்ப்புகள் இருக்கின்றன. வேலை வாய்ப்பு பெறமுடியாதவர்கள் அரசாங்கம் அளிக்கும் மானியத் தொகையைப் பெற்று சிறு சிறு தொழில்கள் நடத்த முடியும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆகவே இனி நமது செங்குந்த மாணவ, மாணவியர் தொழில் பயிலகங்களில் சேர்ந்து கற்க முன்வர வேண்டும். இங்கு, நம் செங்குந்த அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள், இதுவரையும் அன்பர்கள் பலர் கல்விச்சாலைகள் பல ஏற்படுத்தி நம் சமூகத்தினர் இடையே கல்வியைப் பரப்பி வந்தார்கள். அவர்களுக்கு நமது நன்றி, வாய்ப்பிருக்கும் பெரியோர்கள் இனிமேல் தொழிலியல் பயிலகங்களை ஏற்படுத்த முன் வர வேண்டுமென்று இச்சமயத்தில் அவர்களை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்கு அடுத்தபடியாக அரசியல் முக்கியமானது ஒரு காலத்தில் அரசியல் ஒரு பொழுது போக்காய் இருந்தது. இப்பொழுது அது தொழிலாய் மாறி வருகிறதென்பது கண்கூடு. படுகுழியிலிருந்த சில சமூகங்கள் இப்பொழுது தங்களது செல்வாக்கை உயர்த்திக்கொண்டு, அச்செல்வாக்கின் காரணமாய் அரசாங்கத்திடம் இருந்து பல சலுகைகளைப் பெற்று வருவதை நாம் இன்று வெள்ளிடை மலைபோல் காண்கிறோம். ஒரு சமூகத்தின் வளர்ச்சி, அச்சமூகம் அரசியலில் எவ்வளவு பங்கு கொள்கிறதோ, அதைப் பொறுத்து இருக்கிறது. பஞ்சாயத்து தேர்தல் முதல் பாராளுமன்றத் தேர்தல்வரை பங்கு கொண்டு, வெற்றி பெற்று, முன்னேறி வருகின்றன. நாம் இன்னும் ஒதுங்கிக் கொண்டிருக்கிறோம். நம்மில் வாய்ப்பு பெற்றவர்கள் அரசியலில் பங்குகொள்ளத் தயங்கலாகாது அரசியலில் பல கட்சிகள் தோன்றியுள்ளன என்பதை நாம் நன்கு அறிவோம். ஆகவே நம்மவர்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியில்தான் பங்கு கொள்ள வேண்டுமென்பதல்ல,அவரவருக்குப்பிடித்த அரசியல் கட்சிகளில் பெரும் பங்கு பெறவேண்டும். அக்கட்சிகளில் பொறுப்பை ஏற்கத் தயங்கக் கூடாது பொறுப்பேற்று நம் சமூக மக்களை ஊக்குவித்து வாழ்க்கையில் முன்னேறச் செய்யவேண்டும். ஆனால், நம் சமூகம் என்று வரும்பொழுது அரசியல் கட்சியை மறந்து சமூக முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும். பிற சமூகங்களுக்கு நாம் எடுத்துக்காட்டாய் இருக்கவேண்டும். நமக்குள் இருக்கும் பகைமை, பொறாமை, ஒற்றுமையின்மையை மறந்து செங்குந்தர் என்ற எண்ணத்தில் செயல்பட்டால் நம்மால் ஆகாதது கிடையாது. நாம் இம் மனநிலையிலிருந்து மாறுபட்டால், அரசியல் ஓட்டத்தில் பின் தங்கியவர்களாகி விடுவோம் என்பது திண்ணம்.

அடுத்தபடி தொழிலுக்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும் நம் குலத் தொழில் நெசவு, நம்மில் பெரும் பகுதியினர் நெசவுத் தொழிலையே இன்றும் தம் தொழிலாக வைத்திருக்கின்றனர். ஆனால் அக்கைத்தறித் தொழில் இப்பொழுது என்ன நிலையில் இருக்கிறதென்பதை நெசவாளர்களாகிய நாம் நன்கு உணர்வோம். அரசாங்கம் அளிக்கும் சலுகைகளைக் கொண்டு வாழ வேண்டிய நிலையில்தான் இன்னும் இருக்கிறோம். அரசாங்கம் கொடுத்து வரும் சலுகையில் ரிபேட் முறையும் ஒன்று. இந்த முறையை நம்பி நாம் எத்தனை காலம் இத்தொழிலை நடத்தமுடியும். ரிபேட் என்பது

மருத்துவர் ஒருவர், நோய் கண்ட நோயாளிக்கு ''ஊசி மருந்து'' போடுவது போல். ஊசி மருந்து உடனடியாக நோயைக் குணப்படுத்தும், நிரந்தரமாய் நம் தொழிலை நம்பி வாழமுடியாமல் இருக்கிறோம். அனேக சமூகத்தினர் தங்கள் குலத் தொழிலை உதறி விட்டுப் பிற தொழில்களில் ஈடுபட்டு முன்னேறி வருவதை நாம் கண்கூடாய்ப் பார்க்கிறோம். ஆகையால் மாற்றுத் தொழிலுக்குச் செல்ல நாம் தயங்கக்கூடாது. மேலும் நெசவுத் தொழிலில் கைத்தறி என்றும், விசைத்தறி என்றும், நெசவுச் சாலைகள் என்றும் பல தரப்பட்டவை இருக்கின்றன. ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டிருப்பதை நாம் நன்கு அறிவோம். ஆகையால் கைத்தறி நெசவை ஊக்குவிப்பதுடன் விசைத்தறியையும் விரிவுபடுத்தி அதனால் நம் மக்களின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்யவேண்டியது நமது கடமையாகும்.

பின்னர் சமூகத் தொண்டிற்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும். சமூகத் தொண்டிற்கும், பொதுநலத்தொண்டிற்கும் நம்மவர்களில் பெரும்பான்மையினர் முன்வருவதில்லை. அப்படி யாராவது முன்வந்தால், அவர்களுக்கு ஊக்கமோ, உதவியோ உற்சாகமோ அளிப்பதில்லை. அதனால் முற்போக்குத் துடிப்புள்ளம் கொண்ட இளைஞர்கள் ஆர்வம் குன்றிச் செயலற்றுச் சோர்ந்துவிடுகிறார்கள். இனியும் நாம் அவ்வாறில்லாமல் எல்லா மாவட்டங்களிலும், மாவட்டச் சங்கங்களும், எல்லாக் கிராமங்களிலும் கிளைச்சங்கங்களும் தோற்றுவித்து அதன் மூலம் இளைஞர்களையும், தொண்டர்களையும் உருவாக்கி அவர்களுக்கு எல்லாவிதத்திலும் உதவி செய்து, உற்சாகமூட்டி நல்ல பல பணிகளில் குலப்பணியும் சிறந்ததென்பதை வலியுறுத்துவோமாக. எந்தச் செயலையும் செம்மையாகச் செய்ய ஒரு அமைப்பு மிக மிக அவசியம். அமைப்பு இருந்தால்தான் கட்டுப்பாட்டுடன் செயல்பட முடியும்.

எல்லாவற்றிற்கும் மேலாக உடனடியாக செயல்பட வேண்டிய சூழ்நிலை இப்பொழுது உருவாகியுள்ளது. செங்குந்தர் மரபின் தலைமேல் ஒரு கூரிய வாள் தொங்கிக்கொண்டிருக்கிறது. எந்த நிமிடத்தில் அக்கூரிய வாள் அறுந்து விழுந்து நம் சமூகத்தைச் சின்னாபின்னமாக்கி விடுமோ என்ற அச்சம் எல்லோருடைய மனதிலும் புகுந்திருக்கிறது. நம் சமூகத்தைச் சுற்றிக் காட்டுத் தீ பரவிக் கொண்டிருக்கிறது. அது நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. காட்டுத் தீயை அணைக்க அவரவர் கையில் கிடைத்த செம்பு, பானை, அண்டாக்களைத் தூக்கிக்கொண்டு ஓடோடி தண்ணீர் கொண்டு வந்து அணைக்க வேண்டும். இல்லையேல் நம் சமூகம் இன்றைய நிலையைவிட மிகவும் சீர்கெட்ட நிலைக்குத் தள்ளப்படும். அதுதான் நம் செங்குந்தர்சமூகத்தைப்பிற்பட்ட சமூகப் பட்டியலில் வைத்திருப்பதா, அல்லது அதை முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்துவிடுவதா என்ற நிலை. இது வாழ்வா, வீழ்வா என்ற பிரச்சனை ஆகும். பிற்பட்டோர் பட்டியலில் இருக்கும் நம் செங்குந்தர் முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டால் நம்மவர்களுக்குக் கல்விகூடங்களில் இடம் கிடையாது. அரசாங்க அலுவலகங்களில் அலுவலர்களாய் நுழைய முடியாது. ஒன்றிரண்டு அரசாங்க அலுவலர்கள்கூட உயர் உத்தியோகங்களுக்குப் போகமுடியாது என்பதை நாம் நன்கு அறிந்து காலம் தாழ்த்தாது செயல்பட வேண்டும். பிற்பட்டோர் பட்டியலில் நம் சமூகம் இடம் பெற்று எத்தனையோ ஆண்டுகளாயும் நம் சமூக மக்களின் ஏழ்மையின் காரணமாக கல்விக் கூடங்களிலோ, அரசாங்க அலுவலகங்களிலோ அதிகம் நுழைய முடியாத சூழ்நிலையில் இருக்கும் நம் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க நாம் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் வேளையில் அரசாங்கம் நம்மை முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க நாம் இடம் கொடுக்கக்கூடாது. இதைத் தடுத்து நிறுத்த பிற்பட்டோர் நலக்குழு மாவட்டம் தோறும் முகாம் செய்தபொழுது நாம் எல்லோரும் குரல் கொடுத்துள்ளோம். தலைமைச் சங்கமும் தனது உறுப்பினர்களை அனுப்பி வேண்டும் சான்றுகளுடன் நமது பிற்பட்ட நிலையை அக்குழுவுக்கு எடுத்துரைத்து வேண்டும் நடவடிக்கை செய்து வருகிறது. இத்தருணத்தில் ஒவ்வொரு செங்குந்தரும் கச்சையை வரிந்துகட்டி முழுமனதுடன் கிளர்ச்சி செய்து, நம் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க ஆவன செய்வோமாக. இதற்கு நம் குலக்கடவுள் முருகன் துணை புரியுமாறு உங்கள் சார்பிலும், என் சார்பிலும் வேண்டுகிறேன்.

இம்மாநாட்டிற்கு என்னைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்து என்னையும் என் மாவட்டமாகிய திருநெல்வேலி மாவட்டத்தையும் கௌரவித்தஇம்மாநாட்டுக் குழுவினருக்கும், காஞ்சி வாழ் மக்களுக்கும், தலைமைச் சங்கத்திற்கும், இதுகாறும் அன்புடன் எனது உரையைக் கேட்ட செங்குந்தர் அன்பர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றி உரித்தாகுக.

வணக்கம்.

சிதம்பரம் ஆதீனம், செங்குந்தர் குலதிலகம்



சீலத்திரு மௌனகுரு தேசிக பரமாசாரிய சுவாமிகள்



திரு A. இராஜாமணி
All India Hand-loom Fabricks
Export Marketing Officer,
சென்னை.

திரு R. A. N. முத்துசாமி முதலியார்,
முதலியார் கல்வி நிறுவனம்
ஈரோடு.



திரு. C. அருணசல முதலியார் B.A., B.T.,
மண்டலச் செயலர்,
தென்னிந்திய செ. ம. சங்கம், (நெல்லை)



திரு. S. P. சம்பந்தம்,
மண்டலச் செயலர்
தென்னிந்திய செ. ம. சங்கம். (சேலம்)

திரு. கா. அ. பத்மநாப முதலியார்,
துணைத் தலைவர்,
தெ. இ. செ. ம. சங்கம், திருப்பத்தூர்.



திரு. C. நடராஜ முதலியார், B.A., B.L.,
துணைத் தலைவர்,
தென்னிந்திய செ. மா. ச. சென்னை.



திரு. P S. பாலசுப்பிரமணிய முதலியார்
சென்னை.
மாநாட்டில் குலக்கொடி ஏற்றியவர்.



திரு G. S. துரைசாமி முதலியார்
அம்மையார்குப்பம்
துணைத்தலைவர், வரவேற்புக்குழு.



திரு. R. சோமசுந்தரம், B.A.B.L.,
தலைவர்,
தெ. ஆ. மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்.

திரு D. பட்டுசாமி
பாராளுமன்ற உறுப்பினர்,
திருவண்ணாமலை.

தென்னிந்திய செங்குந்த மகா ஜன சங்கம்
தோற்றமும் வளர்ச்சியும்

சி. நடராச முதலியார், பி.ஏ.,பி எல்.,
துணைத்தலைவர், செங்குந்த மகாஜன சங்கம்

உலகில் பல ஆயிரக்கணக்கில் ஜாதிகள் உள்ளன. ஆயினும் சில ஜாதியினர் மட்டும் பெரும்பாலாக ஒன்றுகூடிப் பலஇடங்களில் வாழ்கின்றனர். அவ்வாறு ஒருமித்து தமிழ் நாட்டில் பல்வேறு நகரங்களிலும் கிராமங் களிலும் செங்குந்தர்கள் பெரும்பாலாக வாழ்கின்றனர். அண்டை நாடுகளான ஆந்திரம், கேரளம், மகாராட்டிரம், கடல் கடந்து தென்னுப்பிரிக்கா, மலேயா, இலங்கை முதலிய இடங்களிலும் செங்குந் தர்கள் வாழ்கின்றனர்.

செங்குந்தர் சமூகம் தோன்றியதற்குப் புராண வரலாறும் இருக்கின்றது சூரபது மனை அழிப்பதற்கு முருகப்பெருமான் அவதரித்தபோது, அவருடன் தோன்றிய நவவீரர்களின் வழித்தோன்றல்கள் செங் குந்தர்கள். இக்காரணம் பற்றியே இன்றும் ஆண்டுதோறும் நடக்கும் கந்தர் சஷ்டி விழாவில் சூரசம்மாரத்திற்காகச் செங்குந்த குலத்தைச் சேர்ந்தவர்களே நவவீரர்களாகப் பங்கேற்கின்றனர்.

நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக செங்குந்தர் சமூகம் ஒரு அமைப்பின்கீழ் இருந்துகொண்டு வருகிறது. தமிழ்நாடு நான்கு திசை நாடுகளாகவும், அவற்றின் கீழ் 72 கிளைநாடுகளாகவும் பிரிக்கப்பட்டு (இதன் விவரம் வேறு பக்கத்தில் உள்ளது) ஆங்காங்குள்ள பெரிய தனக்காரர்கள் நாட்டாண்மைக்காரர்கள் மேற்பார்வை யில் செங்குந்தர் சமூக சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் பரிசீலிக்கப்பட்டு வந்தன. **நான்கு திசை நாடுகளுக்கும் காஞ்சி மாநகரம் தலைநகரமாக விளங்கியது.** காஞ்சி யில் செங்குந்தர் ஆதிக்கத்தில் உள்ள அருள்மிகு கச்சபேஸ்வரர் ஆலயத்தில் ஆண்டவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவ ருக்குப் பட்டம்கட்டி, அவரே செங்குந்தர் களை ஆள்பவர் என்று போற்றி வந்திருக் கிறார்கள். காஞ்சிபுரத்தில் இவ்வழக்கம் சுமார் 60 வருடங்கட்கு முன்பு நின்று விட்டது கிளை நாடுகளிலும் ஆங்காங் குள்ள நாட்டாண்மைக்காரர்களுக்கு இவ்வாறு பட்டம் கட்டப்பட்டு வந்தது. சமூக சம்பந்தமான எல்லாப் பிரச்சனை களையும் மேற்குறித்த நாட்டாண்மைக் காரர்களும் பெரியதனக்காரர்களும் ஆங் காங்கே உள்ள முக்கியமானவர்களுடன் கலந்து முடிவு செய்வார்கள்.

இந்த நிலையைக் காலத்துக்கு ஏற்ப மாற்றி அமைக்கவேண்டும் என்று நம் குலத்தில் சிறந்த சைவ சித்தாந்த விற்பன்னராக விளங்கிய வண்ணக்களஞ் சியம் காஞ்சி நாகலிங்க முதலியார் **(துறவு கொண்டபின் நாகலிங்க முனிவர்)** முயற்சி செய்தார். அவருடைய உழைப் பின் சின்னமாக விளங்குவதே இன்றைய தென்இந்திய செங்குந்த மகாஜன சங்கம் ஆகும். இது தோன்றிய ஆண்டு 1927. நாகலிங்க முனிவர் 5ஆம் ஜார்ஜ் மன்னர் முடிசூடிக் கொண்டபோது 'காரனேஷன் டிக்ஷனரி' என்ற பெரும் தமிழ்ப் பேரக ராதியைத் தொகுத்தவர் என்பது பெரு மைப்பட வேண்டிய செய்தியாகும்.

திரு. நாகலிங்க முதலியார் அவர்கள் முயற்சியால் 30—12—1912 அன்று காஞ்சி கச்சபேசர் திருக்கோயிலில் கூடிய செங்

குந்தர் கூட்டத்தில் செங்குந்தர் சங்கம் நிறுவப்பட்டு, காஞ்சிபுரம் முன்னாள் நகர சபைத் தலைவர் திரு மா சாமிநாத முதலியார் தலைவராகவும், மயிலாப்பூர், கா. வேலு முதலியார் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்தின் தீர்மானப்படி தலைவர்கள் பல ஊர்களுக்கும் சென்று பிரச்சாரம் செய்தனர் 1913-டிசம்பரிலும் ஒரு கூட்டம் மிகச் சிறப்பாக நடந்தது. சங்கத்தைப் பதிவு செய்யும் முயற்சி தடைப்பட்டு, சங்கம் நீடித்து வேலை செய்யாமல் போயிற்று. ஆனாலும் நாகலிங்க முதலியார் இயக்கத்தை வளர்ப்பதற்கு இரவும் பகலுமாகத் தளராமல் உழைத்தார். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் என்ற பெயரில் சங்கம் நிறுவ, சென்னை மயிலையில் நம்மவர் ஆதிக்கத்தில் உள்ள ஸ்ரீவெள்ளீஸ்வரர் ஆலயத்தில் 9—6—1918இல் செங்குந்தப் பிரமுகர்கள் கூட்டம் கூட்டி மகாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. காஞ்சிபுரத்திலும் மகாநாடு குறித்து ஒரு கூட்டம் கூட்டப்பட்டது தஞ்சை மாவட்டம் பொருள் வைத்த சேரியில் கூடிய மகாநாட்டில் வள்ளல் திருவாரூர் தி நா சபாபதி முதலியார் செய்த தீர்மானப்படி சென்னையில் 1927இல் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கமும், செங்குந்தமித்திரனும் தோன்றின.

1927 ஜனவரியில் செங்குந்தமித்திரன் மாத இதழ் தொடங்கப்பட்டது செங்குந்த மித்திரன் மூலம் தென்னிந்திய மகாஜன சங்கம் என்ற தலைமைச் சங்கம் தொடங்கப்பட வேண்டும் என வேண்டுகோள்விட, அதன்படி சென்னை கோவிந்தப்பநாயகன் தெருவில்உள்ள சௌந்தர்ய மகாலில் 29—4—1927 வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணிக்குத் தலைமைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. மித்திரனும், சங்கமும் ஆரம்பிக்கப்பட்டதும் அரண்மனைக்காரன் தெரு எண். 31ல் இருந்த மதராஸ் பளயகாட் கம்பெனியார் காரியாலயத்திற்கு இடம் கொடுத்து உதவினர். ஆரம்பத்தில் நியமிக்கப்பட்ட பிரசாரகர்கள் திரு. தி. அ. சண்முக முதலியார், காஞ்சி மணிமொழியார் போன்றவர்கள் மித்திரனுக்குச் சந்தா வசூல் செய்தும், ஆங்காங்கு கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தியும் பெரிதும் உழைத்தனர்.

தலைவர்கள் செய்த பெருமுயற்சிகளின் பயனாக 1929ஆம் ஆண்டு ஜனவரி 19, 20 தேதிகளில் ஈரோட்டில் செங்குந்தர் முதல் மகாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. காஞ்சிபுரம் நகரசபைத் தலைவர் மா. சாமிநாத முதலியார் செங்குந்தர் குலக்கொடியை ஏற்றிவைத்தார்: 1929இல் ஈரோட்டில் ஆரம்பித்து பின்னர் மாவட்டங்கள்தோறும் 11 மகாநாடுகள் நடந்து மீண்டும் 1976 டிசம்பர் 25, 26 தேதிகளில் பதின்மூன்றுவது மகாநாடு ஈரோட்டில் நடத்தப்பட்டது. நம் குலத் தலைவர் திரு. எம் பி நாச்சிமுத்து முதலியார் அவர்களுடைய பெருமுயற்சி இம்மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெற உதவியது. அப்போது அடுத்த மகாநாடு சென்னை-செங்கற்பட்டு மாவட்டங்களின் மகாநாடாக நடைபெற வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் இப்போது அது 14-வது மாநில மகாநாடாகவே மிக்க சிறப்புடன் நடைபெறுகிறது.

ஒவ்வொரு சமூக மகாநாட்டின் போதும், இளைஞர் மகாநாடு, கைத்தறி மகாநாடு, மாதர் மகாநாடு போன்றவை களும் உடன் நடத்தப்படுகின்றது செங்குந்த குல நலனுக்காகச் சங்கம் ஏற்பட்டதாயினும், மற்ற சமூகங்களிடையே எவ்வித மனத்தாங்கலும் இன்றி, கைத்தறி மகாநாடு போன்றவற்றில் பிற சமூகத்தினரையும் கலந்துகொள்ளச் செய்கின்றோம். சமூக மகாநாடுகள் மட்டுமின்றி தேவைப்படும்போது தலைச்சங்கத்தினர் சிறப்பு மகாநாடுகளும் நடத்தியுள்ளனர். 1942இல் செயின்ட்மேரீஸ் ஹாலில் கைத்தறி சிறப்பு மகாநாடும் சில, ஆண்டுகளுக்கு முன் காஞ்சிபுரத்தில் கைத்தறி மகாநாடும் நடத்தி உள்ளோம்.

தலைச்சங்கத்தின் குறிக்கோள்களான கல்வி தொழில் வளர்ச்சி, எங்கும் உள்ள செங்குந்தர்கள் எவ்வித வித்தியாசமும் இன்றிப் பெண் கொடுக்கல் வாங்கல் செய்தல், நம்மவர் பெருந்தொழில்களை ஆரம்பித்தல், கல்லூரிகளும் கலாசாலைகளும் அமைத்தல், மூடப் பழக்க வழக்கங்களையும் தற்காலத்துக்கு ஒவ்வாத பழக்க வழக்கங்களையும் ஒழித்தல் முதலானவை குறித்து நமது பிரச்சாரகர்கள் கிராமந்தோறும் நகரந்தோறும் சென்றும் மகாநாடுகள் கூட்டியும் பிரச்சாரம் செய்ததின் பயனாகவும், மித்திரன் வாயிலாக எழுதியதன் பயனாகவும் நம்மவர்கள் நூற்றுக் கணக்கில் இன்று படித்து வேலையில் உள்ள

னர். பேராசிரியர், மருத்துவர், பொறியாளர், வழக்கறிஞர், ஆட்சிப் பணியாளர் (I.A.S.) போன்ற பல துறைகளில் இன்று நம்மவர் உள்ளனர். வெளிநாடுகளில் பட்டம் பெற்று வெளிநாடுகளில் பணியும் புரிகின்றனர். பெண்களும் பட்டம் பெற்றுப் பணிபுரிகின்றனர். ஆனால் நம்மவர்க்கு அரசியலில் செல்வாக்குஇல்லை. செல்வாக்கு இருப்பின் நம்மவர் மேலும் உயர வழி உண்டு.

தலைச்சங்கப் பிரச்சாரத்தின் பயனாக தாரமங்கலம் குறிஞ்சிப்பாடி சென்னிமலை, ஈரோடு ஆகிய இடங்களில் செங்குந்தர் உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஈரோட்டிலும் குடியேற்றத்திலும் நம்மவர்கல்லூரிகள் உள்ளன. குடியேற்றம், சேலம், திருநெல்வேலி போன்ற இடங்களில் நூற்பாலைகளும், சேலம் திருச்செங்கோடு போன்ற ஊர்களில் விசைத்தறிகளும் நம்மவர்களால் நடத்தப்படுகின்றன.

இதுவரையில் நடைபெற்ற 13 மகாநாடுகளில் சமூக வளர்ச்சிக்கு எனப் பல திட்டங்கள் வகுக்கப்பட்டும், போதுமான முயற்சி இன்மையால் அவை செயல்படவில்லை. பல மாவட்டங்களில் கிளைச் சங்கங்கள் தோன்றி மறைந்தன. ஆயினும் கடந்த சில வருடங்களாக நம்மவரிடையே மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. மாவட்டங்கள்தோறும் மாவட்டச் சங்கங்கள் தோன்றி அதன் சார்பாக கிளைச் சங்கங்களும் தோன்றவேண்டும். நம்மவர் ஒற்றுமையுடனும், விழிப்புடனும் இருந்து காரியங்களை நிறைவேற்ற வேண்டும். தொழில், கல்வி, வணிகம் எனப் பல துறைகளில் முன்னேற வேண்டும்.

பல இன்னல்களுக்கிடையேயும், 1927 ஜனவரியில் தொடங்கப்பட்ட மித்திரன் நிறுத்தப்படாமல் இன்றுவரை வெளியாகிக்கொண்டிருக்கிறது. தற்போது மித்திரன் புதுப்பொலிவு பெறுகிறுன். நம் சமூக அன்பர்கள் தலைச்சங்கத்தையும் மித்திரனையும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்று தலைச்சங்கத்தின் ஆயுள் உறுப்பினராகவும் மித்திரனின் ஆயுள் உறுப்பினராகவும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் சேர்ந்து வருகின்றனர். இந்த ஆர்வம் தொடர்ந்து இருந்தால் பெரும் வளர்ச்சி பெற்று நன்கு சமூகசேவை செய்யமுடியும். நம் இனத்தவர் அனைவரும் எல்லாத் துறைகளிலும் இடம் பெற வேண்டும். நம்மவர் இனப்பற்று உடையவர்களாக இருந்து, நம் இனத்தவர் உயர்வுக்கு வழிவகுக்க வேண்டும்.

—தொகுப்பு. **ச. சதாசிவம், M.A.,**

செங்குந்தர் எங்கும் வளர்ந்தால்.... அங்கே!

வானம் வளரும்	**தானம் வளரும்**	**ஞானம் வளரும்**
பசுக்கள் வளரும்	**தருமம் வளரும்**	**சிவஞான போதநலம் வளரும்**
அகம் வளரும்	**தருமம் வளரும்**	**மானம் வளரும்**

—செங்குந்தர் மரபு **விளக்கம்**

ஆதாரம் : **'செங்குந்தர் ஜாதி நூல் கோர்வை'**

முழுமை வாழ்வு பெற்றிடுவோம்!

திருத்தணிகை
கூ. ப. செயவேலன், எம்.ஏ.,

இழையை எண்ணிப் பாவாக்கி
எழிலாய் ஊடை நெசவாக்கி
விழையும் படிக்கு உடைவழங்கும்
வித்தகர் நம்மவர் செங்குந்தர்!

தொட்டு கட்டிப் பார்த்தாலும்
தொடர்ந்து புதுமை குறையாத
பட்டு பருத்தி ஆடைகளைப்
பாருக் களிப்பவர் செங்குந்தர்!

உழைப்பால் உயர்ந்து முன்னேறி
உவந்து பல்லறம் புரிந்திடுவார்
பிழைப்பில் நேர்மை கடைப்பிடிப்பார்
பெருமைக் குரியவர் செங்குந்தர்!

தீமை பிறர்க்குச் செய்தறியார்
தீந்தமிழ்ப் புலமை பெற்றிருப்பார்
ஊமை போலத் தாழ்ந்தவர்க்கு
உதவி புரிவார் செங்குந்தர்!

தெய்வ பக்தி கொண்டவராம்
திருவிழாக்கள் கண்டவராம்
உய்யும் வரையில் அன்புநெறி
உலகுக் களிப்பவர் செங்குந்தர்!

ஊரில் ஒற்றுமை கண்டவராம்
ஒருவருக் கொருவர் உதவிடுவார்
பாரில் கூட்டு வாழ்க்கையினைப்
பண்பாய்க் காப்பவர் செங்குந்தர்!

ஒற்றுமை கொண்டே நாடோறும்
ஒவ்வொரு பிரிவினர் உயர்தல்போல்
கற்றும் கேட்டும் விழிப்புடனே
கடமை செய்வார் செங்குந்தர்!

ஒட்டக் கூத்தர் முதலாக
உயர்ந்த சான்றோர் நம்மவரில்
பட்டியல் போட்டுக் காட்டிடுவோம்
பாரில் ஒன்றி உயர்ந்திடுவோம்!

புரட்சிக் கவிஞர் புதுமைபோல்
போற்றி ஒன்று கூடிடுவோம்
விரட்டி வேற்றுமை நீக்கிடுவோம்
விரும்பி ஒன்றி வாழ்ந்திடுவோம்!

புதிய தலைமுறை விழித்தெழுவோம்
புதுப்புது பொறுப்பை ஏற்றிடுவோம்
மதியால் உயர்ந்து நன்மைகளை
மகிழ்வாய் செய்து குவித்திடுவோம்!

இளைஞர் கருத்தாய் செயல்பட்டால்
எல்லாப் பேறும் கிடைத்துவிடும்
களைபோல் தீமை அகற்றிநிதம்
கடமை செய்தே நிமிர்ந்திடுவோம்!

கைத்தொழில் வாணிபம் செய்திடுவோம்
கல்வித் துறையின் கரைகாண்போம்
வைத்தியம் பொறியியல் அரசியலில்
வளர்ந்து வாழ வைத்திடுவோம்!

அயலூர் நாடு சென்றிடுவோம்
அறநெறி உணர்த்தி உய்விப்போம்
இயலும் எல்லாச் செயல்களிலும்
எவர்க்கும் உதவி வாழ்விப்போம்!

விரைந்து உலகம் உயர்கிறது
விரும்பி நாமும் தொடர்ந்திடுவோம்
விரைந்து ஒன்று கூடிடுவோம்
விரும்பும் நன்மை பெற்றிடுவோம்!

பேச்சைக் குறைத்துச் செயல்படுவோம்
பெரும்பெரும் சாதனை செய்திடுவோம்
மூச்சாய் சொல்செயல் ஒன்றாக்கி
முழுமை வாழ்வு பெற்றிடுவோம்!

கைத்தறி மாநாட்டுத் தலைமையுரை

திரு. **எம். பி. நாச்சிமுத்து முதலியார்,** B.A., B.L., அவர்கள்
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர்

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களே மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி திரு. டி. என். சிங்காரவேலு அவர்களே சிறப்புரையாற்ற வந்திருக்கும் பெரியோர்களே, செங்குந்தர் குலச் செல்வங்களே, இளைஞர்களே, தாய்மார்களே, நெசவாளப் பெருமக்களே, அனைவருக்கும் வணக்கம்.

உலகு வியக்கும் கவின்மிகு பட்டுத் துணிகளை கலை நயம் மிளிர உற்பத்தி செய்யும் வரலாற்றுச் சிறப்பு மிக்க காஞ்சி மாநகரில் தென்னிந்திய செங்குந்த மகாசன சங்கத்தின் 14வது மாநில மாநாட்டை ஒட்டி நடைபெறும் இந்தக் கைத்தறி மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் வாய்ப்பினை நல்கிய வரவேற்புக் குழுவினருக்கு என்னுடைய நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நாற்பதாண்டுகளுக்கும் மேலாக கைத்தறி நெசவாளர்களின் பிரச்சனைகளிலேயே உழன்று கொண்டிருக்கும் நான், நெசவாளர்களின் இன்றைய நிலைமையை உங்கள்முன் எடுத்துரைப்பது என்னுடைய கடமையெனக் கருதுகிறேன்.

தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 6 லட்சம் கைத்தறிகள் உள்ளன. அவைகளை நம்பி சுமார் 30 லட்சம் பேர் உள்ளனர். நெசவுத் தொழிலையே குலத் தொழிலாகக்கொண்டுள்ள செங்குந்தர்சமூகத்தில் சுமார் 97% நெசவுத் தொழிலையே நம்பி பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் தங்கள் வாழ்க்கையை நடத்திவருகிறார்கள். பாக்கி3% நூல்வாணிபம், சாயம் தோய்த்தல் பாவோடுதல் ஆகிய உப தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தரித்திர நாராயணர்கள் என்று அண்ணல் காந்தியடிகளால் வருணிக்கப் பட்ட நெசவாளர்களின் இன்றைய நிலையைச் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டுமென்றால் அவர்கள் ''நித்திய கண்டம் பூர்ண ஆயுசு'' என்ற நிலையில் தான் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாடு விடுதலை அடைவதற்கு முன்பும் விடுதலை அடைந்த பின்பும் எத்தனையோ அரசுகள் மாறி. மாறி வந்த போதும் எந்த அரசினாலும் நெசவாளர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு காண முடியவில்லை,

நெசவாளர்களின் பிரச்சனைகளை ஆராய்ந்து அவைகளுக்குத் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் பல குழுக்களை அமைத்தன. இவைகளும் தங்கள் பரிந்துரைகளை அரசுக்குத் தெரியப்படுத்தின.

குறிப்பாகச்சொல்ல வேண்டுமென்றால் மத்திய அரசினரால் அமைக்கப்பட்ட சிவராமன் கமிட்டியும் மாநில அரசினால் அமைக்கப்பட்ட சந்தானம் கமிட்டியும் எடுத்துக் கூறிய பரிந்துரைகளை முழுமையாக அமல் படுத்தியிருந்தால் ஒருவேளை நெசவாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டிருக்க முடியும் என்று கருதுகிறேன்.

ஆனாலும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் இயங்கும் இன்றைய தமிழக அரசு மேற்சொன்ன குழுக்களின் பரிந்துரைகளில்

சிலவற்றை ஏற்று அவைகளை அமுல் படுத்தி வருகின்றது என்பதையும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தியாவில் கைத்தறி துறைக்கு வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு அமைப்பு முறை தமிழகத்தில் மட்டும் தான் இருக்கிறது என்று நாம் பெருமைப் பட நமக்கு உரிமை இருக்கிறது. காரணம் ஆறாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள் 60 சதவித நெசவாளர்களைக் கூட்டுறவின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற மத்திய அரசின் குறியீட்டைத் தாண்டி சுமார் 65 சதவீத நெசவாளர்களைக் கொண்டு வந் துள்ளோம் இதன்காரணமாக இன்றுதமிழ கத்தில் சுமார் 1500 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின் றன இவைகளுக்குத் தேவையான நூல் களை உற்பத்தி செய்ய 12 கூட்டுறவு நூற் பாலைகள் இயங்கி வருகின்றன, புதியதாக மேலும் 5 கூட்டுறவுநூற்பாலைகள் அமைக் கப்பட்டு இவ்வாண்டு இறுதிக்குள் உற்பத்தியை துவங்க இருக்கின்றன இந்த அளவு கூட்டுறவு நூற்பாலைகள் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. பிரதம சங் கங்கள் உற்பத்தி செய்யும் துணிகளை வாங்கி விற்பனை செய்ய 600க்கு மேற் பட்ட விற்பனை நிலையங்களைக் கொண்ட மாநில சங்கமும் (கோ-ஆப் டெக்ஸ்) வேறு எந்த மாநிலத்திலும் இல்லை, நெசவாளர்களுக்குக் குடியிருப்பு களை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டமும் தமிழகத்தில்தான் செயல்பட்டு வருகிறது. இது போன்ற இன்னும் பல வசதிகள் இருந்தும் நெசவாளர்களின் நிலை ஏன் "நித்திய கண்டம் பூரண ஆயுசு" என்றுள்ளது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்

கைத்தறித் துறைபானது ஆலை மற்றும் விசைத்தறிகளின் போட்டிகளிலிருந்து இன்னும் விடுபடவில்லை. உரிமம் பெறாத விசைத்தறிகள் நாள் தோறும் பெருகிக் கொண்டே வருகின்றன இந்த விசைத்தறி களுக்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு ஒரு முறை அங்கீகாரம் அளித்தும் உரிமை வழங்குவது வாடிக்கையாக இருந்து வருகிறது. மத்திய அரசால் அமைக்கப்பட்ட கனுங்கோ கமிட்டி ஒரு விசைத்தறி 10 கைத்தறிகளை அழித்து விடுகிறது என்று தன்னுடைய அறிக்கையில் கூறியுள்ளது. விசைத்தறி களின் வளர்ச்சி கைத்தறிக்கு மட்டு மல்லாது ஆலைகளுக்கும் ஒரு சவாலாக அமைந்துவிட்டது. ஆகவே உரிமம் வழங்கு வதை உடனடியாக நிறுத்தவேண்டும் மின் வெட்டு உள்ள இன்றைய நிலையில் தமிழக அரசானது உடனடியாக கைத்தறி நெச வாளர்களுக்கு சலுகைச் விலையில் நூல் கிடைக்க ஏற்பாடு செய்யவில்லை என்றால், விசைத்தறியானது கைத்தறிகளை அழித்து விடும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எனவே கைத்தறி யில் உபயோகப்படுத்தப்படும் சிட்டம் நூல்களுக்கு (Hank Yarn) உடனடியாக விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அல்லாமல் நூல் வங்கி (Yarn Bank) ஒன்று ஏற்படுத்தி நூல் விலை குறை யும் நேரத்தில் அதிகமாக வாங்கி வைத்து, விலை ஏறும் காலத்தில் குறைந்த விலையில் வினியோகம் செய்வதால் ஒரே சீரான விலையில் ஆண்டு பூராவும் நூல் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறேன் அதோடு அல்லாமல் கைத்தறிகளுக்கென்று ஒதுக்கப் பட்ட ரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதைத் தடுக்க தனிப்பிரிவு ஒன்று ஏற் படுத்தி விசைத்தறிகளைத் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மைய அரசு 1984 ம் ஆண்டை கைத் தறி ஆண்டு எனப் பிரகடனப் படுத்தி யிருந்தும் எந்தவித நடவடிக்கையும் இது வரை எடுக்கப்படவில்லை. உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுத்தால் உள் நாட்டிலும், வெளிநாட்டிலும், வியாபாரம் பெருகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கூட்டுறவு சங்கங் களில் உள்ள நெசவாளர்களின் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந் துள்ள ஒருவர் 55 வயதுக்குள் இறந்து போனால் அவர்கள் குடும்பத்துக்கு ரூ. 3000/— வழங்கப்படுகிறது. இந்த தொகையை ரூ. 10,000/— மாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்றும், அதோடல் லாமல் 55 என்று வயது வரம்பு இருப்பதை 65ஆக உயர்த்தவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். திட்டத்தில் சேர்ந்தவர் கள் 65 வயதுக்கு முன்பாகவோ அல்லது அதற்கு பிறகோ திட்டத்திலிருந்து விலக விரும்பினால் அவர்களுக்குத் திட்டத்தில் சேர்ந்த காலத்தைக் கணக்கிட்டு அதற்

கேற்றவாறு ஒரு தொகை வழங்கவும் திட்டத்தில் வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கும் திட்டத்தில் ஒரு வீட்டிற்குகடன்மற்றும் மான்யமாக ரூ.8000/-ம் என்று இருந்ததை ரூ 12,000/- என்று வழங்க ஆணை பிறப்பித்த மத்தியமாநில அரசுக்கு நன்றி சொல்லுகின்ற அதே நேரத்தில் வட்டி விகிதத்தை 4% ஆக குறைக்க வேண்டும் என்றும் மான்யத் தொகையை மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்காக வழங்க வேண்டும் என்றும் கடன் தொகையை 25 ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இருபது ஆண்டுக்கு முன் மேற்கண்ட முறையில் அமுல் படுத்தப்பட்ட வீட்டு வசதித் திட்டம் நெசவாளர்களுக்கு தவணைத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கு மிகவும் எளிதாக இருந்தது. ஆனல் இன்றைய திட்டப்படி நெசவாளர்கள் மாதந்தோறும் திருப்பிச் செலுத்த வேண்டிய தவணைத் தொகை அதிகமாக இருப்பதால் நெசவாளர்களுக்குப் பெரும் சுமையாக இருக்கிறது. தமிழக அரசு வட்டி விகிதத்தைக் குறைத்து தவணைக் காலத்தை அதிகப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் தேக்கமடைந்து நெசவாளர்களின்வாழ்வில் இருள் சூழ்வதும் அதன்பின் அரசின் நிதி உதவியுடன் நிலைமை சீரடைவதும் வாடிக்கையான ஒன்றாகிவிட்டது. இந் நிலையைப் போக்க அரசுத் துறைகளின் துணித் தேவைகளை கைத்தறித் துணிகளைக் கொண்டே பூர்த்தி செய்து அதன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பும் உறுதி செய்யப்பட்ட வருமானமும் என்ற நிலையினை அரசு ஏற்படுத்தித்தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் செய்யும் தொழிலின் காரணமாக காச நோய், மூல நோய் போன்ற கொடிய நோய்களுக்கு சுலபமாக இலக்காகிறார்கள் அவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் தனி இடம் ஒதுக்கி இலவச சிகிச்சை அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

"இந்திய கிராமங்களின் தோற்றத்தை மாற்றி அவைகளை எல்லா வகையிலும் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கூட்டுறவு அமைப்பும், ஒரு பஞ்சாயத்து ராஜ்யமும், ஒரு பள்ளிக் கூடமும், அவசியம் இருக்க வேண்டும் கூட்டுறவு முறைகளினால் தான் நாடு முன்னேற முடியும் என்ற என் நம்பிக்கையை, எனக்கு ஏற்பட்டு வரும் அனுபவங்கள் மேலும் மேலும் வலியுறுத்துவனவாக இருக்கின்றன" மனிதருள் மாணிக்கம் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் கருத்துப்படி கூட்டுறவு அமைப்பின் கீழ் கைத்தறிகளை அதிகரித்து அவைகளுக்குத் தாராளமாக நிதி உதவி வழங்கிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன் குறிப்பாக மாநில சங்கத்திற்கு Revolving Credit அனுமதிக்கப்பட வேண்டும் என்று சந்தானம் கமிட்டி சிபாரிசு செய்திருந்தது. சந்தானம் கமிட்டி சிபாரிசுகளை கொள்கை அளவில் முழுமையாக ஏற்றுக்கொண்ட அன்றைய அரசு மாநில சங்கத்துக்கு இத்தகைய கடன் வசதியை செய்து கொடுக்காததால் மாநில சங்கம் பிரதம சங்கங்களுக்குப் பணம் பட்டுவாடா செய்வதில் பெரிதும் தாமதமேற்படுகிறது. இதன் காரணமாக பிரதம சங்கங்கள் தங்களுடைய நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புக் கொடுக்கமுடியாத நிலை ஏற்படுகிறது. இந் நிலையை அகற்றத் தமிழக அரசு மாநில சங்கத்திற்கு (கோ-ஆப்டெக்ஸ்) உடனடியாக Revolving Credit தொகை ரூபாய் ஐம்பது கோடி வட்டியில்லாக் கடனுக அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழில் அரசாங்கத்தினுடைய பாதுகாப்பையும் உதவியையும் பெறுவதற்குரிய காரணங்கள் பல இருக்கின்றன. குறிப்பாகஇத்தொழில் விவசாயத்துக்கு அடுத்தபடியாக ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது

இன்னும் பலருக்கு வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது நமது பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரால் அறிவிக்கப்பட்ட புதிய 20 அம்சத் திட்டம் கைத்தறித் தொழிலுக்கு ஒரு பெருமைமிக்க இடத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது. அதனல் நெசவாளர்களுக்கு எல்லாவித உதவிகளையும் பாதுகாப்பினையும் அளிக்க வகைசெய்துள்ளது.

தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 30 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் கைத்தறித் தொழிலின் சமூக பொருளாதார முக்கியத்துவத்தை உணர்ந்து இந்த தொழிலுக்கு வேண்டிய பாதுகாப்பினையும் உதவிகளையும்தமிழகஅரசு தாராள மனதுடன் தந்துதவிடவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டில் உற்பத்தியாகும் துணிகளில் மூன்றில்ஒரு பகுதியைக்கைத்தறி உற்பத்தி செய்கிறது. அந்நிய நாடுகளுக்குக் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதின்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 380 கோடி ரூபாய்க்குமேல் அந்நிய செலவாணியை ஈட்டித் தருகிறது. இதிலும் ஏற்றுமதி ரக கைத்தறித் துணி பெரும்பகுதி தமிழகத்தில்தான் உற்பத்தியாகிறது.

சமீப காலத்தில் பாலியஸ்டர், சூட்டிங் சர்ட்டிங், சேலை ரகங்கள் கைத்தறித் துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் துணி வகைகளுக்குப் பொது மக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது தமிழ் நாட்டில் மட்டும் சுமார் 10 லட்சம் மீட்டர் பாலியஸ்டர் துணிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்திச்செலவில் கைத்தறிக்கும் ஆலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை ஈடுகட்டும்வகையில் பாலியஸ்டர் நூல்களுக்கு எக்சைஸ் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டால் கைத்தறி பாலியஸ்டர் ரகத்துணிகளை அதிகஅளவில் உற்பத்தி செய்து விற்பனையைப் பன்மடங்கு அதிகரிக்கும் வாய்ப்புகள் உள்ளன. கைத்தறி பருத்தி ரகத் துணிகள் இயந்திரங்களின் மூலம் பதப்படுத்துப்படும்பொழுது அவைகளுக்கு எக்சைஸ் தீர்வையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கைத்தறி பாலியஸ்டர் ரகத்துணிகளை பதப்படுத்தினாலும் எக்சைஸ் தீர்வையிலிருந்து விலக்களித்தால் மேலும் விற்பனையை அதிகரிக்க முடியும் இந்தக் கோரிக்கைகளைத் தமிழக அரசு மைய அரசிடம் எடுத்துக்கூறி மேற்கண்ட சலுகைகளைப் பெற்றுத்தந்திட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்

கைத்தறி நெசவாளர்களை முறையான ஒரு அமைப்பின்கீழ் கொண்டுவந்தால்தான் அவர்களுக்குத் தேவையான நிதிவசதிகள், மூலப் பொருட்களை சீரான முறையில் வினியோகித்தல் மற்றும் அவர்களது உற்பத்திக்கு விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவைகள் சாத்தி மாகும் இவ்வசதிகளைப்பெறக் கூட்டுற அமைப்பே சிறந்தமுறை என்பது இதுவ அமுல் நடத்திய திட்ட அனுபவங்க நமக்கு உணர்த்துகின்றன.

நெசவாளர்கள் அனைவரும் தங்களை கூட்டுறவுச் சங்கங்களில் இணைத்து கொண்டு அதன்மூலம் சமூகப் பொருள தார முன்னேற்றமடைய வழிவகை கா வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறப்புத் தள்ளுபடி காலத்தை 3 நாட்களிருந்து 60 நாட்களாக உயர்த்தி கொடுத்த மத்திய மாநில அரசுகளுக் நெசவாளர்களின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நெசவுத் தொழிலை பிரதான தொ லாகக் கொண்டுள்ள சமூகங்கள் அனை தையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூ மாக அறிவித்து நெசவாளர்களுக்கு அவர்கள் குழந்தைகளுக்கும் கல்வி மற்று சமூக பொருளாதாரச் சலுகைகள் கிடைக்கத் தமிழகஅரசு உதவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிசைத் தொழிலான கைத்த நெசவுத்தொழில் செய்யும் நெசவாளர்கள் வீடுகளுக்கு மின் கட்டணம் விதிக்கு பொழுது வியாபார நிறுவனங்களுக்கு விதிக்கும் கட்டண விகிதங்களில் வசூலிக் கப்படுகிறது பல வகையான சலுகைகள் அளித்து நெசவாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டிய நிலையில் இத்தகைய உயர் வான மின் கட்டணம் நெசவாளர்களைப் பெரிதும் பாதிக்கிறது. எனவே விவசாயி களுக்கு வழங்குவதுபோல் நெசவாளர் களுக்கும் சலுகைக் கட்டணத்தில் மின் வசதி அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் தேவை களில் சிலவற்றை மட்டும் எடுத்துக்கூறி இருக்கிறேன்,

அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் நெச வாளர்களின் மேற்கண்ட கோரிக்கைகளை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம் ஜி ஆர். அவர்களிடம் எடுத்துக்கூறி நெசவாளர் களின் வாழ்வில் ஒளியேற்றவும் அவர்கள் வாழ்க்கைத்தரம் உயரவும் உதவவேண்டும் என்றும் அனைத்து நெசவாளர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

புதுயுகம் காணப் புறப்பட்டு வருகவே!

P. வெங்கடசுப்பிரமணியன், M.A., B.L.,
வழக்கறிஞர்,
சட்டப்பேரவை உறுப்பினர்,
காஞ்சிபுரம் தொகுதி.

1. சிங்கார வேலன் செந்தமிழின் சீலன்
செங்கரம் திகழும் தங்கத் திருவேலின்
மங்காத சிறப்பாய் மாட்சிமை கொண்டு
மனமொன்றி வாழ மகிழ்வுடனே வாரீர்!

2. நம்மினத்துப் பாவலன் தான் ஒட்டக் கூத்தன்
நற்றமிழால் பண்ணிசைத்துப் புகழைச் சேர்த்தான்
நாமெல்லாம் ஒருங்கிணைந்து வாழ்ந்திருந்தால்
நம்மினத்துப் பெருமைகட்கு உயர்வு சேர்ப்போம்!

3. புதுவை தந்த புரட்சிக்கவி பாரதிதாசன்
பெருமை கண்ட நம்மினத்தில் பிறந்தான்
புதுமை பலவும் பாவினில் வரைந்தான்
அருமைத் தமிழின் அணைப்பிலே சிறந்தான்!

4. ஐங்கரனின் வழித்தோன்றி முதலியர் ஆனோம்
அஞ்சாமல் நாளும் நல்வழியே நாடுவோம்
செங்குந்தர் சிறப்புக்கு சிவபாலன் துணையிருக்க
செல்லும் இடமெங்கும் செயக்கொடியே நாட்டுவோம்!

5. நெய்திடும் தொழிலில் நலிந்திடும் நம்மினம்
நற்பயன் நாடி நல்வழி காணவே
பெய்திடும் மழையால் பெருகிடும் பயிராய்
பேதங்கள் மறந்து பெருமையே காண்போம்!

6. சிதறிடும் விண்மீன் கூட்டம் போலின்றி
செங்கதிர் ஒளியென ஒன்றாய்ச் சேர்ந்தே
பதறிடும் மனதின் பயத்தினைக் களைந்து
பரம்பரை குலத்தின் பாசறை காப்போம்!

7. காவலின் அரணாய் ஒற்றுமை காத்து
கடமையைக் கருதி சலுகையைப் பெறவே
சேவலின் குரலால் விடிகின்ற பொழுதாய்
செங்குந்தர் குரலால் உரிமையைப் பெறுவோம்!

8. உலவும் கதிரெனப் பாரினில் உயர்வோம்
நிலவின் ஒளியென நெஞ்சம் நிறைவோம்
மலரின் மணமென உள்ளம் மகிழ்வோம்
உலகம் வியந்திட ஒற்றுமை வளர்ப்போம்!

9. புலிக்கொடி மரபிலே பிறந்துவந்த படைக்குலமே
பெருமைமிகு கீர்த்திதனை பெற்றிலங்கும் விளைநிலமே
பொலிவோடு ஒன்றுபட்டு பொற்காலம் காணவே
புறப்பட்டு வருகவே புதுயுகம் படைக்கவே!

10. வீரத்தைப் பறைசாற்றும் வெற்றிக்குச் செங்குந்தம்
விவேகத்தை வளர்த்திடவே விரைகின்ற செங்குந்தர்
சோரத்தை சொத்தையாக்கிச் சுகபூமி யாளவே
செங்குந்தப் பெருங்குலமே சோர்வின்றி ஓடிவா!

வேலை வணங்குவதே வேலை

வேலை வணங்குவதே வேலை—கந்தன்
வேலை வணங்குவதே வேலை

குன்று தோராடிச் சென்று—எந்தன்
குறை தீரப் பாடி நின்று (வேலை)

நன்மதி பெற வேண்டி நாடி—என்றும்
நிம்மதி தரவேண்டித் தேடி (வேலை)

பிறவாத பேரின்பம் அளித்து—உம்மை
மறவாத நல்நெஞ்சம் அளித்து (வேலை)

காலன் மறைந்தோட அறவே—நல்ல
காலம் விரைந்தோடி வரவே (வேலை)

தனக்குவமை இல்லாத வல்லவன்—நம்
மனக்கவலை மாற்றவந்த நல்லவன் (வேலை)

திரட்டு:- அரிமா. A. சம்பந்தம்
மாநாட்டுப் பொதுச்செயலர்.
ஆதாரம்:- சோழலிங்கபுரம் கும்பாபிஷேக மலர்

அமரர். மா. சாமிநாத முதலியார், காஞ்சிபுரம்.



ஊர்வலத்தில் தலைவர்கள் வரும் அலங்காரத்தேர் முன் அன்பர்கள்



திரு. P. ராமசாமி முதலியார், B A., B L
தலைவர், சேலம் மாவட்ட
செங்குந்த மகாஜன சங்கம்

திரு T. V. இராஜேஸ்வர் I A.S.
ஆளுநர்,
அருணாசல பிரதேசம்.

கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்

சித்தாந்த வித்தகர்
ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,
(ஆசிரியர், திருக்கோயில், சென்னை)

முன்னுரை :

தமிழகத்தில் வாழ்ந்திருந்த சிறந்த பெருங் கவிஞர்களின் வரிசையில், ஒட்டக் கூத்தர் ஒருவர். கூத்தர் என்பது, இவருடைய இயற்பெயர். இது தில்லை நடராசப் பெருமானுக்கு உரிய பெயர். "தில்லைப் பயில்கூத்தன்" என மணிவாசகர் ஆங்காங்கே குறிப்பிடுதல் காணலாம். இவரைக் கூத்த முதலியார் எனவும் நூல்கள் வழங்கும். ஓட்டம் (பந்தயம்) வைத்துப் பாடுதலில் வல்ல பெருங் கவிஞராகத் திகழ்ந் தமையின், இவருக்கு ஒட்டக்கூத்தர் என்னும் காரணச் சிறப்புப்பெயர் வழங்குவதாயிற்று.

கவிதை இயற்றும் திறனில் பேராற்றல் மிக்குத் திகழ்ந்ததனால் கவிராட்சசர் என்றும், கவிஞர்கள் பலரும் போற்றும் தலைமைப்பாடு வாய்ந்து விளங்கியதனால் கவிச்சக்கரவர்த்தி என்றும், சோழ அரசர்கள் பாற் காளம் என்னும் விருதுபெற்றமையாற் காளக்கவி என்றும், வடமொழி தென்மொழி களிலும் மற்றும் பல்வேறு கலைகளிலும் நல்ல தேர்ச்சியுற்றிருந்தமையாற் சர்வக்ஞ கவி என்றும், இவர் பல சிறப்புப் பெயர்கள் பெற்றிருந்தார். இவர்தம் கவிதைகள், சொற்செறிவும் பொருட்செறிவும் அமைந்து மிக்க மிடுக்கான நடையுடையனவாதலின், இவருக்குக் கௌடப்புலவர் எனவும் ஒரு பெயர் உண்டு.

இவர் விக்கிரம சோழன் (கி. பி. 1118-1133), இரண்டாம் குலோத்துங்கன் (கி. பி. 1133-1150), இரண்டாம் ராசராசன் (கி. பி. 1146-1163) என்னும் மூன்று சோழப் பேரரசர்களின் காலத்தும் வாழ்ந்திருந்தவர்; அவர்களின் அவைக்களப் புலவராக விளங்கி யவர். அவர்களாற் பெரிதும் மதித்துப் போற்றப்பெற்றவர்.

புகழ்ச்சிப் பாடல் :

ஒரு சமயம் இரண்டாம் குலோத்துங்க னின் அவைக்களத்திற்குச் சென்ற இவர், அவ்வரசனைச் சிறப்பித்து,

"ஏதேனும் குறையுள்ளவர்கள் தமது குறையைத் தெரிவித்துத் தீர்த்துக்கொள்ளு வதற்காகத் தனது அரண்மனையின் வாயி லிற் கட்டப்பெற்றுள்ள ஆராய்ச்சி மணியின் நாக்கானது, யாருக்கும் எந்தக் குறையும் நேராமையினால், அசைக்கப் பெறாமலே கிடக்கும்படி, உலகத்தை எல்லாம் தனது அருளறம் பூண்ட ஆட்சியாகிய வெண் கொற்றக் குடையின் நிழலின்கண் இன்புற் றுத் தங்கியிருக்குமாறு செய்த அரசர் பெருமான்"

என்னும் கருத்து அமைய,

"ஆடும் கடைமணி நா அசையாமல்
அகிலம் எங்கும்
நீடும் குடையில் தரித்த பிரான்..."

எனத் தொடங்கி ஒரு பாடலைப் பாட முற்பட்டார். தனது ஆசிரியர் ஒட்டக்கூத்தர் தன்னைப் பலகாற் பெரிதும் புகழ்ந்து பாடிக் கொண்டிருத்தலைத் தனது பணிவுடைமை காரணமாக விரும்பாத குலோத்துங்க சோழன், தன்னை அவர் புகழ்ந்து பாடுவ தற்கு முற்படும் பாடலையே, தான் அவரைப் புகழ்ந்து பாடும் முறையில் மாற்றி அமைத்து தனக்கு அவர்பால் உள்ள மிக்க மதிப்பினை யும் பெரும் பக்தியினையும் புலப்படுத்த விரும்பினான். ஆதலின், உடனே அவர் பாடியதனையே அடியொற்றித் தொடர்ந் தான்.

"...என்று என்னை வாழ்த்தி, நாள் தோறும் புதிய சொற்பொருட் சுவை நலங் கள் அமையுமாறு பாடுகின்ற, கவிஞர் பெரு மான் ஆகிய ஒட்டக்கூத்தரின் திருவடித் தாமரைகளே, அன்புடன் தனது தலையின் கண் சூடிக்கொள்ளுகின்ற குலோத்துங்க சோழன் என்று உலகத்தார் என்னைக் கூறுவார்கள்"

என்னும் சிறந்த இனிய கருத்து அமையும்படி

"—என்று, நித்தம் நலம்
பாடும் கவிஞர் பிரான் ஒட்டக்கூத்தன்
பதாம்புயத்தைச்
சூடும் குலோத்துங்க சோழன் என்றே
எனைச் சொல்லுவரே"

என்று பாடி முடித்தான்; தனது ஆசிரியர் ஆகிய கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பெருமானைப் புகழ்ந்து, போற்றி வணங்கி மகிழ்ந்தான்!

இவ்வரலாற்று நிகழ்ச்சியினால், குலோத் துங்கசோழனின் குணச் சிறப்பும், அவன் தனது ஆசிரியரும் அவைக்களப் புலவரும் ஆகிய ஒட்டக்கூத்தர்பாற் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் எத்தகையன என்று உணரலாம்.

தனிச் சிறப்பு :

தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த சிறந்த பெருங்கவிஞர்கள் பலரும் தமக்கென ஒவ் வொரு துறையில், தனிச் சிறப்பும் தேர்ச்சி யும் பெற்றிருந்தனர். வெண்பாப் பாடுதலில் வல்லவர் புகழேந்திப் புலவர். பரணி என்னும் நூலைப் பாடுதலில் தேர்ச்சி மிக்க வர் செயங்கொண்டார்; விருத்தம் என்னும் செய்யுள்வகைகளைக் கையாளுவதில் ஒப்புயர் வற்றவர் கம்பர்; கலம்பகம் பாடுதலில் இணையற்றவர்கள் இரட்டைப் புலவர்கள்; வசை பாடுதலில் வல்லமை வாய்ந்தவர் காளமேகம். சந்தப் பாடல்களைத் தகவுறப் பாடும் திறமை மிக்கவர் படிக்காசுப் புலவர். இங்ஙனம், இவர்களைப் போன்ற நிலையில், கோவை உலா அந்தாதி என்னும் செந்தமிழ்ப் பனுவல்களைச் சிறப்புறப் பாடுதலில் தேர்ச்சி மிக்கவர். ஒட்டக்கூத்தரேயாவர். இதனைப் பின்வரும் தனிப்பாடற் செய்யுள் கொண்டு இனிது தெளியலாம்.

"வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்கு ஓர்
செயங்கொண்டான்; விருத்தம் என்னும்
ஒண்பாவிற்கு உயர் கம்பன்; கோவை உலா
அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்;
கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்;
வசைபாடக் காளமேகம்;
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசர்
அலால் ஒருவர் பாடொணாதே"

—பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

மலரி வரும் கூத்தன் :

ஒட்டக்கூத்தரின் கவிதைகள் ஓசைநயம் மிக்குச் செவிக்கு இனிமை செய்பவை; திருத்தமான கருத்தும், கலைநலச் செம்மை யும் செறிந்தவை; கற்பவர்களின் உள்ளத்திற் கவினுறப் பதிந்துநிற்பவை; நினைத்தொறும் எல்லையில்லா இன்பம் விளைவிப்பவை. இவ் வாற்றாற் கூத்தருடைய வாக்கும், மாதர்தம் நோக்கும் (கண்களும்) தம்முள் ஒத்த இயல் புடையவை. மகளிரின் கண்களும் சென்று செவியளக்கும் தன்மையன; செந்நிறமுடை யன; சிந்தையுள்ளே நின்று, அளவில் இன்பம் நிறைப்பன. இப்பண்புகள், ஒட்டக்கூத்தரின் வாக்காகிய கவிதைகளிலும் இயைந்து காணப்படும். எனப் பின்வரும் தண்டியலங் காரச் செய்யுள் ஒன்று தகவுறச் சாற்று கின்றது.

சென்று செவியளக்கும்
செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவில் இன்பம்
நிறைப்பவற்றுள்—ஒன்று
மலர் இவரும் கூந்தலார்
மாதர்நோக்கு, ஒன்று
மலரிவரும் கூத்தன்தன் வாக்கு!

இச்செய்யுள், ஒட்டக்கூத்தர் தோன்றிய ஊர், மலரி என்று குறிப்பிடுவதுடன், அவ்வூரின் பெயரைச் சிலேடை நயம் அமைய 'மலரி வரும் கூத்தன்' எனவும், 'மலர் இவரும் கூந்தலார்' எனவும் வழங்கியுள்ள சதுரப்பாடு, பெரிதும் மகிழத்தக்கது. 'மலரி' என்பது திருச்சிராப்பள்ளிக்கு அணித்தே உள்ள திருவெறும்பியூர் என்னும் தலத்திற் குரிய பெயராதலைக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

கலைமகள் கோயில் :

திருவெறும்பியூரிற் பிறந்த ஒட்டக்கூத்தர் சீர்காழி, திரிபுவனை முதலிய தலங்களிலும் சிலசில காலம் வதிந்ததாகத் தெரிகின்றது. இந்நாளில் தஞ்சை மாவட்டத்தில் பூந்தோட்டம் இருப்புப் பாதை நிலயத்திற்கு அருகே, அரிசில் ஆற்றங்கரையில் உள்ள கூத்தநல்லூர் (கூத்தனூர்) என்பது இவருக்கு மேற்குறித்த சோழவேந்தர்கள் மூவருள் ஒருவரால் முற்றூட்டாக அளிக்கப்பெற்றது. தமது பிற்கால வாழ்க்கையின் பெரும் பகுதியை ஒட்டக்கூத்தர் இவ்வூரிலேயே கழித்தனராதல் வேண்டும். அங்கே இப்போதும் நல்ல நிலையில் உள்ள கலைமகளின் திருக்கோயில் இவர் அமைத்ததேயாகும்.

"ஆக்கம் பெருக்கும் மடந்தை வாழியே!
ஆற்றங்கரைச் சொற்கிழத்தி
வாழியே!
கோக்கும் தமிழ் கொத்தனைத்தும்
வாழியே!
கூத்தன் கவிச்சக்கரவர்த்தி
வாழியே!"

என வரும் தக்கயாகப் பரணிப் பாடலில், "ஆற்றங்கரைச் சொற்கிழத்தி" எனக் குறிக்கப்படுபவள். இன்றும் கூத்தனூர்க் கோயிலில் உள்ள கலைமகளே ஆவள் என்பது இங்கு நாம் அறிந்து மகிழ்தற்குரியது. ஒட்டக்கூத்தரை நாம் நேரிற் கண்டு மகிழ இயலாவிட்டாலும், அவர் அமைத்தருளிய கோயிலையேனும் நாம் கண்டு மகிழலாம் அன்றோ!

போலிக் கதைகள் :

ஒட்டக்கூத்தரைப் பற்றிப் பொருந்தாத பல பொய்க் கதைகள் புனையப்பட்டு, அவர் தம் அரும்பெறற் புலமைக்கும், அளப்பரும் பெருமைக்கும் மாசுகள் கற்பிக்கின்றனர். கம்பர் 'தியாகவிநோதன்' என்னும் சிறப்புப் பெயர் கொண்ட மூன்றாம் குலோதுங்கன் (கி. பி. 1178-1216) காலத்தவர். புகழேந்திப் புலவர், மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி. பி. 1268-1286) காலத்தவர், கம்பரும், புகழேந்திப்புலவரும், ஒட்டக்கூத்தருக்குப் பின்னர்த் தோன்றி வாழ்ந்து வந்தவர்கள் என்பது, தக்க சான்றுகளின் வாயிலாகத் தெளியப்பட்டிருத்தலின், அவ்விருவரோடு தொடர்புபடுத்தி, ஒட்டக்கூத்தரை இழிவுபடுத்தும் முறையிற் புனையப் பெற்றுள்ள போலிக்கதைகள், அறிஞர்களால் வெறுத்து ஒதுக்கப்படத் தக்கனவேயாகும்.

ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பெருந்தகை, விக்கிரமசோழன் — இரண்டாம் குலோத்துங்கன் — இரண்டாம் இராசராசன் என்னும் சோழப் பேரரசர்கள் மதித்து, வணங்கிப் போற்றத்தக்க நிலையில் விளங்கியவர், அரும்பாக்கிழான் மணவிற் கூத்தன் காலிங்கராயன், திருச்சிற்றம்பலமுடையான் பெருமாள்நம்பி, புதுவைக் காங்கேயன், திரிபுவனத்துச் சோமன் முதலிய பெருமக்கள், பலருடைய மதிப்புக்கும் போற்றுதலுக்கும் கூட உரியவராகத் திகழ்ந்திருந்தார், நெற்குன்றவாணமுதலியார் நம்பிகாளியார் என்னும் புலவர்கள், இவர்பாற் பெருநட்புரிமை பூண்டிருந்தனர். கலிங்கத்துப் பரணியைத் "தென்றமிழ்த் தெய்வப் பரணி" என்றும், "பாடற் பெரும்பரணி" என்றும், அதனைப் பாடிய செயங்கொண்டார் என்னும் புலவரைத் "தேடற்கு அரும் கவி; கவிச்சக்கரவர்த்தி என்றும் புகழ்ந்து, பாராட்டும் பெருந்தகைமையுடையவர் ஒட்டக்கூத்தர் என்பது புலனாகின்றது. இத்தகைய உத்தம குணம் உடைய ஒரு பெருஞ் சான்றோரை, இழிந்த பொறாமைக் குணமுடையவர் என்று பொருத்தமற்ற போலிக் கதைகளைப்

புனைந்து இகழ்தல், கழுவாய் இல்லாப் பழியும் பாவமுமே பயப்பதாகும்.

பண்பு நலங்கள் :

தமிழில் உள்ள தண்டியலங்காரம் என்னும் இலக்கண நூலை இயற்றியவரும், தக்கயாகப் பரணிக்கு உரைவகுத்தவரும், ஆகிய இருவரும், இவர்தம் அரும்பெறல் மாணவர்களே ஆவர், இவ்வாற்றால், மாணவர் பலரைப் பயிற்றிப் பேணிப் புரந்-தருளிய மாட்சிமையும், இவர்க்கு உரித்-தாதலை நாம் உன்னியுணர்ந்து மகிழலாம்.

ஒட்டக்கூத்தர் கல்வி என்னும் பல்கடல் கடந்தவர்; புலவர்கள் பிறர் சிலர் போல வறுமையில் மறுகி உழன்றவர் அல்லர், பேரரசரும் மதித்து வணங்கிப் போற்றத் தகுந்த நிலையிற் பிறங்கியவர்; செல்வவளம் பெற்றுத் திகழ்த்தவர்; மாணவர் பலரைப் பேணிப் புரந்தவர்; செய்ந்நன்றி மறவாத இயல்பினர்; சிவபிரான் திருவடி மறவாத சிந்தையும் சீலமும் உடையவர். தக்கயாகப் பரணி, மூவருலா, ஈட்டியெழுபது, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், அரும்பைத் தொள்ளாயிரம் காங்கேயன் நாலாயிரக் கோவை என்னும் நூல்களை இயற்றியவர்.

முடிவுரை :

இவர் இயற்றிய நூல்களுள் சமயத் துறையில்தக்கயாகப் பரணியும், வரலாற்றுத் துறையில் மூவருலாவும் சிறப்புடையனவாக அறிஞர்களாற் போற்றப் பெற்று விளங்கி வருகின்றன. இவருக்குத் திருஞானசம்பந்தர் திறத்தும் அவர் தம் தேவாரப் பாடல் களிலும் இருந்த எல்லையற்ற ஈடுபாடும் பத்தியும் புலப்படுகின்றது. திருஞான சம்பந்தரை இவர் முருகனின் அவதாரம் என்றே கருதிச் சிறப்பித்துப் போற்றி உள்ளார். இவர்தம் அளப்பரும் புலமையும் அருங்கவித் திறனும், அரசரிய வீற்றிருந்த வாழ்வும், சிவநெறிப் பற்றும் செந்தமிழ் ஆர்வமும், உலகியலுணர்வும் பிறவும் நம்மனோர் அனைவரும் நயந்து உணர்ந்து போற்றத்தகுவன ஆகும்.

"கல்விக்கு அரசு; கவிராச சிங்கம்;
கலைச்சலதி;
வெல்விக்கும் வேற்கைநற் சோழர்க்கு
உயிர்த்துணை; மெய்ம்மைநெறி
புல்விக்கும் சொற்போர்ப் புலி; புலவர்
ஏறு; பூங்கமலச்
செல்விக்குச் சேய்; ஒட்டக்கூத்தர்
சிறப்பெலாம் செப்பரிதே"

செங்குந்தத்தின் சிறப்பு

உருக்கொடு பணியாதாரை உளத்தில்ஐந்
தெழுத்தை எண்ணிப்
பெருக்கொடு தவளநீற்றைப் பேணியே
அணியா தாரைத்
தருக்கொடு நின்றுகண்ணீர் ததும்பமுன்
ஆடா தாரைத்
திருக்கோயில் வலம்வராரைச் சினத்தொடு
பொரும்**செங் குந்தம்**.

கூவிளை இதழிதும்பை கொண்டருச்
சித்த பேர்க்கும்
மூவர்தம் பாடல்ஓதி முன்னின்று
பணிந்த பேர்க்கும்
ஆவலோ டைந்தெழுத்தை அகத்துளே
நினைந்த பேர்க்கும்
தேவர்நா டாளவைக்கும் திருக்கைவேல்
துணைச்**செங் குந்தம்**.

—ஈட்டியெழுபது -ஒட்டக்கூத்தர்.



நமது கொடி வரலாறு

P. S. பாலசுப்பிரமணிய முதலியார்,
மயிலை, சென்னை.
(14-வது மாநில மாநாட்டில் குலக்கொடி ஏற்றியவர்)

நமது கொடிக்கு புகழ்மிக்க வரலாறு உண்டு. வெள்ளை நிறத்துணியின் நடுவே குந்தப் படையும், அதன் வலப்புறம் சேவலும், இடப்புறம் புலியும் சின்னங்களாக அமைந்திருப்பதுதான் நமது செங்குந்தர்க்குரிய கொடி, நம் இயக்கத்தின் குறிக்கோள்களை விளக்குபவன கொடியின் இச் சின்னங்களும், நிறமும்.

குந்தச் சின்னம்

குந்தம் என்பது வேல். ஈட்டி எனவும் பொருள் தரும். அது முற்காலத்தில் நமது மூதாதையர்களான கயிலாயப் பரம்பரையில் வந்த வீரவாகுத் தேவர் உள்ளிட்ட நவவீரர்கள் கைகளில் வீரத்துடன் திகழ்ந்தது. சூரபத்மன், சிங்கமுகன், தாரகாசுரன் முதலிய அசுரர்களை அழித்தது. பிற வேந்தர்களை வென்றது முருகவேளின் அன்புக்குப் பாத்திரமான முசுகுந்தச் சோழனை சக்கரவர்த்தியாக்கிய சிறப்பினையுடையது. எனவே நாம் வீரவாகுத்தேவர் வழிவந்தோர் என்பதையும், கயிலாயப் பரம்பரையினர் என்பதையும் விளக்குவதற்காக இக்குந்தச் சின்னம் நம் கொடியின் நடுநாயகமாக விளங்குகிறது.

சேவல் சின்னம்

சேவல் என்பது பறப்பனவற்றுள் ஆண்பாலைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல். என்றாலும் இங்கு நாம் கோழிச் சேவலைக் குறிப்பிடுகின்றோம். நமது குல தெய்வம் கந்தவேள் சூரபத்மனைக்கொல்வதற்காகத் தம் வேலாயுதத்தை அவன்மேல் எறிகின்றார். அவன் அவ்வேலுக்கு அஞ்சி ஓடிச் சென்று கடலுக்குள் மாமரமாய் நிற்கின்றான். அவ்வேல் அம்மரத்தை இரண்டாகப் பிளந்தது. மரத்தின் ஒரு பகுதி கோழிச் சேவலாகவும், மறுபகுதி மயிலாகவும் மாறி முருகக்கடவுளை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தன. ஆனல் முருகப்பெருமான் அவ்விரண்டையும் பார்த்து தன் அருட்கண்களால் திருக்குறிப்புக் காட்ட, அவை சீற்றமடங்கி அவரருகில் பணிந்துவந்து நின்றன. வந்ததும், முருகப்பெருமான் மயிலின்மீது அமர்ந்துகொண்டு, சேவலை நோக்கித் தம் கொடியில் ஏறி அமர்ந்துகொள்க எனப் பணித்தவுடன், அவ்வாறே அச்சேவல் ஏறி அமர்ந்தது. இதன் காரணமாகவே முருகக் கடவுள் 'சேவற்கொடியோன்' எனப் பட்டார்.

முருகவேள் கொடியின் சின்னம் சேவல், நாம் முருகவேளின் தம்பிமார். எனவே இச்சேவல் சின்னம் நமக்குரியது என்னும் பெருமையை நாம் பெற்றோம்.

புலிச் சின்னம்

புலிக்கொடி சூரபத்மனுக்குரியது. முருகக்கடவுள் சூரபத்மனை வென்றார் தாம் அவனை வெல்வதற்குத் துணை செய்த வீரவாகுத் தேவருக்கு அச்சூரனின் புலிக் கொடியைப் பரிசாக அளித்தார். நாட்டின் அறத்திற்கு அழிவு நேருகின்றபோது,

தெய்வம் தலையிட்டு அறத்தை நிலைநிறுத்தும் என்பது நியதி. அதன்படி சூரபத்மன் முதலிய அசுரர்கள் ஆட்சியால் நாட்டில் அதர்மம் தலைதூக்கி நின்றபோது, முருகப் பெருமான் அவ்வதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டினார். அத்தகைய அறச்செயலுக்கு முருகக்கடவுளுக்குத் துணை நின்றவர்கள்தான் வீரவாகு உள்ளிட்ட நவவீரர்கள்.

மேலும் சோழ மன்னர்களுக்கும் புலி கொடிச் சின்னமாக விளங்கியிருந்தது, இங்கு கருதத்தக்கது. நமது முன்னோர்களாகிய நவவீரர்கள் முசுகுந்தச் சோழமன்னனுக்குப் படைத் துணைவர்களாகவும், உறவினர்களாகவும் விளங்கியவர்கள். அம்மன்னனைச் 'சக்கரவர்த்தி' என்னும் நிலைக்கு உயர்த்தியவர்கள். முசுகுந்தனின் மகனும், வீரவாகுத் தேவரின் மகள் சித்திரவல்லி வயிற்றுப் பெயரனும் ஆகிய அங்கிவன்மனும், வீரவாகுத் தேவர்க்குப் புட்பகந்தியிடத்துப் பிறந்த மகன் அனகனும் முறையே கருவூரிலும் காஞ்சிபுரத்திலும் அரசு வீற்றிருந்து பேரரசு நடத்தியுள்ளனர் என்பதுவரலாறு.

இவ்வாறு செங்குந்தர் மரபு, சோழ மரபு ஆகிய இரண்டிற்கும் புலிக்கொடி உரியதாய் இருந்தது என்பதனை நாம் பெருமையுடன் பறைசாற்றலாம். இதனை நம் குலக்கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் தமது 'ஈட்டி எழுபது' என்னும் நூலில் கீழ்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"கலிக்குறும் படுவளவனுக்கும் காதுசூர்
வலிக்குறும் படுதனி வாகைக்குந்தர்க்கும்
பலிக்குநற் புகழெலாம் பாதி யாதலாற்
புலிக்கொடி மரபிரண்டினுக்கும்
போந்ததால்."
(பாட்டு எண். 37)

—எனவே புலிச்சின்னம் நாம் நம் தமிழ்க் கடவுள் முருகவேளிடத்துப் பெற்ற பரிசுப் பொருள். மற்றும் செங்குந்தர் சோழர் எனும் இரு மரபுக்கும் உரிய சின்னம். பண்டைக்காலத்தில் அரசச் செல்வத்தைப் பெற்று இந்த அவனியை ஆண்டவர்கள் தான் நாமும். எனவே இக்குறிப்புக்களைக் கொண்டே நாம் நமது கொடியில் புலிச் சின்னத்தையும் பொறித்துள்ளோம். இச் சின்னம், நமது சமூகத்தின் தற்கால நிலையை மனதிற்கொண்டு நமது இன உணர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைய வேண்டும்.

வெண்மை நிறம்

கொடியின் நிறம் வெண்மை. வெண்மை என்பது தூய்மையைக் குறிக்கும். மனம், வாக்கு, காயம் எல்லாவற்றிலும் தூய்மை கொண்டு விளங்கவேண்டும் என்பதை அறிவுறுத்தவே நமதுகொடிக்கு வெண்மை நிறத்தினை தேர்ந்தெடுத்துள்ளோம். இந்த வெண்மை நிறமே நம் கொடியின் தனிச்சிறப்பும் ஆகும்

இக்கொடியை நாம் போற்றி வணங்குதல் வேண்டும். அது நமது கடமை. நமது ஏற்றமிகு நம் குலக் கொடியின்கீழ் நம் இனத்தவர் அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

அரனுக்கு விளக்கிட்ட அருமைச் செங்குந்தர்

(கல்வெட்டுச் செய்தி)

தெய்வத் திருப்பணிகளில் திருக்கோயில்களில் திருவிளக்கிடுதல் சிறந்தது. அந்த தீபங்கள் சந்தியா தீபம் (மாலை நேர விளக்கு) நந்தா தீபம் (அணையா விளக்கு) எனப் பிரிவு பெறும். தீபத்திற்கு முதற்பொருளாக, பசுக்களை விட்டு அதன் மூலம் கிடைக்கும் நெய் கொண்டும், பொன் கொடுத்து அதிலிருந்து வட்டி பெற்றும் தீபம் இடுதல் உண்டு. அவ்வாறு முதலாக வைக்கும் பசுக்களுக்கு ''சாவா மூவாப் பசு'' எனவும், பொன்னுக்கு ''முதல்வாடாக் கடமை'' (fixed deposit) எனவும் கூறுவர்.

கி. பி. 11ஆம் நூற்றாண்டில் பேரூரில் உள்ள பட்டீச்சுரப் பெருமானுக்கு அவ்வூரில் வாழ்ந்த குலையன் பொத்தியான செல்வஞானசம்பந்தன் என்ற செங்குந்தர் சந்தியா தீபம் எரிக்க எண்ணுகின்றார். அவர் கோயில் உள்ள சிவப்பிராமணர் வசம் அச்சு (பொன்காசு) ஒன்று கொடுத்து சூரிய சந்திரர் உள்ளவரை விளக்கெரிக்க ஏற்பாடு செய்தார். அதை ஏற்ற நான்கு அந்தணர் எழுதிக்கொடுத்த செய்தி பேரூர்க் கல்வெட்டில் உள்ளது. (தென்னிந்திய சாசனம் Vol-V 236 AR 560 of 1893)

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சொழ தெவற்கு யாண்டு பதிநெழாவதின் எதிர் எதிர் ஆளுடையார் திருவாந்பட்டி உடையார் கொயி காணி உடைய சிவப்பிரமானந் விக்கிரம சொழ பட்டனும், இராச பட்டனும் சொமநாததெவனும் மருதவனபெருமாளும் இந்நால்வொம் பெருரி லிருக்கும் **கைக்கொளரில்** குலைய பொத்தியான செல்வ ஞானசம்பந்தந் பக்கல் கொண்டற் அச்சு ஒன்றுக்கு நித்தம் அரை சந்தியாதிபம் கொயில் குடமும் குச்சியும் கெபண்டு கொயில் புகுவார் சந்திராதித்தவற் செலுத் துவொமாக கல்வெட்டி குடுத்தொம். இது மாகெசுரர் இரெட்சை.

—திரட்டியது: புலவர். ச. சதாசிவம், M.A.,

தென்னிந்திய செங்குந்த இனமக்கள்
பதினான்காம் மாநில மாநாடு

—புலவர். இரா. சுப்பிரமணியன், காஞ்சி

ஊர்வலக் காட்சி

உலகப் பேரறிஞர் அண்ணா தோன்றிய
செங்குந்தர் தலைநகரம் கலைவளர் காஞ்சியில்
பதினான்காம் மாநில மாநாட்டு ஊர்வலத்தில்
கடலன்ன இனமக்கள் திரண்டனர்: ஒற்றுமையாய்;
பல்லியம் முழங்க, பாவாணர் வாழ்த்திசைக்க,
அதிர்வேட்டுப் பதினான்கு அந்தரத்தில் முழக்கமிட,
புலிவேல் சேவல் கொடிபறக்க, யானை செல்ல,
குடைகள் அணிவரிசை; குலமகளிர் முன்வரிசை;
விசைமிதி வண்டியொடு மகிழ்வூர்தி அணிவகுக்க;
பொதியூர்தி, பேருந்து பின்தொடர, பெருவீதி
மருங்கெல்லாம் மக்கள் நெருக்கம் அலைமோத,
எறும்பூர்ந்து செல்வதுபோல் எழில்கொஞ்சும் ஊர்வலத்தில்
ஏகாம்பர நாதன் எழிற்குமரன்; செங்குந்தர்
குலதெய்வம், தமிழ்க்கடவுள் முருகன் துணைவந்தான்:
உலாகோவை அந்தாதிக் கவியரசன் புலவரிலே:
இனப்புலவன் ஒட்டக்கூத்தன் உயிர்பெற் றுலாவந்தான்,
படையெடுத்து நடைபோட்டுப் பகைவர் முனைசாய்த்த
நவவீரர் காட்சி; காண்பார்கள் வியப்பூட்டும்
மெய்யி லலகேற்றி காரிழுத்தார் அருங்காட்சி;
கண்கால் குறைந்தாலும் கவிநயத்தில் குறையாத
இரட்டைப் புலவர்களும் இனமக்க ளுடன்வந்தார்;
அண்ணல் காந்தியார் அறப்போரி லருகிருந்து
உதவிசெய்த தில்லையாடி வள்ளியம்மை யுடனாக
சுதந்திரக் கொடிபிடித்து அடிபட்டு உயிர்கொடுத்த
திருப்பூர் குமரன்தன் தீரத்தைக் காட்டிவந்தான்;
ஏழை நெசவாளி தறிநெய்த படிவந்தான்;
வரலாற்றுக் காட்சிவண்டி செங்குந்தர் ஊர்வலத்தில்:
சிலம்பாட்டம், கோலாட்டம், சேர்ந்துவந்த புலியாட்டம்,
நரிக்குறவர், தெருக்கூத்தர், நடனமிட்ட பொய்க்குதிரை,
தாரை, தம்பட்டம், ஊதுகுழல் ஊக்குவிக்க;
ஊர்நெளிய உலாவந்தார் கண்கொள்ளாக் காட்சியதே
தமிழீழ நாட்டுச் செங்குந்தப் பெருமக்கள்
நாடாளும் சட்டமன்ற நம்மினத்து உறுப்பினர்கள்
நற்றேர் பவனிவந்தார்; நெசவாளர் குடும்பத்தை
நலியாமல் காத்துவரும் கூட்டுறவுத் தந்தையவர்
பத்மத்திரு நாச்சிமுத்து முதலியார் நம்தலைவர்
ஒப்பற்ற ஊர்வலத்தில் மணிமுடியாய்த் திகழ்ந்தார்கள்;
செங்குந்தம் வாழ்கவென வெல்கவென முழக்கமிட்டார்;
இனமக்க ளின்றுபோ லென்றும்
நேசக் கரம்நீட்டி நலம்பெற்று வாழியவே.



திரு. J. சுத்தானந்தம்,
துணைத் தலைவர், தெ. இ. செ. ம. ச சென்னை,
இளைஞர் மாநாட்டுத் தலைவர்.



திரு. C. காந்திதாஸ், M.A., B.L.,
துணைத் தலைவர்,
தென்னிந்திய செ. ம. ச. சென்னை.

மாநாட்டு ஊர்வலத்தில்
தலைவர்கள்



அமரர் M. சண்முகசுந்தர முதலியார்
காஞ்சிபுரம்.

திருவள்ளுவர் மாட்சி

புலவர். சா. ஜகந்நாதன், பி.லிட்.,
காஞ்சிபுரம்.

உலகினர் பெருமையாய் உவந்தினி தேற்றிடும்
உயர்மறை எனும்படியாய்,
நிலம்மொழி இனம்மதம் எனஒரு பிரிவின்றி
நிலைபெற விளங்குவதாய்
பலகலை நலமதில் நிலையுற, வளம் பெறப்
பரிவுடன் ஏற்பதுவாய்,
இலகிடும் குறளினை அருள்திரு வள்ளுவர்
இமிழ்கடல் முத்தல்லவோ?

தரையினி லரசரும் தருமமும் தழைத்திட
தனிநெறி பலவெழுதி
உரைசெயு முறையிது அலதிது எனச்சொலும்
உயர்நிலை அவர்காட்சி
திரைகட லுடைகொளும் புவியினி லுயர்தொழில்
திறனுறு நெசவுஎன
உரைதரு நிலையினை உவப்புடன் புரிந்தது
உலகினில் **அவர்மாட்சி.**

வருடிடும் இழையினை வகைபல உடையென
வழங்கிடும் நெசவாளர்
பெருமைகொள் **வேளின்கைக் கிளையவர்** எனவரு
பேர்பெரு செங்குந்தர்
உரிமைகொள் குலபதி எனநமக் கமைதலின்
உலகினில் உயர்வாகும்
பரிவுடன் அவர்வழி நடந்திட உயர்ந்திடப்
பணிகளை ஏற்றிடுவோம்.

தமிழே தண்ணருள் முருகன்

தமிழ்மொழி என்றும் இளமை மாறுத மொழி. எம்பெருமான் முருகன், என்றும் அகலாத இளமையுடயவன். தமிழ் மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டு. முருகப்பெருமானின் தோள்கள் பன்னிரெண்டே, முருகனுக்குத் திருமுகம் ஒவ்வொன்றிலும் மும்மூன்று கண்களாக மொத்தம் பதினெட்டு நயனங்கள்; தமிழில் மெய்யெழுத்துகள் பதினெட்டு(சிவமூர்த்தி உமாதேவி. விநாயகர், முருகன் யாவருமே முக்கன் பெற்றவர்கள்) "ஷட்வக்ரம் த்வாதசபுஜம் அட்டாதச விலோசனம் ரூபம் அங்கிக்ருதம் சுபம் லோகாநாம்" என்பது வடமொழி ஸ்காந்தம்.

"உருவம் இல்லாத அருட்பெருஞ்சோதி ஆண்டவன் ஆறுமுகங்கள் பன்னிரெண்டு தோள்கள், பதினெட்டு கண்கள் கொண்ட இந்த அருள் உருவத்தை உலகம் உய்யும் பொருட்டு எடுத்துக்கொண்டான்" என்பது இதனுடைய பொருள்.

சூரியன் ஆறுகண்களாகவும், சந்திரன் ஆறு கண்களாகவும். அக்கினி ஆறு கண் களாகவும், முருகப்பெருமானுக்குப் பதினெட்டுக் கண்களாக அமைந்தாற் போல் தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டாக நின்றன. முருகவேளின் முகங்கள் ஆறு. தமிழில் இன எழுத்து ஆறு வல்லினம் ஆறு, மெல்லினம் ஆறு, இடை யினம் ஆறு, மு-ரு-க என்ற எழுத்துக்களில் ஒவ்வொன்றும் மெய்யெழுத்தில் ஒவ்வோர் இனத்தைச் சார்ந்திருப்பதும் குறிப்பிடத் தக்கது. கந்தவேள் கரத்தில் உள்ள வேல் வேறு எந்த தெய்வத்திற்கும் இல்லாத சிறப்பு உடைய ஆயுதம். வேல் என்றே மக்கட்குப் பெயரிடுவது மரபு. இவ்வாறு வேறு ஆயுதத்தின் திருநாமங்களை மக்கட்கு இடுவதில்லை. வேறு எந்த மொழியிலும் இல்லாத தனிநிலை ஆய்த எழுத்து தமிழில் தான் உண்டு. ஆய்தம் ஃ; இச்சை. கிரியை, ஞானம் என்ற மூன்றும் மூன்று புள்ளி களாகச் சேர்ந்தது. இது வேலின் உருவை யொத்தது.

கண்ணிகர் மெய்யும் சென்னிக் கணநிக ரிணத்தின் கூறும்
திண்ணமை தோள்க ளேபோல் திகழ்தரு முயிரும் வேறென்
றெண்ணுதற் கரிய தான எஃகமும் இயலிற் காட்டும்
புண்ணிய முனிக்கோன் செவ்வேள் பொற்பதத் தடிமையாகும்.

எனவே முருகன் வேறு தமிழ்வேறு அல்ல. முருகனே தமிழ்—தமிழே முருகன் என்பதை உணரலாம்.

—புலவர். ச. சதாசிவம்

வள்ளல் திரு. T. N. சபாபதி முதலியார்,
மடப்புரம், திருவாரூர்,

செங்குந்தர் குலச்செம்மல் கொடி காத்த மாவீரன்
திருப்பூர் குமரன்.

இந்திய விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த
செங்குந்தர் குலச்செல்வி தில்லையாடி வள்ளியம்மை



செங்குந்தர் குலச்செம்மல்
அருள்மொழியரசு
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

மாநாட்டை ஒட்டி நடைபெற்ற
மாட்சிமை மிகு ஊர்வலக் காட்சிகள்



அவ்வினைக்கு இவ்வினை

திருமுருக
கிருபானந்தவாரியார் சுவாமிகள்

நாம் இப்போது நுகர்கின்ற இன்ப துன்பங்கட்கு முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். அவரவர் செய்தவினை ஊழாகமாறி உருத்து வந்து ஊட்டும்.

நம் உடம்பின் நிழல் நாம் நடந்தால் நம்மைத் தொடர்ந்து வருமாப்போல நாம் செய்த வினையும் நம்முடன் தொடர்ந்து வரும்.

இறைவன் நடுநிலை தவறாதவன். பாரபட்சமில்லாதவன். நாம் செய்தநல்வினைகளுக்கு ஏற்ப சுக துக்கங்களை வகுத்து விதிக்கின்றான் இறைவனுடைய அருளாணையால் விதிக்கப்பட்டது விதியெனப் படும்.

'விதி காணும் உடம்பைவிடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்''

என்பது கந்தரநுபூதி, விதியை வென்றவர் எவரும் இலர். விதி வழி மதி செல்லும்.

''அவ்வினைக்கு இவ்வினை''

முதிர்தவ ராயினும் முனிவ ராயினும்
மதியின ராயினும் மன்ன ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார்

— கந்தபுராணம்

நாட்டையும் நகரத்தையும் பொன்னையும் மணியையும் விலையுயர்ந்த உடைகளையும் தூசாகஎண்ணித் துறந்து, உடுத்த உடையுடன் கானகம் சென்ற குணவதியாகிய சீதாதேவி ஒரு மானை விரும்பினாள் கணவனுக்குக் கட்டளையிடாத அக்கற்புக்கரசி கணவனைப் பார்த்து "இம்மானை பிடித்துக்கொடும்'' என்று ஏவினான் கண்ணை இமை காத்தது போல் காத்து நின்ற பரம பக்தனாகிய இலட்சுமணனை உள்ளம் வருந்த சூடாக வைது நெடிய வனத்திடை அனுப்பினாள்.

ஒருபோதும் மனைவியின் வார்த்தையைக் கேளாத விரராகவர் மனைவியின் சொல்லைக் கேட்டுக் கோதண்டமாகிய வில்லைத் தூக்கி மான்பின்னே சென்றார். வில்லையா தூக்கினார்? பழிச்சொல்லைத் தூக்கினார். இவைகட்குக் காரணம் விதி தான்.

''வெஞ்சின விதியினை வெல்ல-வல்லமோ?''

அதிசயம் ஒருவரால் அமைக்கலாகுமோ
துதியறு பிறவியின் இன்ப துன்பந்தான்
விதிவயம் என்பதை மேற்கொளாவிடின்
மதிவலி யானவிதி வெல்ல வல்லமோ.

—கம்பஇராமாயணம்.

ஒரு குளக்கரையில் ஒரந்தணர் மான்தோல் மீது அமர்ந்து காயத்திரி மந்திரம் ஜெபம் செய்து கொண்டிருந்தார். ஒரு புலையன் பசுவை வெட்டும் பொருட்டுக் கத்தியைத் தீட்டிக்கொண்டு இருந்தான். அறிவுள்ள அப்பசு நம்மைக் கொல்லும் பொருட்டே இவன் கத்தியைத் தீட்டுகின்றான் என்று அறிந்து கட்டுத்தறியை அறுத்துக் கொண்டு அந்தக் குளக்கரை வழியே ஒடியது.

அந்தப் புலையன் பசுவைத் தேடிக் கொண்டு வந்தான், அந்த ஜெபம் புரியும் பிராம்மணனைப் பார்த்து ''ஐயரே? பசு இந்த வழியாகச் சென்றதா'' என்று கேட்டான்.

ஜெபம் செய்துகொண்டு இருந்த அந்தணர் இருகரங்களையும் நீட்டி பசு ஓடின வழியைக் காட்டினார். அவர் காட்டிய வழியே சென்று புலையன் பசுவைக் கொலை செய்துவிட்டான்.

வடநாட்டில் தாழ்ந்த குலத்தில் **ஸஜ்ஜன** சாருகர் என்பவர் பிறந்தார். சாருகர் என்ற குலத்தில் பிறந்த அவர் உயர்ந்த குணங்களை உடையவராக விளங்கினார். அதனால் ஸஜ்ஜன சாருகர் என்று பேர் பெற்றார். அவர் இளமையில் இருந்தே உத்தம குணங்களுக்கு உறைவிடமாக இருந்தார். அடக்கம், பொறுமை சாந்தம் ஈசுரபத்தி ஒழுக்கம் பண்பு முதலிய நற்குணங்களை அணிகலமாக அணிந்த அவர் ஆசார சீலராக இருந்தார். அவர் **பண்டரி நாதனை** உபாசனை புரிந்து வந்தார். பண்டரி நாதா பண்டரி நாதா! என்று கூறி அலறுவார். கரதாளம் இட்டு "**விட்டால் விட்டால்**" என்று பஜனை செய்வார். இரவு பகலாக எட்டெழுத்தை ஓதி உள்ளம் உருகுவார்; கண்ணீர் பெருகுவார்.

பண்டரீபுரம் பூலோக வைகுந்தம். அந்த க்ஷேத்திரத்தில் சதா தம்பூராவின் நாதம் முழங்கிக் கொண்டிருக்கும். பக்த ஜனங்கள் மத்தளம் ஜால்ரா முதலிய வாத்தியங்களை ஒலித்து ஆடியும் பாடியும் பரவசம் அடைவார்கள். பாண்டுரங்கனைச் சேவிக்க வருகிற பக்தகோடிகளின் கூட்டம் அளவிட முடியாது. பாண்டுரங்கன் பக்தர்களின் வினைகளைக் களைந்து விரும்பிய நலன்களை வழங்கி வரத மூர்த்தியாக விளங்கினார்.

பண்டரீபுரத்துக்கு அருகே **சந்திர பாகா** என்ற நதி அழகாக ஓடிக்கொண்டு இருக்கும். அந்த நதி பன்னிரு ஜோதி லிங்கங்களுள் ஒன்றான **பீமாசங்கர்** என்ற இடத்திலிருந்து உற்பத்தியாவது. அதனால் **பீமநதி** என்று பேர்பெற்றது. பண்டரீபுரத்துக்கு அருகில் பிறைச் சந்திரனைப் போல் வளைந்து போவதால் **சந்திரபாகா** என்று பேர் பெற்றது. தூய்மையான நீர் சல சல என்று ஓடிக்கொண்டிருக்கும் **நாமதேவர் துர்காராம் சக்குபாய் கோரா கும்பர் ராமதாசர் கபீர்தாசர்** முதலிய பலப்பல பக்தர்கள் வழிபட்டு முத்தியடைந்த திருத்தலம். பல ஞானியர்களின் சமாதிக் கோயில்கள் அங்கே காட்சி தருகின்றன.

ஸஜ்ஜன சாருகருக்கு பண்டரீபுரம் சென்று விட்டல நாதனைச் சேவிக்க வேண்டும் என்ற தாகம் மேலிட்டது. "பண்டரி நாதா! உன்னைச் சேவிக்கும் நாள் எந்நாளோ? அருட்கடலே! கருணைத் தெய்வமே! உன்னைக் கண்ட கண்களே கண்கள் உன்னை வணங்கும் பேறு எல்லோருக்குங் கிடைக்குமோ? பல பிறவிகளில் செய்த புண்ணியப் பயன் இருந்தால் தானே உன் தெரிசனம் கிடைக்கும்" என்று கூறிப் புலம்புவார் திசை நோக்கித்தொழுவார், அழுவார்; மூர்ச்சித்து விழுவார் "நாளை பண்டரிக்குப் புறப்படலாம், நாளைக்குப் புறப்படலாம்" என்று கூறுவார். ஒரு சமயம் துணிந்து பண்டரீபுரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

அந்தக் காலத்தில் ரயில் பஸ் முதலிய வாகன வசதிகள் கிடையா. சாருகர் பஜனை செய்துகொண்டு நடந்து போகிறார் பகல் முழுவதும் நடப்பார் பொழுது போன ஊரில் பிட்சையெடுத்து உண்டு சத்திரங்களில் தங்கி பஜனை செய்வார்.

ஒருநாள் ஒருநகரத்தில் தங்கினார் இரவில் வேறு நல்ல இடம் இன்மையால் ஒரு தனவந்தர்தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து ஜெபம் செய்து கொண்டு இருந்தார்.

இரவு ஒரு மணி. நகரம் இருள் சூழ்ந்திருந்தது. அங்கங்கே நாய்கள் குலைத்துக் கொண்டிருந்தன அந்தப் வீட்டு பெண் சிறுநீர் கழிக்கக் கதவுதிறந்து கொண்டு

வெளியே வந்தாள் சாருகரைக்கண்டாள் அவர்மீது மையல் கொண்டாள். அவர் அருகில் சென்று "தாங்கள் பூலோக மன்மதனைப் போல காட்சி தருகிறீரே தாங்கள் யார்" என்று கேட்டாள்.

அம்மா! வணக்கம், நான் யாத்ரீகன் என்பேர் சாருகன் பண்டரிபுரம் போகின்றேன். "என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உத்தமரே! தாங்கள் என் இதயராஜா, நான் தங்கள் இதயராணி இந்த விநாடி முதல் தாங்கள் என் இன்னுயிர்க் கணவர்.

"அம்மா! இந்த உலகில் கடுகளவு பாவத்தால் வரும் துன்பம் மலையளவு நான் மனத்தினாலும் மாதரைத் தீண்டாதவன். பிரம்மசாரி **தாங்கள் தங்கள்** கணவனுடன் வாழ்வதுதான் கண்ணியம், கற்புநெறியில் நிற்பதுதான் புண்ணியம், அவநெறியில் புகவேண்டாம்.

அவள் வெறிபிடித்தவளைப்போல் ஒடி கொடுவாளை எடுத்து அயர்ந்து தூங்குகின்ற கணவனுடைய தலையை வெட்டித் துணித்தாள்.

என் உயிரினும் இனிய உத்தமரே என் கணவரைக் கொன்றுவிட்டேன். இனி நீர் தான் என் கணவர் என்று கூறி அவரைக் கட்டித்தழுவ வந்தாள்.

இந்தக் கொடுஞ் செயலைக்கண்டு சாருகர் நடுநடுங்கினார் ஐயோ! கணவனைக் கொன்ற இவள் ஒரு பெண்ணா? பேயா? பூதமா? என்று எண்ணித் திண்ணையை விட்டுக் குதித்து ஓடினார் அந்தப் பெண் அவரைத் தொடர்ந்தாள். சாருகரைப் பற்ற முடியவில்லை. நான்கு தெரு கூடும் சந்திப்பில் அப்பெண் ஒவென்று கதறி ஓலமிட்டாள் அங்கு உறங்கியிருந்தவர்கள் கூடினார்கள்.

"பெரியோர்களே! இந்தப் பாவி எங்கள் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தான். நான் சிறுநீர் கழிக்கக் கதவு திறந்து வெளியே வந்தேன், என் கணவரை வெட்டி விட்டு என் கற்பழிக்க என்னை விரட்டுகின்றான்" என்று கூறிக் கதறியழுதாள்.

ஊரவர் அவரை அடித்து வேதனைப் படுத்தினார்கள், காவல் துறையினர் அவரைச் சிறையில் அடைத்தார்கள். பொழுது விடிந்தபின் அந்த நகரத்தை ஆளும் அரசன் இதனை விசாரித்தான். சாருகர் "எல்லாம் பாண்டுரங்கன் அறிவான் நான் ஒரு குற்றமும் புரியவில்லை என நடந்ததை உள்ளபடி சொன்னார்" குற்றம் புரிந்தவன் ஒப்புக்கொள்வானா? என்று எல்லோரும் கூறினார்கள். சாருகருடைய கரங்களைத் துண்டிக்குமாறு அரசன் ஆணையிட்டான். சாருகருடைய இருகரங்களும் துண்டிக்கப்பட்டன. குற்றஞ் செய்யாத குணப்பெருங்குன்றமான அவர் துடிதுடித்தார்.

"பாண்டுரங்கா! பரமதயாளா! அருட்பெருங்கடலே! ஒழுங்கு நெறியில் நின்ற எனக்கு இத்தண்டனையா? ஐயனே? சர்வ பூத சாட்சியான தேவரீரை நம்பிய எனக்கு இத்துன்பமா?" என்று கூறி அழுதார்.

பின்னர் எங்குந் தங்காமல் பண்டரிபுரம் வந்து சேர்ந்தார். பண்டரிநாதர் கோயில் அர்ச்சகர்கள் அறங்காவலர்கள் ஊரில் உள்ள தக்கார்களின் கனவில் சென்று "நமது பரம பக்தன் **ஸஜ்ஜன சாருகன்** வருகிறான் கோயில் மேளம், குடை சுருட்டி பூரண கும்பம் வைத்து உபசரித்து அழைத்து வாருங்கள்" என்று பணித்தருளினார்.

எல்லோரும் வந்து ஸஜ்ஜன சாருகருக்கு கோயில் பரிவட்டம் கட்டி கனவில் பாண்டுரங்கன் அருளியதைக் கூறி பேரன்புடன் வரவேற்பு செய்தார்கள்.

சாருகர் இதனைக் கேட்டு அழுதார் பாண்டுரங்கன் திருமுன்நின்றார். கையில்லாமையால் தொழமுடியாமல் கதறினர் "தேவதேவா! என்னை உன் அடியான் என்று கூறி அருள் புரிந்தனையே, அன்று அரசன் என் கரங்களை வெட்டுமாறு ஆணையிட்டானே அப்போது அசரீரியாக இவன் குற்றமற்றவன்" என்று ஒருசொல் கூறி இருக்கக்கூடாதா? அன்று என்னைக் கை நழுவவிட்டீரே! இன்று அருள் புரிகின்றீரே? இது நியாயமா? உன் கருணைக்கு அழகா இது முறையா? இது தர்மம்தானா? நான் இப்பிறவியில் யாருக்கும் தீங்கு செய்தேனில்லையே? கருணாகரனே! கிருபாநிதியே, உன்னை தெரிசித்து உன்னைக் கட்டி தழுவவோ கை கூப்பி வணங்கவோ இயலாமல் என் மனம் நீராய் உருகி நிற்கிறதே-என்று கூறி அழுதார்.

பாண்டுரங்கன் கூறுகின்றார்; அன்பனே அழாதே அவரவர் வினைகளை அவரவர் அநுபவித்தே தீரவேண்டும்.

குளக்கரையில் ஒரந்தணன் காயத்திரி மந்திர ஜெபம் செய்துகொண்டிருந்தான். பசுவைக் கொல்ல வந்த புலையன் பசு எந்த வழியாகச் சென்றது என்று கேட்டான். அந்த பிராம்மணன் பசுபோன வழியைத் தன் இருகரங்களையும் நீட்டி காட்டினான். புலையன் அவ்வழியே சென்று பூலோக காமதேனுவாகிய பசுவைக் கொன்றுவிட்டான். நீதான் அந்த காயத்திரி ஜெபஞ்செய்த அந்தணன். பசுவின் கொலைக்குக் காரணமாக இருந்த உன் இரு கரங்களும் வெட்டப்பட்டன.

கொலையுண்டபசு அந்தப்பெண். பசுவை கொலை செய்த புலையன் அவள் கணவன் பசுவாகிய பெண் முற்பிறப்பில் தன்னைக் கொன்றவனைக் கொன்றாள். ஆகையால் இவை முன்செய்த தீவினையால் விளைந்தன என்று கூறியருளினார். பண்டரிநாதருடைய திருவாக்குகளைகேட்டு அவர் அல்லல் தீர்ந்து ஆறுதலை அடைந்தார். பண்டரிநாதன் கருணையால் கரங்கள் வளர்ந்தன. பண்டரிநாதருடைய இரு பாதமலரினைத் தொட்டுக்கட்டித் தழுவி அருச்சித்து ஆராதனை புரிந்து காலாந்தரத்தில் ஸஜ்ஜனசாருகர் பரமபதம் அடைந்தார்.

"அவ்வினைக்கு இவ்வினை" என உணர்க

பூசாரி

விதியின் வலிமையை விளக்க இன்னும் ஓர் சான்று

ஒரு காளிகோவில் பூசாரி ஒருவன் பூஜை செய்துகொண்டிருந்தான். மார்கழி மாதம் அதிகாலையில் குளிர்ந்த நீரில் முழுகி காளி தேவிக்கு தயிர் அன்னம் நிவேதனம் செய்தான். ஒவ்வொருநாள் ஒவ்வொருவருடைய உபயம். தட்டில் பணம் போடும் பெரியவர்கட்குத் தயிரன்னத்தை விளாம்பழம் அளவு உருட்டித் தருவான் பிள்ளைகள் கையில் தயிரன்னத்தத தடவி விடுவான். அப்பிள்ளைகள் வெளியே வந்து பூத கண்ணாடி போட்டுப் பார்த்தால்தான் கையில் பிரசாதம் சிறிது இருப்பது தெரியும்.

பூசாரிக்கு ஆகார மாறுபாட்டால் காய்ச்சல் வந்தது அதற்கு தகுந்த மருந்துண்பதுதான் முறை. அவன் அறிவில்லாதவன் காளியாயீ! இந்தக் காய்ச்சலில் இருந்து என்னை காப்பாற்று, உனக்கு இரு ஆடுகள் பலி தருவேன்; என்று பிரார்த்தனை செய்துகொண்டான். அவன் மனைவி மிளகு திப்பிலி கஷாயம் செய்து தந்தாள் காய்ச்சல் நின்றுவிட்டது.

ஆடிமாதம் அம்மனுக்குப் பூசாரி அபிஷேகம் செய்து இரு ஆடுகளை கொண்டு வந்து அவைகளுக்கு மஞ்சள் நீர் ஊற்றி நீராட்டினான். மஞ்சள் நீர் பட்டதும் இரு ஆடுகளும் தலையை உதறின. உடனே பூசாரி அம்மன் உத்தரவாகிவிட்டது அதற்கு அடையாளம் ஆடுகள் தலையை ஆட்டிவிட்டது என்று

சொல்லி இரு ஆடுகளையும் வெட்டி விட்டான். தண்ணீர்பட்டால் உதறுவது இயற்கைதானே, அதற்காக ஆட்டை வெட்டலாமா?

அந்த நகரை ஆட்சி புரிகின்ற மன்னவனுக்கு ஒரு மகனும் மந்திரிக்கு ஒரு மகனும் பிறந்தார்கள். மன்னவன் மகனும் மந்திரிமகனும் கலைகளில் வல்லவர்களாக ஆனார்கள் மன்னன் மகனுக்கு முடிசூட்டு விழா நடைபெற்றது.

மன்னன் மகனுக்கு மகுடாபிஷேகம் செய்த 12 ஆண்டுகளாக மழையில்லை. மக்கள் உண்ணீரும் தண்ணீரும் இன்றி தவித்தார்கள். ஒருநாள் மன்னவர் மகனும் மந்திரி மகனும் இரவு 10 மணிக்கு அந்தக் காளி கோயிலுக்கு காளிதேவியிடம் இக் குறையைச் சொல்லி வழிபாடு செய்ய சென்றார்கள் நம்மைத் தண்டிக்க வருகின்றார்களோ? என்று அஞ்சிய பூசாரி காளிதேவிக்கு பின்புறம் ஒளிந்து கொண்டான்.

மன்னவன் மகன் அம்பிகையை அஞ்சலி செய்து தேவி! கருணம்பிகை! அகிலாண்ட நாயகி எனக்கு முடி சூட்டிய பின் 12 ஆண்டுகளாக மழையில்லை. நீரின்றி சீரின்றி மக்கள் தவிக்கின்றார்களே! அம்மையே! மழை பொழியச் செய்வாய் என்று உள்ளம் உருகி வேண்டினன்.

காளிதேவி மன்னன் மகனே! என் சந்நதியில் ஒரு நரபலி தந்தால் மழை பொழியும்" என்று அசரீரியாகக் கூறினள்.

மன்னன் மந்திரியைப் பார்த்து தோழனே மக்களுக்கு நான் தந்தை மக்கள் பொருட்டு என் உயிரை தியாகம் புரியவேண்டும். என்னைப்பலியிடு, நீ பதவியேற்று அரசு செய்" என்றான்.

மந்திரி மகன் அரசே!

உடுக்கை யிழந்தவன் கை போல
ஆங்கே இடுக்கண்களை வதாம் நட்பு.

தங்களின் நண்பனுகிய நான் தங்களை பலியிடுவதா வேண்டா என்னைபலியிடுங்கள் மந்திரி பதவிக்கு பலர் ஆலாய்ப் பறக்கின்றார்கள். யாரையாவது அமைச்சராக அமைத்து அரசுபுரியுங்கள்" என்றான்.

"என்னைப் பலியிடு!" "என்னைப்பலியிடு"
என்று இருவரும் வாதிட்டனர்

அரசன் "அன்பனே? உனக்கும் எனக்கும் வாக்குவாதம் வேண்டாம்; அம்பிகையை கேட்போம் அம்பிகை யாரைக் கேட்கின்றாளோ, அவ்வாறே செய்வோம்" என்று கூறினன்.

தேவி! உன் சந்நிதியில் அடியேன் பலியாக வேண்டுமா? அல்லது என் அமைச்சர் பலியாகவேண்டுமா?" என்று வினவினன்.

தேவி மன்னவனே! நீயும் பலியாக வேண்டாம், மந்திரியும் பலியாக வேண்டாம், என் பின்னே ஒளிந்திருக்கின்ற பூசாரிதான் பலியாக வேண்டும் அதுவும் நீயும் மந்திரியும் ஏககாலத்தில் பூசாரியை என் சந்நதி முன்னே நிறுத்தி அவனுக்கு முன்னும் பின்னுமாக நின்று ஒரே நேரத்தில் இருவர்வாளும் பூசாரியின் தலையை வெட்டித் தள்ள வேண்டும்" என்றாள்.

பூசாரி இதைகேட்டு நடுநடுங்கினன் வெளியே வந்தான், அவனுடைய கண்கள் சிவந்து மீசை படபடத்தது. புருவம் நெளிந்தது. "காளியாயீ! நீ ஒரு தெய்வமா? உனக்கு 55 ஆண்டுகளாகப் பூசை செய்தேனே! என்னையா பலியிடச் சொல்கின்றாய்? உனக்கு கருணையில்லையா எண்பத்து நான்கு நூறாயிரயோனி பேதங்கட்கும் நீ தாயல்லவா? நான் உனக்கு சேய் அல்லவா? கொடியவளே! உனக்கு இரக்கம் இல்லையா? பலகாலம் தொண்டு செய்த என்னையே பலி வாங்க முற்பட்டனையா? உன்மனம் இரும்பா கல்லா? இரக்கமில்லாத அரக்கியே! நீ ஒரு தெய்வமா? என்று கூறி வசைமாறி பொழிந்தான்.

காளிதேவி "பூசாரி! பதட்டம் அடையாதே. தானத்தில் நிதானம் பெரியது தயிரன்னம் உண்டு உனக்கு காய்ச்சல் வந்தால் கோனாரின் வீட்டில் வாழும் ஆடுகள் என்ன பாவம் செய்தன? எண்பத்து நான்கு நூறாயிரம்யோனி பேதங்கட்கும் நான் தாய் என்று இன்றுதான் உணர்ந்தனையா? நீ பல ஆண்டுகளுக்கு முன் வெட்டிய ஆடுகட்கும் நான் தாயல்லவா? வாயில்லாத குற்றமற்ற ஆடுகளை கதறக்கதற அன்று நீ பலியிட்டனையே! நீ பலியிட்ட அந்த இரு ஆடுகளும் உன்னை பலி வாங்க மன்னவன் மகனாகவும் மந்திரி மகனாகவும் பிறந்து வந்திருக்கின்றனர். பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்-தமக்கின்னா :பிற்பகல் தாமே வரும் என்பது மூதுரை.

"அவ்வினைக்கு இவ்வினை"

பூசாரி குனிந்து நின்றான் மன்னவன் வாளும் மந்திரியின் வாளும் பூசாரியின் தலையை ஏககாலத்தில் சேதித்தன அம்பிகை அரசன்முன் காட்சி தந்தாள் மன்னனே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்று கூறி அருள் புரிந்தாள்,

மன்னன் "தாயே இந்தப் பூசாரி குற்றத்தை உணர்ந்துகொண்டான் ஒப்புக்கொண்டான் மன்னிப்பது உன் இயல்பு. தேவி இவனை மன்னித்து இவனை எழுப்பிக்கொடு, பின்னர் மழை பெய்து மக்கள் சுகமடையச் செய்வாயாக" என்றான்.

அம்பிகை அருள்புரிந்தாள் பூசாரி எழுந்தான். அதுமுதல் ஆலயத்தில் பலியிடும் கொடுமையை அகற்றினான். நன்கு மழை பொழிந்தது. நாடு தழைத்தது. ஆதலால் செய்தவினை செய்தவனை வந்தடையும்.

" அவ்வினைக்கு இவ்வினை " என உணர்க யாருக்கும் எப்போதும் இடர் புரியாது நலமே புரிந்து இறையருள் பெறுக.

With best compliments from:

ராதா ரைஸ் மில்,

P. K. தேவராஜ முதலியார்

பழையசீவரம்

உரிமையாளர்: **D. சுப்புசாமி முதலியார்**

தேவராஜா ரைஸ் மில்

150, ராஜ வீதி, வாலாஜாபாத்

உரிமையாளர்: **D. சம்பந்தன்**



திரு. C. K. குமாரசுவாமி M.A.,
பதிவாளர், சென்னைப் பல்கலைக்கழகம்.

சேலம் திரு. A. சங்கர முதலியார், B.A., B.L.,
சமூக மாநாட்டுத் திறப்பாளர்,
புரவலர், சேலம் மாவட்ட செ. ம. ஜ. சங்கம்.

செங்குந்தர்கள் சிந்தனைக்குச் சில

சைவநன்மணி, புலவர்.
ச. சதாசிவம், எம்.ஏ.,
டாக்டர். பி. எஸ். சீனிவாசன்
நகராட்சி மேனிலைப் பள்ளி,
காஞ்சிபுரம்,

சீர்கொண்ட செங்குந்தர் குலதிலக மெனநிலவி
செப்பரிய தமது பொருள்சேர்
செய்யுட்கு றட்பாவைக் கொண்டுலக ளந்ததிரு
வள்ளுவர்நம் மரபல்லவா?

பேர்கொண்ட அவர்வழியைப் போற்றிப் பரப்புவது
பெரிதான கடமையலவா?
புண்ணியத் தொழில்நெசவு பூமிக்கு நாம்செய்யும்
பெருமானம் காப்பதலவா?

நீர்கொண்ட மேகமென நீள்கவி உலாப் பாடும்
நிகரிலாப் புலவரான
நேர்மைமிகு இரட்டையர்கள் நம்குலம் அல்லவா
நெடியபுகழ் நமதல்லவா?

தார்கொண்ட வடிவேலன் தம்பியர்என னும்பெருமை
தரணியில் நமக்கல்லவா?
தகவுடைய ராய்நின்று தாரணிம திக்கும்செயல்
தான்செய்தல் கடமையலவா!

செங்குந்தம் ஏந்துமொரு செங்குந்தர் என்றபெயர்
எங்குந் தழைக்க நின்ரேம்,
செங்கோல் செலுத்தியதொர் சோழர்முதல் மன்னர்க்குச்
சேனைத்த லைமை ஏற்ரேம்,

பொங்குங்க டல்சூழ்ந்த புவியதனில் நம்குலப்
பெரியரால் புகழ டைந்தோம்,
போற்றுந் திறல்வீர பரணிபெறு தரணிபுகழ்
போர்க்களம் கண்டு வென்ரேம்,

சிங்கக்க விஞர்பலர் முன்னேரெ னும்பெருமை
சிதையாது காத்து நின்ரேம்,
சீர்த்திபெறும் கூத்தர்க்கு வாணிதிரு வருளினல்
சிரச்சிங்கா தனம மைத்தோம்,

வங்கமலி மைக்கடலை வளராடை யாய்க்கொண்ட
வண்புவி தழைக்க நின்று
வாழ்ந்தகதை பேசாமல் வாழ்விலுயர் நிலைகாண
வழிமுறைகள் மேற்கொள்ளு வோம்.

வான்சுமந் தேவந்த வளர்கங்கை நதியில்வரு
வடிவேலன் துணைவர் என்றே
வருகின்ற நவவீர ரொடுலட்சம் வீரர்தம்
வழித்தோன்றல் நாமல்லவோ?

தேன்சுமந் தேயுலவு கற்பகக் காவிலுறை
தேவர்தம் வாழ்வு தன்னை
திறலவுணர் கைக்கொள்ள தேம்பியழும் அவர்குறை
தீர்த்தருள்கு மாரனேடு

ஊன்சுமந் துழல்கின்ற ஒளிர்வாளும் வடிவேலும்
உயர்த்தியது நாமல்லவோ?
ஊர்ப்பகையைத் தீர்ப்பதில் உதவிடும் நாம்கொள்ளும்
உட்பகை தவறல்லவோ?

மான்சுமந் தொளிர்கரத் திறைகுமரன் அருள்கொண்டு
மாட்சியுறு நம்குலத்தோர்
மாட்சிபெறு காட்சிபெற மாண்செயல் புரிந்துபிறர்
மதித்திடும் வகைவாழுவோம்!

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

89, அரண்மனைக்காரத் தெரு சென்னை 600 001

காஞ்சிபுரத்தில் 1984 பிப்ரவரி 4,5 தேதிகளில் நடைபெற்ற செங்குந்தர் 14-வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட

தீர்மானங்கள்

1. பாரதிதாசன் பல்கலைக்கழகம்

திருச்சியில் உருவாகிய புதிய பல்கலைக் கழகத்திற்குச் செங்குந்த குலச்செம்மல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பெயரைச் சூட்டிய தமிழக அரசினை நன்றியுடன் இம் மாநாடு பாராட்டுகிறது.

2. மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க

செங்குந்த குலத்தில் 100க்கு 95 பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் நெசவாளர்களாவும், அந்த நெசவாளர் ஒருவர்க்குக் குடும்பத்தில் உள்ள அனை வருமே தொழிலில் துணையாக ஈடுபட்டும் குடும்பத்தின் வருமானம் வறுமைக் கோட் டுக்குக் கீழ் இருக்கிறது. வறுமையின் காரணமாகவும் கல்வியிலும் பொருளா தாரத்திலும் சமூக மரியாதையிலும் தாழ்ந்து கிடக்கின்ற செங்குந்தர்குலத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கு மாறு தமிழக அரசினையும் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச் சந்திரன் அவர்களையும் இம்மாநாடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

இக்கோரிக்கையில் நம்குல இளைஞர்கள் காட்டிய வேகமான உணர்வுகளைக் கருத் தில் கொண்டு ஒரு குழு, அமைச்சர்களைச் சந்தித்து நம்முடைய தீர்மானத்திற்கு ஆதரவு தேடுவது எனவும் அவர்களின் உணர்வுகளுக்கு உரிய வடிவினை உரிய நேரத்தில் உருவாக்கும் எனவும் இம்மா நாடு உறுதியளிக்கிறது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஆணைப் படி (கம்யூனல் ஜி ஓ.) சமூகங்களுக்குக் கல்வி உத்தியோகச் சலுகைகள் வழங்கு வதைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு கடைப்பிடித்து வரவேண்டும் என்று இம்மா நாடு ஒருமனதாகத் தமிழ்நாடு அரசினைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. ஒற்றுமைத் திருமணம்

நமது சங்கத்தின் தீர்மானங்களாலும் நம் குலப் பெருமக்களின் ஒத்துழைப்பாலும் பல்வேறு பகுதியில் வசிக்கும் செங்குந்தர் கள் ஒற்றுமைத் திருமணங்களை நடத்தி வருவதை இம்மாநாடு பாராட்டுகிறது. மேலும் ஒற்றுமைத் திருமணங்களை நடை முறைப்படுத்தாத சில பகுதிகளில் உள்ள வர்களையும் வேறுபாடின்றி ஒற்றுமைத் திருமணங்களை நடத்த முன் வரவேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

5. சிக்கனத்திருமணம்-கூட்டுத்திருமணம்

சிக்கனத் திருமணங்களையும் ஒரே திருமண நாளில் பல திருமணங்களைக் கூட்டு முறையில் நடத்தி வரும் கிளைச் சங்கங்களை இம்மாநாடு பாராட்டுவதுடன் எல்லாக் கிளைச் சங்கங்களும் கூட்டுத்திருமணங்களை நடத்த ஆவன செய்ய வேண்டுமாய் இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

6. கிளைச் சங்க அமைப்பு

இதுவரையில் கிளைச் சங்கங்கள் அமைக்கப்படாத எல்லாக் கிராமங்களிலும் கிளைச் சங்கங்களை அமைத்து அந்தந்த மாவட்டச் சங்கக்களுடன் இணைந்து செயல் பட இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

7. வள்ளல் சபாபதி முதலியார் மாணவர் இல்லம்

வள்ளல் சபாபதி முதலியார் மாணவர் விடுதியைத் தக்க வகையில் பயன்படுத்து-வதனை ஆய்வு செய்வதற்காகத் திரு. எ.வி. ஆர்.எம்.வி. சங்கர நாராயணன் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் பத்மஸ்ரீ எம். பி நாச்சிமுத்து, பி. வெங்கடசுப்பிரமணியன் எம். ஏ. பி. எல்., எம்.எல்.ஏ , ஆர். ஏ என் முத்துசாமி முதலியார், ஈரோடு சுத்தானந்தன் பிரபாத் J.K. நாராயணன், சி.கே. குமாரசாமி, எஸ். பி. சம்பந்தன், எஸ். வையாபுரி முதலியார், கே.ஏ. எஸ். பத்மநாபன், எம். எஸ். ரெங்கையா, சுந்தரம் எம். எல். ஏ. ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை அமைப்பது என இம்மாநாடு முடிவு செய்கிறது.

8. நெசவாளர்களுக்கு இலவச வேட்டி சேலை

நிலமற்ற விவசாயிகளுக்கு வேட்டி, சேலை இலவசமாக வழங்குவது போல ஏழை நெசவாளர்களுக்கும் வேட்டி, சேலை இலவசமாகத் தமிழ்நாடு அரசு வழங்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

9 காப்பீட்டுத் தொகையை உயர்த்துதல்

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் இறந்து போனால் ரூ. 3000/- என்று வழங்கி வரும் காப்பீட்டுத் தொகையை ரூ. 10,000/- ஆக உயர்த்திக் தர வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

10. கைத்தறித் துணி

மத்திய, மாநில அரசுத் துறைகளில் பயன்படுத்தும் துணிகளைக் கைத்தறித் துணிகளாக வாங்கவேண்டும் என்று இம் மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

11. கைத்தறிப் பாதுகாப்பு

கைத்தறித் துறைக்கு ஒதுக்கப் பட்டுள்ள ரகங்களை விசைத்தறிகளில் தயாரிப்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்துக் கைத்தறித்துறைக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று இம் மாநாடு தமிழக அரசினைக் கேட்டுக் கொள்ளுகிறது.

12. நெசவுத்துறை சம்பந்தப்பட்ட ஆலைகளிலும் நிறுவனங்களிலும் பணி இடங்கள் பூர்த்திசெய்யப்படும்போது நெசவாளர் பிள்ளைகளுக்கு முன்னுரிமை தருமாறு தமிழகஅரசினை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

13. அரசு பல வாரியங்கள் அமைத்து வருகிறது ஆனல் பல லட்சம் பேருக்கு தொழிலாகக் கொண்ட கைத்தறிக்கு இதுவரை வாரியம் அமைக்கப்படாமல் இருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, உடனடியாகக் கைத்தறிக்கு எனத் தனியாகக் கைத்தறித்துறை வாரியம் அமைத்து இலட்சக் கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்திட இம்மாநாடு வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறது.

14. மண்டல் கமிஷன் சிபாரிசு

மத்திய அரசு உடனடியாக மண்டல் கமிஷன்சிபாரிசை அமுல்படுத்திப்பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு உதவுமாறு இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

15 அமைச்சரவையில் இடம்

பிற்பட்ட சமூகங்களுக்குத் தமிழக அமைச்சரவையில் இடம் கொடுத்துப் பெருமைப்படுத்திய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், தமிழ் நாடு முழுவதும் பரவியுள்ள பிற்பட்ட சமூகமாகிய செங்குந்தர்சமூகத்தினருக்கும் தமிழக அமைச்சரவையிலும், சட்டமன்ற மேலவையிலும் இடம் கொடுக்குமாறு இம் மாநாடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றது.

16. பாடநூலில் ஒட்டக்கூத்தர்

கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர் பாடல்களைப் பள்ளியிலும், கல்லூரிகளிலும் பாடத்திட்டத்தில் சேர்க்க ஆவன செய்யுமாறு இம்மாநாடு தமிழக அரசினைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

ச. கு. ப பழனிவேல், தஞ்சாவூர்,
செ. மா. ஜ சங்க கிளைச் சங்கங்களின்
அமைப்பாளர்

R. N. சந்தானராஜகோபாலன்,
தலைவர், செங்குந்த மகாஜன சங்கம்,
தஞ்சை ஜில்லா.



Dr. M. கருணாநிதி, M.B., B.S., செயலர்,
செ. மா. ச. திருச்சி மாவட்டம்.



S. முருகையன், M. P.
திருவண்ணாமலை.

காஞ்சிபுரம் செங்குந்த மகாஜன சங்கம்

பொதுக்குழு உறுப்பினர்கள்

செங்குந்தர் வாழ்க!

வித்துவான்
அம்பை, **இரா. சங்கரன்,**
ஓய்வு பெற்ற தமிழாசிரியர்.

பண்டைக் காலத்திலிருந்தே மக்களுக்கு மானம் காத்த செம்மல்களாய் நெய்யும் தொழிலையே உய்யுந் தொழிலாக் கொண்டு வாழ்ந்த, பெருமக்கள் செங்குந்தர்களாவர். அரசர்களுக்குத் தலைமைச் சேனதிபதிகளாகவும் உற்ற காலத்துச் செம்மையான குந்தத்தைத் தாங்கித் தம் உயிரையும் பணயம் வைத்து உதவிய பெருமை உடையோரும் இப்பெருமக்களே எம் மரபினருக்கும் புராணம் கிடையாது. அவ்வம்மரபின் பெருமை குறித்துச் சில சிறு பிரபந்தங்கள் மாத்திரம் உள்ளன. ஆனல் நம் செங்குந்தர்களுக்கோ **செங்குந்த புராணம்** என்றே ஒரு பழந் தமிழ்ப் புலமை நலம் தோய்ந்த புராணம் ஒன்றும் திகழ்கின்றது. **அது நாவினல் மழுவெறிந்த ஞானப்பிரகாச சுவாமிகள் அவர்களால் அருளிச் செய்யப்பெற்றது.** மேலும் ஈட்டி யெழுபது, வீரநாராயண விஜயம் போன்ற குந்தர் குலப் பெருமை கூறும் நூல்களும் பல உள்ளன.

நெய்யுந் தொழிலை உடையோரென்னும் பொருள் பயக்கத்தக்க நிலையில் தொழிலால் பெற்றதே கைக்கோளர் என்னும் பெயராகும். அப்பெயரே இம் மரபினரின் சான்ருண்மைச் சிறப்பையும் எடுத்துக் கூறும் மாண்புடையதாயு மிலங்குகின்றது.

ஆதியில் செங்குந்தர்களுக்குத் தலைநகரம் உறையூர் என்று செங்குந்த புராணம் கூறும். காஞ்சிபுரத்தில் செங்குந்தர்களுக்குரிய குருபீடம் தொன்றுதொட்டு விளங்கி வந்திருக்கிறது. மேலும் மூர்த்தி, தலம், தீர்த்தம், வரலாற்றுச் சிறப்பு முதலியன பெற்றுச் செங்குந்தர்களுக்குரிய சிறப்பிடமாயுள்ளது — இக்கச்சியம் பதியாகும். அண்மைக் காலத்து வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் நம்மரபுக்கும் அரும் பெருந் தொண்டாற்றிய காஞ்சி நாகலிங்க முனிவரை அறியாதார் அறியாதாரே. மேலும் சாமிநாத முதலியார், வச்சிரவேல் முதலியார் முதலிய பெரியோர்களை யெல்லாம் தந்து நம் மரபுக்குச் சிறப்புக்களை ஈட்டித் தந்தது இக்கச்சியம் பதியே.

ஆகவே பழம் பெருமைக்குரிய நிலைக்களனுய் விளங்கிய இக்காஞ்சியே வருங் காலத்துக் குந்தர் குல வாழ்வு சிறக்கவும் அடிப்படை வழிகளை இம்மாநாட்டு வாயிலாய்க் கண்டு வகுக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். மேலும் இம்மாநாடு எல்லா வகையாலும் சிறப்புற நிகழ்ந்து சிறப்பாக இளைஞருலகத்துக்கு நம் மரபுப் பெருமையை எடுத்துக் காட்டி வீறு நடைபோட்டு சமூகத் தொண்டில் அவர்களை ஈடுபடுத்தவும் வழிவகைகளைக் காண வேண்டும்.

வாழ்க உலகெலாம்.

உணர்வுகளை உணர்த்தும் வழி

புலவர். செ. சோமசுந்தரம், M.A., B.Ed.,
குடியேற்றம்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் உலகுக்கு அளித்த உயர் தமிழ் இலங்கியமாய் விளங்கும் திருக்குறளில் தமது உணர்வுகளை உய்த்துணர்ந்து கொள்ளுமாறு காட்டியுள்ளது மிக மிக நயமுடையதும் நனி நாகரீகம் உடையதும் ஆகும்.

வள்ளுவர் தமிழில் திருக்குறளை எழுதினாலும் அவர் எந்த இடத்திலும் தமிழ் என்ற சொல்லையோ அதன் சிறப்பையோ கூறவில்லை.

ஆயினும் கடவுளை வாழ்த்த வந்த அதிகாரத்தில் அந்தக் கடவுளை வாழ்த்தவும் எண்ணவும் கருவியாக இருக்கின்ற தனது தாய்மொழியை அவரால் மறுக்கவோ மறைக்கவோ இயலவில்லை.

எனவேதான், முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்தினைப் பாடவந்த வள்ளுவர் முதல் பாவில்,

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

— என்று தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய அகரத்தில் தொடங்கினர். அகரம் உயிர் எழுத்துக்களில் முதல் எழுத்தும் ஆகும்.

அதைத் தொடர்ந்து மெய்யெழுத்துக்களின் மூன்று இன எழுத்துக்களையும் முறையாக—

கற்றதனுல் ஆய பயன்என்கொல் வால்அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

—என்பதில் ககரமாகிய வல்லின மெய்யெழுத்தையும்,

மலர்மிசைஏகினன் மாண்அடிசேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்

—என்பதில் மகரமாகிய மெல்லின மெய்யெழுத்தையும்,

வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

—என்பதில் வகரமாகிய இடையின மெய்யெழுத்தையும் முதலில் எடுத்தாண்டு, தனது தாய்மொழியாகிய தமிழின் உயிரையும் மெய்யையும் எண்ணிப் பார்க்கிருர். அத்துடன் திருக்குறளின் இறுதிப் பாவில் :

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்

—என்கிருர். இக்குறட்பாவில் தமிழ் நெடுங்கணக்கின் இறுதி எழுத்தாகிய னகக் மெய்யை இறுதியில் வைத்து, நெடுங்கணக்கின் ஆதியும் அந்தமும் காட்டி தமது மொழியுணர்வை வெளிப்படுத்துகிருர்.

இனஉணர்வாக இருந்தாலும் சமய உணர்வாக இருந்தாலும வள்ளுவர்காட்டிய வழியில் உணர்வுகள் வெளிப்படுமேயானல் எங்கும் எக்குழப்பமும் எப்போதும் ஏற்படாது.

பல்லாண்டுகளாக இயங்கிவரும் நமது செங்குந்தர் இன உணர்வு அமைப்பில் வள்ளுவர் வழிபோல் வடாற்காடு மாவட்டமும் அதில் அடங்கிய குடியேற்றமும் உரிய பங்கினைச் செலுத்தி வருகின்றது என்பதனை அனைவரும் அறிவர்.

1929-ல் நடைபெற்ற செங்குந்தர் முதல் மாநாட்டில் குடியேற்றம் நகரமன்றத் தலைவராக இருந்த திரு. மா.வே பீமராசு முதலியார் அவர்கள் தலைமை தாங்கிப் பெருமை சேர்த்துள்ளார். திருப்பத்தூர் — கவிஞர் கா. அ. சண்முக முதலியார், நகர மன்றத் தலைவர் திருவாளர் மா. வேலாயுத முதலியார், மா.வே. சாமிநாத முதலியார், நகர மன்றத் தலைவர் திரு. எம். ஜி. அமிர்தலிங்க முதலியார் முதலியோர் தொடர்ந்து வரும் மாநாடுகளிலும் அமைப்புகளிலும் பெரும் பங்கு ஏற்றுப் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இப்பெருமக்கள் எல்லாம் தாங்கள் பொறுப்பேற்ற பொறுப்புக்களின் மூலமும் நிர்வகிக்கும் நிர்வாகத்தின் மூலமும் முறை தவருது வாய்ப்புள்ள நேரங்களில் எல்லாம் ஏற்ற இடங்களில் எல்லாம், நம் இன மக்களுக்குப்பல்லாற்ருனும் உதவியவர்கள் ஆவர்.

திருவாளர்கள் பு. கா, கங்காதர முதலியார், வெ. மு. முனிசாமி முதலியார் போன்ருேர் கல்வித் துறையிலும் கவனம் செலுத்தி இன மக்களின் கல்வி வளர்ச்சிக்குத் துணை நின்றனர். மேலும் அவர்கள், வேதாந்தத்திலும் தர்க்கத்திலும் பேரறிஞராய் பல நூல்களுக்கு உரை கண்டு பெரும்புகழ் ஈட்டிய காஞ்சீபுரம் ஆ. செங்கல்வராய முதலியார் போன்ருேரைக் கொண்டு வேதாந்தத் தமிழ் வாசகசாலையை நிறுவிச் சமயக் கல்வியையும் உணர்வினையும் நம் இன மக்களுக்கு ஊட்டினர் !

வாழ்க செங்குந்தர் இனம் !
வளர்க செங்குந்தர் வாழ்வு !!

முருகனும் வாழ்வும்

கவிஞர். **மு. சண்முகம், M.A., B.T.,**
தலைமையாசிரியர்,
பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளி,
காஞ்சிபுரம்

1. முருகனை நினைந்து வாழ்வோர் முழுமையாம் வாழ்வு காண்பர்
தருநிழல் சுகத்தைக் காண்பர் தகித்திடும் வெயிலில் கூட
உருகிடும் உளத்தோ ராகி உள்ளொளி பெருக்கி வாழ்வர்
பருகிடும் நீர்போ லவரே பாலையில் உதவி நிற்பர்;

2. குமரனை நினைந்து வாழ்வோர் குவலயம் போற்ற நிற்பர்,
அமரரும் ஏவல்செய்ய அனைத்திலும் அமைதி காத்து
நிமிர்ந்தநன் னடைய ராகி நிலமதில் சிறந்து நிற்பர்
தமரென உலகோர் தம்மைத் தாங்கியே வாழ்ந்து நிற்பர்;

3. குகன்தனை நினைந்து வாழ்வோர் குன்றென உயர்ந்து நிற்பர்
பகலவன் ஒளியைப் போலே பாரினில் மறைதல் இன்றி;
தகவிலாச் செயல்கள் செய்யார்! தரித்திரர் ஆகார் என்றும்!
சுகமதே பெற்று வாழ்வார் சுந்தரம் மனத்திற் கொண்டு.

4. **வே**லனை நினைந்து வாழ்வோர் விரும்பிய முடித்துக் காண்பர்
காலனை எதிர்த்து வாழ்வர் கருதிய செயல் முடிப்பர்
நூலினில் இயைந்த சாயம் நூலினோ டழியு மாப்போல்
காலனை வென்று வாழ்வர் கடவுளோ டழிவு காண்பர்.

5. **க**ந்தனை நினைந்து வாழ்வோர் கவலைஇல் வாழ்வு வாழ்வர்
நிந்தனை செய்வோர் தம்மை நிலமதில் வீழச் செய்வர்
பந்தமில் வாழ்வு வாழ்ந்து பரமனை நெருங்கி நிற்பர்
இந்தநல் லுலகந் தன்னில் இணையவர்க் கில்லை யாமே!

6. **அ**றுமுகன் நினைவில் இந்த அவனியில் வாழ்ந்து நிற்போர்
உறுதிகொள் மனத்தைப் பெற்று உவப்புடன் உலகில் வாழ்வர்;
நிறுத்த ஓர் தடையு மின்றி நிலமதில் பணியைச் செய்வர்
மறுத்திடா துதவி செய்வர் மன்பதை உயிர்க ளுக்கே!

ஒன்றுபடுவோம்! உயர்வடைவோம்!!

—துரை. சௌந்தரராசன்,
காஞ்சிபுரம்.

உலகில் உயிரினங்கள் தோன்றியது முதல் அவற்றிடையே ஒருங்கிணைந்து வாழும் எண்ணம் இயற்கையாகவே தொடர்ந்து வருவதை அனைவரும் அறிவோம்.

'தனிமரம் தோப்பாவதில்லை' — அறிந்த உண்மை. ஒருவர் கைதட்ட ஓசை அதிகம் எழாது — தெரிந்ததே. அஃதே போல் ஒருவராக நின்று எதையும் சாதித்ததாக வரலாற்றில் நாம் கண்டதில்லை. விலங்கினங்களும், பறவை இனங்களும் கூட்டம் கூட்டமாக ஒன்றுபட்டு வாழ்வதைக் காண்கிறோம். இதுதான் இயற்கையின் ரகசியமும் கூட. இயற்கைக்குக் கட்டுப்படாதார் யார்?

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'' இன்றேல் 'தாழ்வு' எனத் தெளிவுறக் கூறிச் சென்றார் மகாகவி பாரதியார்.

குடும்பத்தில் ஒற்றுமை இருப்பின் அதைக் கோவிலாகக்கருதலாம், அமைதி நிலவும், அருள் கூடும் இன்புறவாழலாம். ஒரு சிறிய குடும்பத்தில் உள்ள நான்கு அல்லது ஐந்து பேரும் இணைந்து ஒன்றிச் செயல்பட்டாலே இத்தகைய இலாபம் கிடைக்கின்றதென்றால் நம் சமுதாயத்தில் உள்ள அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட்டால் அடையும் பலன் அளததற்கரியது — சொல்லற்கரியது. நமக்குள் ஒற்றுமையைக் காத்து நம் நலனுக்குப் பாடுபட நாம் எண்ணியதன் பலனாக நமது தென் இந்திய செங்குந்தர் மகாஜன சங்கம் உருவெடுத்துப் 'பொன் விழா'க் காலம் தொடர்ந்து 'வைர விழா' நோக்கி கம்பீரமாகச் செயல்படும் வண்ணம் வளர்கிறது கிடைத்தற்கரிய பல பெருமக்களை உறுப்பினர்களாகவும், செயல்புரிபவர்களாகவும் கொண்டு, பிற சமுதாயச் சங்கங்களைவிட முன்னணியில் நிலைத்து நிற்கிறது.

கூடும் உறவு கூட்டுறவு என்றும் கூட்டுறவே நாட்டுயர்வு என்றும் சொல்லித் தெரிவதில்லை. அத்தகைய வலிவான சங்கம் அமைந்தது பெரிதல்ல அது ஆற்றவிருக்கும் திட்டங்கள், செயல்முறைகள் மிக முக்கியமானவை. 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பார்கள். இச் சங்கத்தினால் ஒன்றுபட்டவருக்கும் இத்துடன் தொடர்பு கொண்டவருக்கும் அனேக நன்மை பயக்கிறது எனில் அதுகுறித்து நாம் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சி கொளல் வேண்டும்.

நமது தென்னிந்திய மகாஜன சங்கத்தின் தூண்களாக இருக்கும் அனைத்துப் பொறுப்பில் உள்ள பெரியவர்களும், இளைஞர்களும் நகமும் தசையும் போல,உடலும் உள்ளமும் போல ஒருங்கிணைந்து நோக்கங்களுக்காகச் செயல்பட்டு, விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு முன்னேற்றப்பாதையில் செல்ல ஆவன செய்ய இந்நந்நாளில் உறுதி மேற்கொள்வோம்.

தலைவர் ஒருவர் — தொண்டர்களின்றேல் பயனுள்ளசெயலைச் செய்ய முடியாது. எந்த ஒரு தனி மனிதனும் எதையும் சாதிக்க முடியாது இருவரைக் காட்டிலும் நால்வர் சாதிப்பது பல எனில், பல ஆயிரத்திற்கும் மேல் உள்ள நமது சங்க உறுப்பினர்கள் ஒன்று கூடிப் பல இலட்சங்கள் உள்ள நமதுசெங்குந்தர் சமுதாயத்திற்குச் செய்யும் செயல்கள் ஏட்டில் அடக்கவும் இயலுமா!

எனவே, அனைவரும் ஒன்றுபட்டு ஓங்கி உயர்ந்து வளர்ந்து தோப்பாகி ஆல்போல் தழைத்து குளிர் நிழலாம் நன்மைகள் பலவற்றைப் பெற ஆவன செய்வோமாக!

ஒன்றுபடுவோம்! உயர்வடைவோம்!!

மாநாட்டு மலர்க் குழு

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், M.A., M.Lit., Ph.D.,
தலைவர்.

புலவர். சா. ஜகந்நாதன், B.Lit.,
செயலர்.

புலவர். ச. சதாசிவம், M.A.,
மலர் - உருவாக்கம்.



திரு. சு. திருவேங்கடம்,
தலைவர்,
விளம்பரக்குழு.



திரு. C. E S. பெருமாள்,
செயலாளர்,
விளம்பரக்குழு.



திரு. N. கோதண்டபாணி,
தலைவர்,
ஊர்வல அமைப்புக்குழு



திரு. V. மாசிலாமணி,
செயலாளர்,
ஊர்வல அமைப்புக்குழு.

“திருமுருகாற்றுப்படை”

டாக்டர்
சி. பாலசுப்பிரமணியன்,
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
தமிழ்மொழித் தலைவர்
சென்னைப் பல்கலைக் கழகம்.



செந்தமிழ் மொழியில் தோன்றிய சீர்சால் இலக்கியங்களுள் சங்க இலக்கியங்கள் கவிதையழகாலும் பொருட் சிறப்பாலும் தலைசிறந்த இலக்கியங்களாகும். சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் பொற் கால வாழ்வைச் சிறப்பித்துப் பேசுபவை யாகும். வரலாற்றுப் பெருமையும் பழமை யும் சான்ற அத்தொன்நெடுங்காலத்திலேயே தமிழர் வாழ்ந்த பீடு சான்ற பெருவாழ் வினைத் துங்கமுறத் துலக்கி நிற்பன மேற் கணக்கு எனக் கூறப்படும் பாட்டும் தொகை யுமான இலக்கியங்களாகும். கற்பனை வள மும், கருத்துச்செறிவும், காட்சிப்பரபரப்பும், உணர்வூட்டும் திறமும், அறிவூட்டும் ஆற்ற லும், சுவைபடச் சொல்லும் நயமும் ஒரு சேரக் கொண்டு சங்க இலக்கியங்கள் பழந் தமிழர் வாழ்க்கையினை உளமுற எடுத்துரைக் கின்றன.

பத்துப்பாட்டு நூல்களும் சிறப்பும்

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி- மருவினிய
கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

என்னும் பழஞ்செய்யுள் பத்துப்பாட்டு நூல் கள் இன்னின்னவை என்று தெரிவிக்கும். இப் பத்து நூல்களில் ஆற்றுப்படையாக அமைந்த நூல்கள் ஐந்தாகும். அவையாவன: திருமுருகாற்றுப் படை, பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை, என வழங்கும் மலை படு கடாம். அகப்பொருள் பற்றிய பாட்டுகள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு பட்டினப்பாலை ஆகிய மூன்றுகும். புறப் பொருள் பற்றியன எஞ்சிய பிறவாகும்.

“ஆன்றோர் புகழ்ந்த அறிவினிற் றெரிந்து
சான்றோ ருரைத்த தண்டமிழ்த் தெரியல்
ஒன்பது பாட்டும்”

என்ற நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப் பாயிரம், பத்துப்பாட்டின் தனிச்சிறப்பாகும். மேலும், பத்துப்பாட்டில் இலக்கணத்தோடு இயைந்த கற்பனையைக் காணலாம் என்று

மனோன்மணியம் தந்த பேராசிரியர் பி. சுந்தரம் பிள்ளையவர்கள் குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

பத்துப்பாட் டாதிமனம் பற்றினார்
பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே.

பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையின் இடம்:

பத்துப்பாட்டில் முதலாவதாக இடம் பெற்றுள்ள நூல் இதுவாகும். 317 அடிகளை உடைய ஆசிரியப்பாவான் இயன்றநூலாகும் இது. புலவராற்றுப்படையொன்றும் வழங்கப்படும் இந்நூல், சைவப் பெருமக்களால் இன்றும் முருகன் திருவருள் வேண்டுவோர் நாள்தோறும் பாராயணம் செய்யும் நூலாகும் சிறப்புப் பெற்றதாகும். பத்துப் பாட்டு நூலிற்கு முகப்பாக-கடவுள் வாழ்த்துப்பாடல் போன்று அமைந்துள்ளது சைவப்பேருலகு பிற்காலத்தே திருமுருகாற்றுப் படையினைப் பதினோராம் திருமுறையில் ஒரு நூலாகச் சேர்த்துள்ளது. திருமுருகாற்றுப் படையினை நாள்தோறும் பாராயணம் செய்வோர் பெறும் பயன்களைப் பின்வரும் இரு வெண்பாக்கள் குறிக்கும்:

பரங்குன்றிற் பன்னிருகைக்
கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு
—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற்றுப்
படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற்றுப்
படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்
முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை
தீர்த்தருளித்
தானினைந்த வெல்லாந் தரும்.

பதினெட்டாம் நூற்றுண்டின் மிகப் பெரும் புலவரும், பிரபுலிங்க லீலை எனும் சிறந்த நூலைத் தந்த ஆசிரியருமான துறை மங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள்சீகாளத்திப் புராணத்தில் திருமுருகாற்றுப் படையைப் பின்வருமாறு பாராட்டுகின்றார்.

இன்னன நினைந்து கீர னிலங்கிலை
நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியு மாரப் பருகமு தாகி
யோதின்
உன்னிய வுன்னி யாங்கிங் குதவுவ தாகிப்
பாவுள்
முன்னுற வந்து நிற்கு முருகாற்றுப்
படை மொழிந்தான்
—சீகாளத்திப் புராணம் : நக்கீரர்: 115

ஆற்றுப்படை :

தொல் காப்பியம் புறத்திணையியலுள், 'தாவினல்லிசை' என்னும் நூற்பாவினுள்,
கூத்தரும் பாணரும் பொருநரும்
விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்
—தொல்காப்பியம் : புறத்திணையியல்:36

என்ற பகுதி உளது. இதுவே ஆற்றுப்படையில் இலக்கணத்தை எடுத்து மொழிகின்றது. தான் பெற்ற பெருவளத்தைப் பெறாதவர்க்கு அறிவுறுத்தும் அருமைச் செயல் ஆற்றுப் படையின் விழுமிய கருத்தாக அமைகின்றது.

திருமுருகாற்றுப்படையின் தனிச்சிறப்பு:

பிற ஆற்றுப்படைகள் எல்லாம் வழிகாட்டப்பெறுகின்றவனது குடிப்பெயரால் பெயர் பெறும். முருகனிடம் வழிகாட்டப்படுவோர் உலக மக்கள் அனைவரும் ஆனதால், புரவலன் பெயராலேயே இந்நூல் திருமுருகாற்றுப் படையென வழங்கப்படுகிறது.

"கந்தழியைப் பெற்றானொருவன் அதனைப் பெறாதானொருவனுக்குப் பெறுமாறு கூறி

அவனை வழிப்படுத்துக் கூறுவான் என்பது பற்றிச் செய்யுள் செய்தாராயிற்று'' என்று நச்சினார்க்கினியர் குறிப்பிடுவதனின்றும். நூலின் தனிச் சிறப்பினை யறியலாம். "கந்தழியாவது, ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்'' என்றும் அவரே மேலும் விளக்கி உள்ளார். "முருகாற்றுப்படையென்றதற்கு வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப் படுத்ததென்று பொருள் கூறுக'' என்று நச்சினார்க்கினியர் பொருள் விளக்கந் தந்துள்ளார்.

பன்மொழிப் புலவர் டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் முருகாற்றுப் படையின் சிறப்பினைப் பின்வருமாறு மொழிவர்; "உலகத்தில் எல்லோர் அறிவையும் மயக்கிக் குழப்புவது, நன்மை தீமைகளும், இன்ப துன்பங்களும் உலகில் சிக்கிக் கிடக்கின்ற நிலையேயாம். தீமையினை விலக்குவதே தத்துவ சாத்திரங்களின் பெரு முயற்சி; கடவுட் புலவர்களின் பேரவா. இந்த ஆற்றுப்படையைப் பாடிய நக்கீரரும் இந்தமுயற்சியில்ஈடுபட்டுப்பாடுகின்றார்.ஒளி வடிவான ஞாயிற்றைக் காணும்பொழுதும் முருகன் காட்சிஅளிக்கின்றான். வெயிலுக்கும் ஒளிக்கும் எதிர்மறையான மழையிலும் இருளிலும் தொட்டுப் பார்த்து, அதன் உருண்டை வடிவால் கடப்பம் பூவென அறியும் இடத்திலும் அப் பூவில் ஆழ்ந்து ஒளிக்கின்றான் ஆண்டவன். நன்மையின் வடிவம் சூரரமகளிர். தீமையின் வடிவம் பேய்மகள். இவை இரண்டும் முருகனது இரு வேறு வழிபாட்டு வடிவமாகத் தோன்று-கின்றன. ஆற்றுப்படையில் பெண்அழகினைப் புனைந்துரைக்கும் வழக்கத்தினைக் கண்டோம். இங்கும் பெண் அழகு செய்து கொள்ளும் இயற்கையைப் புலவர் பாடுகின்றார். ஆற்றுப்படையில், ஒப்பனையை இருந்தவனது வலிமையும், வந்தவனது செல்வமும் முரண் பட்டுத் தோன்றும். இங்கே உலகின் அடிப் படையான இன்ப துன்ப, நன்மை தீமைகளின் முரண்பாடு தோன்றுவதனைக் காணலாம்'' என்பர்.

நூலின் தொடக்கம்

நூலின் தொடக்கமே அருமையாக அமைந்துள்ளது. 'உலகம், என்ற மங்கலச் சொல்லால் தொடங்குகின்றது; உலகம் நலத். துடன் உயரிய பொருளைப் பற்றிய அறிமுகம் நமக்குக் கிடைக்கின்றது.

> உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
> பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
> —திருமுருகு: 1—2

கைபுனைந்தியற்றாக் கவின் பெருவனப்புச் சுட்டப்படும் அழகு தனித்தனிமையும் சிறப்பும் வாய்ந்ததாகும். நன்குவிளக்கம் அமைந்த திருமேனி. தன்னை வேண்டி நிற் போரை — அடைக்கலம் என அண்டி நிற்போரைத் துன்பத்திலிருந்து காக்கும் வலிய தாள்கள்; தனக்குப் பகையாயினாரைத் தேய்த்து நிற்கும் தடக்கைகள்; குற்றமற்ற கற்புடைய தெய்வயானையின் திறல் விளங்கு கணவன். இப்படியாகத் திருமுருகப் பெருமானை நக்கீரர் நமக்கு அறிமுகப்-படுத்துகின்றார்:

> ஓவற விமைக்கும் சேண் விளங்கு
> அவிரொளி
> உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
> செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
> மறுவில் கற்பின் வாணுதல் கணவன்,
> - திருமுருகு:3—6

ஆறுபடை வீடுகளில் அமர்ந்து அடியார்க்கு அருளுந்திறம்:

திருப்பரங்குன்றம் இமயம் நிகர்க்கும் பெருமை சான்றது. அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும் குன்று. சேற்றிடையே முள்ளையுடைய தாமரை மலர்களில் வண்டுக் கூட்டங்கள் இரவு முழுவதும் இனிமையுடன் தங்கிநின்று, வைகறையில் மலர்ந்து காணும் நெய்தல் மலர்களில் தேனை உறிஞ்சிக் குடித்து ரீங்காரம் இடும் குன்று அது: அக்குன்றில் திருமுருகன் விரும்பியுறைகிறான்:

இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண் டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன்.

-திருமுருகு: 72-77

சேவடி படரும் செம்மல் உள்ளமொடு, செலவு நயந்து சென்றால் முன்னிய வினையினை இன்னே பெறலாம்என வழிப்படுத்துகின்றார் நக்கீரர்.

ஆறுமுகம் பன்னிருகையுங் கொண்டு, சான்றோர்களாலே புகழப்பட்ட மிக்க சிறப்பினையுடைய திருச்சீரலைவாயிலில் திரு முருகன் கொலுவீற்றிருக்கின்றான். வேழத்தின்மேல் முருகன் வருவதாகவும் உரைக்கின்றார்."உலகிலுள்ள மக்கள் காதல், போர், ஞானம்,விஞ்ஞானம், சட்டம் என்று பலப்பல துறையில் முயல்கின்ற முயற்சியை எல்லாம் ஆறுபிரிவாகப்பகுத்து,அவற்றையே ஆண்டவரின் முகங்களாக்கி, அவற்றின் இயக்க நிலையைக் குறிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவனவாகப் பன்னிரண்டு கைகளையும் புகழ்ந்து, இவ்வாறு அனைத்துலகையும் முருகனது வடிவாக்கி, அங்கே இயற்கையும், அந்தப் பெருங்காட்சியில் ஈடுபடு-வதால் மூங்கில்கள் ஊத, சங்குகள் ஒலிக்க, இடியே முழவாக ஒலிக்க, ஆண்டவனது பிரபஞ்ச விரிவின் வடிவான மயிலே கொடியாக வெற்றி முழக்கம் செய்ய, அடியார்க்கருள முருகன் விரைந்து வருவதனைத் திருச்சீரலைவாயிலில் பெருமையாகப் பாடுகின்றார் புலவர்" என்பர் டாக்டர் தெ. பொ. மீ. அவர்கள்.

வான்மீன் பூத்தாற் போன்ற முனிவர்கள், காற்றடித்தாற் போன்ற நடையுடன், தீப்பற்றிக் கொண்டாற்போன்ற ஆற்றலுடன்,இடிஇடித்தாற்போன்ற ஆற்றலுடன் மடந்தையுடன் கோலக் கொலுவீற்றிருக்கும் முருகனிடம் குறையிரந்து நிற்கும் காட்சியும் திருவாவினன்குடிக் காட்சியாக விரிகின்றது.

திருவேரகத்தில் நாற்பத்தெட்டாண்டுகள் பிரமசரியம் காத்த அந்தணர்கள் பின் மணஞ்செய்து கொண்டு துணியோடும் பூணுலோடும் மந்திரம் நவின்று மலர் தூவி வழிபடும் காட்சியினைக்காண்கின்றோம்.

குன்றுகளிலெல்லாம் கோலக்குமரன் நெஞ்சு விரும்பியெழுந்தருளியிருக்கும் நேர்த்தியைக் குன்றுதோறாடற் பகுதியிலே குறைவற எடுத்து மொழிகின்றார் நக்கீரர் பெருமான். குரவைக் கூத்தெடுத்துக் குமரப்பெருமானை வழிபட்டேத்துகின்றனர் மகளிரும் மைந்தரும்.

முருகாற்றுப்படுத்த வியனகரில் பழைய வழிபாடு மேற்கொள்ளப்பெறுகிறது. வெறியாட்டு, வெண்பொரி, ஆட்டுக் கிடாய்ப் பலி, குருதியரிசி, வெறியாட்டு வாத்தியங்கள், குறமகள் மேல் ஆவேசம் முதலியன அனைத்தும் கூறப்படுகின்றன. வேலன் இழைத்த வெறியயர்களனும், காடும்,காவும், கவின்பெரு துருத்தியும், யாறும், குளனும் வேறு பல்வைப்பும், சதுக்கமும், சந்தியும் புதுப் பூங் கடமும், மன்றமும் பொதியிலும் கந்துடைநிலையினும் முருகன்தோன்றும்நிலைக்களங்களாகின்றன.பிணிமுகம் மேற்கொண்டு அவுணர் பீடழித்த பெருமான் 'வேண்டுநர் வேண்டியாங்கு எய்தி'னர் வழிபட, அறுவர் பயந்த ஆறமர் செல்வ, ஆல்கெழு கடவுட் புதல்வ, மலைமகள்மகனே, மாற்றோர் கூற்றே, கொற்றவை சிறுவ, பழையோள் குழவி, தானைத் தலைவ, மாலை மார்ப, நூலறி புலவ, பொருவிறல் மள்ள, அந்தணர் வெறுக்கை, அறிந்தோர் சொன்மலை, குறிஞ்சிக் கிழவ, புலவர் ஏறே, பெரும்பெயர் முருக, இசை பேராள, பொலம்பூண்சேய் என்றெல்லாம் வாழ்த்து எடுக்க, முருகப் பெருமான் தெய்வஞ் சான்ற தன் திறல் விளங்கு உருவினை; பண்டைத் தன் மணங்கமழ் தெய்-வத்து இளநலங்காட்டி,"அஞ்சாதே! நீ வந்த உள்ளதன் நோக்கத்தினை நானறிவேன்" என்று அன்பான ஆறுதல் மொழிகள் கூறி 'நீயே' உனக்கு உவமையாகும்படிச் சிறந்த நிலையைத் தருவான்' என்று நக்கீரர் நவில்-கின்றார்.

இறுதியாகப் பழமுதிர்சோலைக் காட்சி, கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் இடம் பெற்றுள்ளது. பழமுதிர்சோலையில் வீழும் அருவி, சந்தன மரத்தைத் தள்ளி, மூங்கில் மரவேரைப் பிளந்து கொண்டு ஓடி வருகின்றது. தேன் கூடு சிதைந்து தேனைத்தர ஈரப்பலா வீழ, சுரபுன்னை மலர் உதிர, குரங்குகள் குளிரால் நடுங்கப் பொன்னையும் மணியையும் அடித்துகொண்டு, வாழை மரமும் மிளகுக் கொடிகளும் சாய அருவிநீர் அடித்துக் கொண்டு வருகிறது. பெண்கோழி அஞ்சி நிலைகெட, கரடி முழைஞ்சுகளுக்குச் சென்று அடைக்கலந் தேட, காட்டுப்பசுக்கள் ஏறுகளுடன் முழக்கமிட, மிகவுயர்ந்த உச்சியிலிருந்து 'இழும், எனும்ஓசையுண்டாக அருவி குதித்தோடி வருகிறது.

இழுமென இழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.
- திருமுருகு: 316—317.

இத்தகு இயற்கையில் இனிய பெற்றி வகை-யுற்றுத் துலங்கும் பழமுதிர்சோலையிலே திருமுருகப் பெருமான் விரும்பி யுறைகின்றார் என்று கூறி நக்கீரர் திருமுருகாற்றுப் படையினை முடிக்கின்றார்.

முடிவுரை:

திருமுருகாற்றுப்படையினை நாள் தோறும் ஓதி நின்றால், முருகா என்றுஉள்ளங் குளிர வழிபாடியற்றி நின்றால், வள்ளி தேவ யானையுடன் முருகப் பெருமான் வந்து அருள் வழங்குவார் என்பது நம் முன்னோர் தம் முடிந்த நம்பிக்கையாகும்.

ஒருமுரு காவென்று உள்ளங் குளிர
உவந்துடனே
வருமுரு காவென்று வாய்வெரு
வாநிற்பக் கையிங்ஙனே
தருமுரு காவென்று தான்புலம் பாநிற்பத்
தையன்முன்னே
திருமுரு காற்றுப் படையுடனே வருஞ்
சேவகனே.

எனவே திருமுருகாற்றுப்படை, பழைய பாட்டானாலும் இன்றும் அழகு, இளமை, மனம், கடவுள் தன்மை நிறைந்த முருகப் பெருமானை முன்னி, வேண்டுவன வேண்டி யாங்குப் பெறுவதற்கு வழிகாட்டியாக உளது எனக் கூறி அமைகிறேன்.

செங்குந்தர் தந்தவை

நிலைதந்தார் புவியினுக்கும் யாவருக்கும்
அபிமானம் நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனம்செய்
திடஎன்றே கையில் தந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்தர்
என்கவிக்கு விலையதாகத்
தலைதந்தார் எனக்கொட்டக் கூத்தன்
எனப் பெயரினையும் தாம்தந்தாரே.

—ஒட்டக்கூத்தர்

"கைக்கோளன் கனவு" - "காஞ்சியிலே நினைவு"

இரா. பாலசுப்பிரமணியன்,
M.A, B.Sc, M. Ed. C.T.E.
கல்லிடைக்குறிச்சி.

அறுமுகனின்
திருமுருகன்
முத்தமிழின்
நற்றமிழும்
நற்றவப்
அறப்பணியும்
செய்யும்
உண்டி
உடுக்கக்
உடுக்கக்
பாலாடை
தாலாட
காலாடக்
தோலாடிக்
கைத்தொழில்
கைகொடுத்துக்
சங்கமமைத்
பங்கென்ன
எங்கெங்கு
அங்கங்கு
கங்கை
தறிக்குழியில்
ஒளிவிளக்
முற்பட்டோர்
பிற்பட்ட
நூற்றாண்டு
காற்றாடி
கல்வி
வீரமுடன்
சேர்ந்து
கயிலை
தென்பொதிகை
பாதாளம்
துயிலுகின்ற
சமதர்ம
பிற்பட்டோர்
சகம்புகழும்

அறுபடையும்
வழித்தோன்றல்
மடிவளர்ந்து
நல்லிசையும்
பணிகள்
இறைப்பணியும்
இன்பணிகள்
கொடுத்தார்
கொடுத்தோர்
கொடுத்தோம்
போலே
இன்பத்
கையாட
கிடந்த
செய்து
கரைசேர்க்க
திட்டோம்;
நமக்கிங்கு?
செங்குந்தர்
அவலமிடும்
செங்கைக்குப்
கருகிவிழும்
கேற்ற
நூற்றாண்டு
இனத்தவரை
இருபதிலும்
நாமுமவர்
கேள்விகளில்
வேள்விசெய்ய
செயல்படுவோம்
தாழ்ந்ததென
வந்தடைந்தான்;
விட்டுமேல்
கைக்கோளர்
சமுதாயம்
நாமெல்லாம்
சரித்திரத்தை

ஒருகுடைக்கீழ்
தரும்கைகோ
மூவேந்தர்
நாற்றிசையும்
நாள்தோறும்
அவனியிலே
செய்தோம்;
உயிர்கொடுத்
உயர்மானம்
உயர்மானம்
பட்டாடை
தறியாட
கண்ணாட
தொன்மைக்
வையகம்
கைக்கோளர்
சங்கம
பாங்குடன்
கங்கையென
செம்மைக்கைக்
பங்கைப்
தளிர்க்குலமும்
ஓயாது
மூன்றுமுதல்
பின்தங்கி
நூலறுத்து
கைப்பாவை
கரைசேர்ந்த
சாரமுடன்
நாமே!
குள்ளமுனி
பயிலும்
படிக்குவர
துள்ளி
சார்பிலா
யுகதர்மப்
சூத்திரமாக்

உய்வுற்ற
ளமக்காள்!
முடிகாத்து,
மணக்க
செய்து;
இன்பமுடன்
வாழ்ந்தோம்.
துய்ந்தார்!
காத்தார்!
காத்தோம்.
நூலாடை
நெய்தோம்,
கருத்துமாட
கைக்கோளர்,
வாழ்வித்தோம்!
நாம்காக்க,
மாணோம்.
ஒன்றானோம்.
உள்ளனரோ;
கோளர்துயர்,
பரிசாக்கி
தளைத்திடவே
சூளுரைப்போம்.
முடிகெடுத்து,
முன்சென்று,
விடுகின்றார்,
யாகின்றோம்.
அவருடனே
கற்றிங்கு
சோரோம்.
வருந்தான்
பாலகர்நாம்
வேண்டுமெனில்,
எழுங்கள்!
சுதந்திரம்பெற,
போர்செய்து
குவோமே!

செங்குந்தர் குலத்துக்கு
ஒரு விண்ணப்பம்

கவிஞர் தென்னவன்,
செம்பொன்னார்கோவில்.

செங்குந்தச் செல்வர்காள் சேர்ந்து வாரீர்;
சிந்தையுள என்னாசை செப்பு கின்றேன்;
சங்கங்கள் அங்கங்கே தோன்ற வேண்டும்;
தலைச்சங்கம் அதனோடு தொடர்பு வேண்டும்;
எங்கெங்கும் நம்மிடையே எழுச்சி வேண்டும்;
இப்பொழுதே அதில் கவனம் செலுத்த வேண்டும்;
அங்கங்கே சிறுபூசல் எழுதல் கூடும்;
அவற்றையெலாம் பெரிதாகக் கருத வேண்டாம்.

மாவட்டச் சங்கங்கள் வளர வேண்டும்;
மாநாடு அடுத்தடுத்து நடத்த வேண்டும்;
மேவுபுகழ்த் தலைச்சங்கம் மேலும் மேலும்
மேன்மையினைப் பெற்றுலகில் மிளிர்தல் வேண்டும்;
ஆவலுடன் சிற்றூர்கள் கிளைஅமைத்தே
அன்புடனே நம்மவரைக் கூட்ட வேண்டும்;
சேவற்கொடித் திருமுருகன் வழியில் வந்த
செங்குந்தர் நாமெனவே உணர்த்த வேண்டும்.

அரசியல்சீர் தலைவரெல்லாம் அன்பாய் உம்மை
அரவணைக்கப் பார்ப்பார்கள்; ஆன மட்டும்
சரசமொடு பேசியுந்தம் வாக்குத் தம்மை
தட்டிக்கொண் டேறிப்போய்த் திரும்பிப் பாரார்;
முரசறைந்து இதைநானும் எட்டுத் திக்கும்
முறையாக ஊரறிய முழக்க அஞ்சேன்
வரன் முறையில் வாழ்ந்திட்டால் நாமெல்லோரும்
வழிநடத்தும் நம் தலைவர் சொல்லில் நிற்போம்.

உழவர்களுக்(கு) அடுத்தபடி நாம்தாம் நாட்டில்
உள்ளபடிப் பெருந்தொகையாய் இருக்கும் போதில்
குழைவெதற்கு? பணிவெதற்கு? குறைவு எதற்கு?
கோலோச்சும் முதல்வரையும் நினைத்தால் நாளை
அழகற்றக் குடில்எனினும் தலைவர் அங்கே
அமர்ந்துள்ளார் எனில் அவரைப் பேட்டி காண
விழைவுடனே வாயிலில் நாம் காக்கச் செய்ய
வேண்டுமெனும் தகைமையினை விரைந்து கொள்வீர்!

நமக்குரிய ஓரிதழ்'செங் குந்த மித்திரன்'
நம்மவர்வீ டெங்கும் அது நடக்க வேண்டும்;
தமக்குரிய ஊன்றுளனவே பெரியோர் தாமும்
தம்கையில் எப்போதும் கொள்ள வேண்டும்;
உமைக்கினிய மைந்தனவன் நமது கந்தன்
உவந்தேற்ற குந்தம்போல் இளைஞ ரெல்லாம்
தமக்கினிய கைவாளாய் அதனை ஏந்தித்
தருக்குற்று மிடுக்கோடு செல்ல வேண்டும்.

காஞ்சி நாட்டின்
செங்குந்தர் கிளை நாடுகள் 72

1-வது சிவபுர நாட்டிற்குக் கிளை நாடுகள்

1 மேல்பட‌ப்பை, கீழ்பட‌ப்பை, ஆத்தஞ்சேரி
2 மாளும்பதி, செம்பாக்கம், மூணத்தொன்று, அகரம்
3 முன்னூர், பரமேசுரமங்கலம், மதுராந்தகம்
4 திண்டிவனம்
5 வக்கரைப்பத்து
6 திருவக்கரை, புதுச்சேரி, ஒழுகரை
7 திரிபுவனம், நல்லாத்தூர்
8 திருப்பாலூர்
9 மிடையாத்தூர், திருவெண்ணெய்நல்லூர்
10 பனமுலை, அனந்தபுரம்
11 வழுதிலைப்பட்டு
12 மாப்பரை, வரமாகூர்
13 பட்டணம், கருங்குழி
14 மன்னூர்கோவில்
15 பாளையம்
16 குப்பாக்கம்
17 சம்பை, திருவரங்கம்

2-வது தொந்திபுர நாட்டிற்குக் கிளை நாடுகள்

1 முருகமங்கலம்
2 திருவாமாத்தூர்
3 திருவண்ணாமலை
4 செங்குரிஞ்சி
5 கச்சித்திரல்
6 சேலம்
7 திட்டக்குடி
8 திருமலைப்பாடி
9 திருக்கோவில்
10 திருநாகேச்சுரம்
11 திருச்செம்பள்ளி
12 சீர்காழி
13 மாப்பிள்ளைக்குப்பம்
14 தேவூரு
15 காட்டூர்
16 போலகம்
17 நல்லாச்சேரி

3-வது விரிஞ்சிபுர நாட்டிற்குக் கிளை நாடுகள்

1 ஆமூர்
2 வானியம்பாடி
3 கொரட்டை
4 தருமபுரி
5 பவானி
6 தாரமங்கலம்
7 ஏழாநாடு
8 புகழாரை
9 பூரதிரை
10 திருச்செங்கோடு
11 வையாபுரி
12 அவிநாசி
13 நஞ்சுண்டகுடி
14 வகவங்கபாளையம்
15 கருவூர்
16 நாமக்கல்
17 காங்கேயம்

4-வது சோளிங்கபுர நாட்டிற்குக் கிளை நாடுகள்

1 திருத்தணிகை
2 தெளிநாடு
3 நெறிநாடு
4 திருவடிநாடு
5 திருமழிசை
6 கொந்தம்பாக்கம்
7 திருக்காளத்தி
8 தொண்டமாநாடு
9 வரைநாடு
10 வெங்கட்டகிரி
11 திருப்பதி
12 ஜெகந்நாதம்
13 சீட்டம்பள்ளி
14 செம்புரம்
15 வரதபுரி
16 சந்திரகிரி
17 காசி

—ஆதாரம்: 'செங்குந்தர் ஜாதி நூல் கோர்வை'
தகவல்: துரை. சௌந்தரராசன்

வள்ளலார் மாணவர் இல்லம்

மு. ரா. பெருமாள் முதலியார், B.A., (Hons) L.T.
(முன்னுள் முதல்வர், ஆசிரியர் கல்லூரி, சென்னை.)

"கட்டி முடிக்கப்பெருத நிலையில் இருக்கும் மாணவரில்லத்தைக் கட்டி முடித்து மாணவ சமுதாயத்துக்குக் கல்வி ஊட்டும் நிலையமாக ஆக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி," தஞ்சையில் 4—12—1978 அன்று கூடிய தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பொதுக் குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிய தாகச் செங்குந்தமித்திரன் 1983 நவம்பர் திங்கள் இதழில் செய்தி வந்துள்ளது. இது பலவகையிலும் வரவேற்கத்தக்க தீர்மானந்தான். உயர்கல்வி கற்கப் பலவேறு ஊர்களிலிருந்து சென்னை மாநகருக்கு வருகின்ற செங்குந்த மாணவர்கள் வசதியும், பாதுகாப்பும் உடைய ஓர் இல்லத்தில் தங்கிப் படிப்பது மிகவும் நல்லது இதனை அரசும் தனியார் கல்லூரிச் செயற் குழுக்களும் உணர்ந்திருப்பதால் கல்லூரிகள் பலவற்ருேடும் மாணவர் இல்லங்களும் இணைந்திருக்கின்றன நமது சமுதாயம் பிற்பட்ட சமுதாயம் ஆதலால் மாணவரில்லத்தில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அரசு பொருளுதவி தருகிறது. எனவே, செங்குந்த மாணவர்களுக் கென்று தனி விடுதி வேண்டுமா என்பது ஆராய்ச்சிக்குரிய பொருளாகிறது இப் பொருள் பற்றி நான் சொல்லப்போகும் கருத்துகளைச் செங்குந்தகுலத் தலைவர்கள் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவர்தம் சிந்தனையைத் தூண்டுவதற்கேனும் என் கட்டுரை பயன் படும் என்று நம்புகிறேன்.

ஒரு சாதியைச் சேர்ந்த மாணவர்கள் மட்டும் தனியாக ஓர் இல்லத்தில் வசிப் பார்களாளுல், அவர்களுக்குத் தங்கள் சாதிப்பற்று மிகும் என்பதும் அந்தச் சாதியை மேம்படுத்த முயலவேண்டும் என்னும் எண்ணம் வளரும் என்பதும் மறுக்கற்பாலவல்ல. ஆளுல், பிறசாதி மாணவர்களோடு கலந்து பழகி உண்டு உறங்கி வாழும் வாய்ப்புக் கிடைத்தால் மாணவர்களின் மனம் விரிவடையும்; உயர்வு தாழ்வு எண்ணம் மறையும்; நாட்டின் பொதுநலத்திற்கு உழைக்கும் மனப்பான்மை வளரும். அன்றியும், நான் மேலே சொன்னதுபோல, அரசும் பொருளுதவி செய்வதால், நம் குல மாணவர்கள் கல்லூரிகளோடு இணைந்துள்ள மாணவர் இல்லங்களில் சேர்ந்து படிப்பது நல்லதாகும். அத்தகைய விடுதிகள் பலவற்றிலும் வசிக்கும் நம் குல மாணவர்கள் அவ்வப்போது ஒன்றுகூடி, தங்களுக் கென்று தனிப்பிரச்சினைகள் எவையேனும் இருக்குமாளுல் அவற்றைப்பற்றிப் பேசி, அவற்றிற்குத் தீர்வு காணலாம். அத் தகைய கூட்டங்களுக்குத் தேவையாளுல் சென்னையில் உள்ள நம் குலத் தலைவர் களையும் அழைக்கலாம். அந்தக் கூட்டங் களைச் செங்குந்த மகாஜன சங்கக் கட்டடத்தில் நடத்தலாம்.

கல்லூரிகளோடு இணைந்துள்ள இன்றைய மாணவர் விடுதிகளில் வசிக் கின்ற மாணவர்கள் பல தீய பழக்கங் களுக்கு ஆளாகியிருக்கிருர்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மை. பல மாண வர்கள் புகை பிடிக்கிருர்கள்; பலர் குடிக்கிருர்கள்; பலர் படிப்பில் நாட்ட மின்றி வெட்டிப்பேச்சில் நேரத்தை வீணடிக்கிருர்கள், மிகச் சாதாரணக் காரணங்களுக்காகவும், சில சமயங்களில் காரணமே இல்லாமலும் வேலை நிறுத்தம் செய்கிருர்கள்; விடுதி உடைமைகளை

அழிக்கிறார்கள். விடுதித் தலைவர் ஊழியர் போன்றோரைத் தாக்குகிறார்கள் இவற்றையெல்லாம் காணும் செங்குந்தப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மட்டும் ஒரு மாணவர் இல்லம் இருந்தால் நல்லது என்று நினைக்கக் கூடும். ஆனால், அந்த இல்லத்திலும் மேலே சொன்ன தீமைகள் நுழையா என்பது உறுதியா?

இத்தகைய தீமைகளைக் களைய வேண்டுமானால், முதலில் மாணவர்கள் ஒழுங்காய் நடப்பதற்குப் பழகவேண்டும் உயர்ந்த மதிப்பெண் பெறுகிற மாணவர்கள் படிப்பில் கவனமுடையவர்களாய் இருப்பார்களாதலால், உயர்ந்த மதிப்பெண் பெறுவோரே பெரும்பாலும் கல்வி நிலையங்களில் சேரவேண்டும். (மற்றவர்கள் தங்கள் மனதிற்குப் பிடித்த தொழில் துறைகளில் நுழையவேண்டும்.)

இரண்டாவது, விடுதியை நடத்துகிறவர்கள் ஊழலுக்கு இடம் தாராமல் நேர்மையாய் இருப்பதோடு மாணவர் நலனில் ஆர்வமுடையோராகவும் இருக்க வேண்டும். அத்துடன், அவர்களுக்கு நிர்வாகத்தில் பயிற்சியும் திறமையும் இருக்கவேண்டும். இந்த நிலை எந்த விடுதியில் இருக்கிறதோ அந்த விடுதி நன்றாய் நடப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, இப்போது கல்லூரிகளுடன் இணைந்துள்ள மாணவர் இல்லங்களில் குறைகள் இருந்தால் அவற்றை நீக்க முயலவேண்டும், அத்தகைய விடுதிகளில் நம் மாணவர் சேர்ந்து கொள்ளலாம்.

அன்றி, நம் மாணவர்களுக்கென்று தனி விடுதி சென்னை மாநகரிலேனும் வேண்டும் என்றால், விடுதி கட்டும் முயற்சியில் நாம் இன்னும் தீவிரமாய் ஈடுபட வேண்டும். அப்படி ஒரு விடுதியைக் கட்டி முடித்தால், அதற்கெனத் தனித் தன்மைகள் சில இருக்கவேண்டும், மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் மட்டுமன்றி, உடைகள், பாடநூல்கள், குறிப்பேடுகள், பேருந்துக்கட்டணம் போன்றவையும் அளிக்கவேண்டும். அதாவது அரசுப் பொருளுதவியோடு நாமும் சிறிது செலவு செய்ய வேண்டும்.

அன்றியும், இவ்வெல்லா வசதிகளும் இருந்தாலும் எல்லா மாணவர்களும் சரியாகப் படித்து உயர்ந்த மதிப்பெண் பெறுவார்கள் என்று சொல்ல இயலாது இரவில் படிக்கும்போது பல மாணவர்களுக்கு உதவி தேவைப்படும். அவ்வுதவியைச் செய்வதற்கேற்ற ஆசிரியர்களை விடுதியில் நியமிக்கவேண்டும். ஒவ்வொரு பாடத்திலும் மாணவர்க்கு உதவுவதற்கு ஒவ்வோர் ஆசிரியர் வாரத்தில் இரண்டிரவு விடுதிக்கு வந்து, மாணவர்களுடைய ஐயங்களை நீக்கி, அவர்கள் திருத்தமாய்ப் பயில உதவி செய்யவேண்டும்.

மேலும், அரசும், வங்கிகள் இரயில்வே போன்ற நிறுவனங்களும் நடத்துகின்ற போட்டித் தேர்வுகளுக்கு நம் மாணவர் சென்று வெற்றிபெறவேண்டும். ஆனால், பெரும்பாலோர் தோல்வி பெறுகின்றனர் அத்தகையோர்களை இரண்டு மூன்று மாதம் நமது விடுதியில் தங்கச் செய்து, தேர்வுக்குரிய பயிற்சியை அவர்களுக்குத் தருவது நன்மை பயக்கும். இது நமது விடுதி செய்யக்கூடிய தனித் தொண்டாயிருக்கும்.

மாணவர்கள் ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் மதிப்புக் கொடுத்தாலன்றி எந்த விடுதியும் சரியாய் நடைபெறாது. விடுதி விதிகளை மீறுதல் மன்னிக்க முடியாத குற்றமாய்க் கருதப்படவேண்டும். அந்த வகையில் நமது விடுதி பிற விடுதிகளுக்கு எடுத்துக்காட்டாய் அமைய வேண்டும். விடுதித் தலைவரும் அலுவலர்களும் மாணவர் குறைகளை முன்கூட்டியே அறிந்து அவற்றைக் களையவேண்டும். அந்நிலையில் கட்டுப்பாடு ஒரு பிரச்சினையே ஆகாது. பதினோராண்டு ஆசிரியர் கல்லூரி விடுதியை வெற்றியாக நடத்திய என் அனுபவம் இந்த நம்பிக்கையை எனக்குத் தருகிறது.



திரு. M. சண்முகம் M.A.,B.T.,
செயலர், வரவேற்புக்குழு.



திரு. M. M. தணிகைமலை
செயலர், வரவேற்புக்குழு &
துணைப் பொதுச் செயலர்
தென்னிந்திய செ. ம. ச. சென்னை.



திரு. சரவண பழநிவேலு.
செயலர், வரவேற்புக்குழு &
துணைப்பொதுச் செயலர்
தென்னிந்திய செ. ம. ச. சென்னை.

மகளிர் மாநாடு

திருமதி. யசோதா சண்முகம், M.A.,
சென்னை
மாநாட்டுத் தலைவர்.

திருமதி. முத்துலட்சுமி ராமலிங்கம்
ஆக்கூர் தஞ்சை Dt.
மாநாட்டுத் திறப்பாளர்.

திருமதி திருஞானம் பெருமாள்
காஞ்சிபுரம்.

திருமதி மீனாட்சி தணிகைமலை
சென்னை.

சமுதாயம் முன்னேற...

A. K. G. சம்பந்தம் அவர்கள்,
பொருளாளர்,
14-வது செங்குந்தர் மாநில மாநாடு,
காஞ்சிபுரம்.

இன்றைய சமுதாய வளர்ச்சியில் தேவைகள் அளவற்றுப் பெருகுவதும், அவற்றை நிறைவு செய்யப் பல்வேறு துணைகளை நாடவேண்டியதும் அடிப்படையான செயலாகிவிட்டது. சமுதாயத்தில் 'விதி' என்ற ஒன்றினைப் புகுத்தி ஆராய்ந்து தொழிலமைக்காமல் போராடுகின்ற நிலை வளரக்கூடாது.

இன்றைய சமுதாயம் ஒரு தொழிலையே சார்ந்து அதன் வழிநின்றே பொருளாதார நிலையை வளர்த்துவிட இயலாது. ஒரு குடும்பத்தார் அக்குடும்ப நிலையின் பாரம்பரியத் தொழிலையே மேற்கொள்ள வேண்டும் என்று விதியில்லை. ஒருவன் தன் அறிவால், உழைப்பால் அதற்குப் போட்டியாக நின்று அதனை வெல்லவேண்டும். மனிதன் இயற்கையைத் துணையாகக் கொண்டு தானே உற்பத்தி செய்யும் ஆற்றலைத் தன்னகத்தே கொண்டவன். அவ்வாற்றலை வெளிப்படுத்திக் காட்டி ஊக்கப்படுத்துவது கல்வியேயாம். கல்வி மேம்பாட்டு வாழ்க்கை தாம் வாழ மட்டுமல்லாமல், சமுதாயத்தையும் உயர்த்தும் உணர்வுடையதாக அமைய வேண்டும்.

ஒருவன் தன் முதல், செலவு, ஊதியம் ஆகியவற்றைப் பார்த்தே எவ்விதப் பணியும் செய்வான். முதலிழக்கும் செய்வினையை அறிவுடையார் செய்யார். பொருள் நிறைந்தவனாகவும், மகிழ்ச்சி உடையவனாகவும் ஒருவன் இருந்து வாழ்வில் முன்னேற்றம் காண இயலாது. அவனது வாழ்க்கையின் நோக்கம் சிறப்புடையதாக இருக்கவேண்டும். அப்போது அவனும், அவனைச் சார்ந்தவர்களும் முன்னேறுகின்றனர்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலும்," "ஆக்கத்தைக் காக்கைபோல் பகிர்ந்து உண்ணுதலும்" — ஆகிய பண்புகளை மனிதன் கொள்வானாயின் சிறந்த முன்னேற்றம் காண்பான். கொடுப்பவன் 'இழக்கிறேம்' என்று எண்ணாமல், வாங்குபவன் மகிழ்ச்சியைக் கண்டுதான் மகிழவேண்டும் என்பது வள்ளுவர் வழி. கொடுக்காமல் தங்கும் செல்வம் நச்சு மரம் போன்றது. எனவே "ஈதல் இசைபட வாழ்தல்" நமது சமுதாய வளர்ச்சிக்கு ஒரு நீரூற்று.

இன்று பல்வேறு நிலைகளில் சமுதாயம் வளர நோக்கமற்ற செயல்பாடுகள் அறியாமையால் வளர்ந்துவிட்டன. இவற்றை அகற்ற முயல்வதோடு கருவி முறைக் கல்வியும், வணிகத் துறையில் நல்ல நோக்கமுள்ள செயலும் சமுதாயத்தை உயர்த்தும். மேலும் எந்த ஒரு சமுதாயத்தினரும் மனக் கருத்துக்களை நல்ல நோக்கங்களோடு வெளிப்படுத்தி ஒற்றுமை உணர்வு வளர்க்கும்போது, நம்மையறியாமலே சமுதாயம் முன்னேறும் என்பது எனது பணிவான கருத்து.

வாழ்க சமுதாயம்!

வளர்க ஒற்றுமை!!

"நெசவுக் கலையின் தொன்மையும் பெருமையும்"

S. சதாசிவம், ஆசிரியர், பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

முன்னுரை :—

"ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" என்ற கருத்து நம் மனத்தில் பதிந்த காலம் தொட்டே நெசவுக் கலையின் உயர்வும், அவசியமும் நன்கு மேலோங்கி நிற்கிறது.

"செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்கின்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை"-என்று

கூறுவதன் மூலம் இத்தொழிலின் சிறப்பும் தொழில் செய்பவரின் பெருமையும் நன்கு விளங்கும்.

நெசவுக் கலையின் தொன்மை

சங்க காலம் தொட்டே நெசவுக்கலை சிறப்புற்று இருந்திருக்கிறது. "நீர்ப்படு பருந்தின் இருஞ்சிறகன்ன" ஆடைகளைக் களையச் செய்து கொடுப்பான் சேரன் செங்குட்டுவன் எனப் பதிற்றுப்பத்து கூறுகிறது. சிலப்பதிகாரம் பகலில் அணியும் ஆடை, இரவில் அணியும் ஆடை என்ற பாகுபாடு இருந்ததை விளக்குகிறது. இந்தியாவில் "மிக மெல்லிய மஸ்லின் துணி முதல், பாய் மரக்கப்பலில் பயன்படுத்தும் முரட்டுத் துணி" வரை எல்லாத் துணிகளும் நெய்யப்பட்டன என்று ஹிரோடட்டஸ் என்பவர் கூறுகின்றார்.

"பருத்திப் பெண்டிர் பனுவலன்ன" - என்ற புறநானூற்று அடியும்,

"ஆளில் பெண்டிர் தாளிற் செய்த
நுணங்கு நுண் பனுவல்" - என்ற

நற்றிணை அடிகளும் நெசவுக்கலை சங்ககாலம் தொட்டே உள்ளதை உணர்த்துகின்றன. தமிழர்களின் நெசவாற்றலால் உருவாக்கிய மெல்லிய ஆடைகள் எகிப்து பிரமிடுகளில் உள்ள இறந்தவர்களின் உடலின் மேல் போர்த்தப்பட்டிருந்தன என்பதைக் கண்டறிந்து உள்ளனர்.

பல்லவர் காலத்து நெசவு பற்றி அக்காலச் சிற்ப ஓவிய உருவங்கள் உணர்த்துகின்றன. சித்தன்னவாசலில் உள்ள நடன மாதரின் ஆடைகள் அச்சிறப்பை உணர்த்துகின்றன. பல்லவர்களுக்குத் தலைநகராய் விளங்கிய கலைமலிந்த காஞ்சி மாநகரம் நெய்தல் தொழிலில் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகிறது. இந்நெசவுக் கலை 5000 ஆண்டுகளுக்கு முன்பே சிறப்புற்றிருந்தது என்பதைப் பல வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

சோழர் காலத்து மக்கள் நெசவுக்கலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். மெல்லிய ஆடைகள் பூந்துகில்,ஆடைகள் எனப்பட்டன இதிகாசங்களிலும் பருத்தி, கம்பளி, பட்டுத் துணி போன்றவற்றின் குறிப்புகள் கூறப்பட்டுள்ளன. வெண்புகையைப் போன்ற ஆடைகள் இருந்தன என்று வில்லிபாரதம் கூறுகின்றது. 'மாலைப்பனி' என்னும் ஒரு வகை ஆடையைப் புல் தரையில் பரப்பினால், புல்லின் மேல் பனித்துளிகள் இருப்பது போன்றே காணப்படுமாம்.

நெசவுக்கலை வளர்ச்சி :

தற்காலத்தில் அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் நம்முடைய துணிகளுக்கு நல்ல மதிப்புள்ளது. இந்தியாவில் உள்ள இலட்சக்கணக்கான கைத்தறிகளில் பெரும் பங்கு தமிழகத்தில்தான் உள்ளது.

இத்தொழில் பெரும்பாலான குடும்பங்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி வருகிறது.

சித்திர வேலைப்பாடுகள் அமைந்த பட்டுப் புடவைகள், கண்கவர் வேட்டிகள், மற்றும் நேர்த்தியான ஆடைகள் நெய்யும் திறமையை இன்று நம் நாட்டில் பல சமூகத்தினரும் வளர்த்துக் கொண்டு கைத்தறியின் வளர்ச்சியை உயர்த்தியுள்ளனர். பட்டும் பருத்தி நூலும் கலந்த 'சௌசி' எனப்படும் துணி, மயிலாப்பூர், பாளையங்கோட்டை, குன்றத்தூர், சூரத் ஆகிய இடங்களில் தயாரிக்கப்படுகின்றன.

நெசவுக்கலைக்கு ஊக்கம் :

இன்று கைத்தறி வளர்ச்சிக்கு நடுவண அரசும், மாநில அரசும் நெசவாளர் சங்கங்களைக் கூட்டுறவு முறையில் அமைத்து உற்பத்தி மற்றும் விற்பனையைப் பெருக்கி உதவுகின்றன. கண்காட்சிகள், பண்டிகைக் காலங்களில் சலுகை விலைகளில் விற்பனை, முதலிய சிறப்பு நிலைகளின் மூலம் கைத்தறி வியாபாரம் பெருகி வருகின்றது.

முடிவுரை :

இச்சிறப்புமிகு நெசவுக்கலையைத் தொன்று தொட்டு வளர்த்து வரும் செங்குந்த சமுதாயத்தினர் தம் குலத்தின் உயர்விற்கு இக்கலையோடு இயைந்த நூதன முன்னேற்றங்களைக் காண வேண்டும். கல்வி மேம்பாட்டுடன் தொழில் நுட்பச் சிறப்பு உடையவர்களாகவும் விளங்க முயல வேண்டும்.

ஆறுமுகமான பொருள்

சிவபரம் பொருளின் மிகத் தொன்மையான வடிவம் — அறுமுகம்
எல்லாவற்றையும் ஆளவல்லது — ஈசானம்
வானவர் மானுடர் சரீரங்களில் அதிட்டித்து நிற்பது — தற்புருடம்
எழிலமைதி கொண்டிலங்குவது — அகோரம்
அறம்பொருளின்பம் வீடுபேற்றினை உயிர்கட்கு அருளவல்லது — வாமதேவம்
உயிர்கட்கு உடல்களைத் தோற்றுவித்து உள்தோன்றி அருளவல்லது — சத்தியோஜாதம்
மேற்சொன்ன ஐந்து திருமுகங்களுடன் கீழ்நோக்கியிருப்பது — அதோமுகம்
ஐம்முகச்சிவன் அறுமுகச் சிவனாகி உயிர்கட்குப் பேரருள் புரிகிறான் — தனிப்பெருங் கருணை புரிகிறான் என்பது தத்துவம்

நான்கு திசை, மேல், கீழ் திசைகளிலும் வாழ்கின்ற உயிர்கள் அனைத்தையும்
அறுமுகன் காத்து அருள்புரிகின்றார் என்பது
அறுமுகனின் தத்துவம்

ரூ. 1000 வழங்கிய நன்கொடையாளர்கள்



அமரர். K. ஆறுமுக முதலியார்
திருமதி தனபாக்கியம்மாள். காஞ்சிபுரம்



திரு. M. சண்முகம் M.A.B.T.,
திருமதி ஜயலட்சுமி காஞ்சிபுரம்.

திரு. . சண்முக முதலியார்
திருமதி இராதா அம்மாள், காஞ்சிபுரம்.

திரு. A. L. செல்வராஜ முதலியார்,
திரு. A. L. சுந்தரராஜ முதலியார், காஞ்சிபுரம்.

ரூ. 1000 வழங்கிய நன்கொடையாளர்கள்

திரு. க. நடேச முதலியார்,
திருமதி பார்வதியம்மாள், காஞ்சிபுரம்.

திரு. S. வேதகிரி முதலியார்,
திருமதி சாந்தநாயகி அம்மாள் காஞ்சிபுரம்

திரு. A. K. கோவிந்தராஜ முதலியார்,
திருமதி அமிர்தம்மாள், காஞ்சிபுரம்.

திரு. M. V. கிருஷ்ணசாமி முதலியார்,
பட்டு ஜவுளி வியாபாரம், காஞ்சிபுரம்.

ரூ. 1000 வழங்கிய நன்கொடையாளர்கள்



திரு. T. கங்காதர முதலியார்
திருமதி G. தனலட்சுமி ஐயம்பேட்டை.

திரு. N. கனகசபை முதலியார்
திருமதி K. ஞானம்பாள் ஐயம்பேட்டை.



திரு. P. வெங்கடசுப்பிரமணியம் M.A.,B.L., M.L.A.
திருமதி சரஸ்வதி ஐயம்பேட்டை.

திரு. G. பெருமாள்
திருமதி P உமாராணி ஐயம்பேட்டை.

ரூ. 1000 வழங்கிய நன்கொடையாளர்கள்

திரு. A. இரத்தினவேல் முதலியார்
திருமதி அஞ்சலம்மாள், காஞ்சிபுரம்.

திரு T. S. சுப்பிரமணிய முதலியார்,
திருமதி லட்சுமியம்மாள். V.L.S. கல்விநிதி, சென்னை.



திரு. A. சர்பந்த முதலியார்,
திருமதி ஆனந்தவல்லியம்மாள்
அம்மையப்பட்டு வந்தவாசி N.A.Dt.

திரு P. சண்முக முதலியார்,
திருமதி S. அஞ்சலம்மாள்
இமிரி. N.A.Dt.

ரூ. 1000 வழங்கிய நன்கொடையாளர்கள்

திரு. G. S. இராமசாமி முதலியார்,
திரு. G. S. அண்ணாமலை,
அம்மையார்குப்பம்.



திரு. M. காளி முதலியார்
சூணாம்பேடு.

திரு. T. கங்காதர முதலியார்,
திருமதி கற்பகம்மாள்.
ஐயம்பேட்டை.

ரூ. 500 வழங்கிய நன்கொடையாளர்கள்

திரு. A. வேல்முருகப்ப
முதலியார்
ஐயம்பேட்டை.

திரு. அ. லோகமூர்த்தி
ஐயம்பேட்டை.

திரு. P. சிங்கார
முதலியார்
முத்தியால்பேட்டை.

திரு. L. கோவிந்தசாமி
முதலியார்
அம்மையப்பட்டு.

திரு. M. G. அமிர்தலிங்கம்
குடியேற்றம்.

திரு. சு. அண்ணமலை
கருக்குப்பேட்டை.

திரு. E. S. தியாகராஜ
முதலியார்
பொதட்டூர்பேட்டை.

திரு. Dr. P.B சதாசிவம் M.D.
T.S.V. கோயில் தெரு,
சென்னை-4.

திரு. P. G. குருநாத
முதலியார்
பொதட்டூர்பேட்டை.

ரூ. 500 வழங்கிய நன்கொடையாளர்கள்



திரு. M. S. வஜ்ரவேல் முதலியார்
காஞ்சிபுரம்.



திரு T N. ஆறுமுக முதலியார்
காஞ்சிபுரம்.

திரு. B. கைலாச முதலியார்
ஐயம்பேட்டை.

ஓதுவார். திரு. S. சரவண முதலியார்
காஞ்சிபுரம்.

திரு K. கிருஷ்ணன்
ஐயம்பேட்டை.

திரு N. டோமேசன்
ஐயம்பேட்டை.



திரு. P. G. சண்முக முதலியார்
பொதட்டூர்பேட்டை.

திரு S. ஞானபாதம்
அம்மையப்பட்டு.

ரூ. 500 வழங்கிய நன்கொடையாளர்கள்



திரு. V திருமலை
முதலியார்
காஞ்சிபுரம்.

திரு. K. முத்துமுனியப்ப
முதலியார்
காஞ்சிபுரம்.

திரு. சு. திருவேங்கடம்
காஞ்சிபுரம்

திரு. இராம. அரங்கநாதன்
காஞ்சிபுரம்.

திரு. பவழப்ப முதலியார்
காஞ்சிபுரம்.

திரு. G. சண்முகம்
காஞ்சிபுரம்.

திரு. D. மலைக்கொழுந்து
காஞ்சிபுரம்.



திரு. A. நாகராஜன்
காஞ்சிபுரம்.

திரு. S. சண்முக முதலியார்
காஞ்சிபுரம்.

ரூ. 500 வழங்கிய நன்கொடையாளர்கள்

திரு T. C. K. பாலசுந்தரம்
மத்தூர்.

திரு. B. R சுப்பிரமணியம்
மத்தூர் (மதுரை)

திரு சரவண நடராஜ முதலியார்
அம்மையார்குப்பம்.

திரு A. சுப்பிரமணியம்
அரிசி வியாபாரம்,
சென்னை-4.



திரு S. M. முக்கையா
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்
சென்னை-4.

திரு. D. சண்முகம்
காஞ்சிபுரம்.

திரு. கு. ப கண்ணன்
தலைவர்,
தொண்டர்படை.

திரு. V. குமார்
செயலர்,
தொண்டர்படை.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
தலைமையகம்

89. அரண்மனைக்காரத் தெரு, சென்னை-600001.

பல்லவர் காஞ்சி

டாக்டர். **நா. ஆறுமுகம்**

இன்றைய செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமாய் விளங்கும் காஞ்சி மாநகரம், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயும் சிறப்புடன் விளங்கியது.

இளந்திரையன் போன்ற சங்க காலத் தமிழ் மன்னர்கள் காஞ்சியில் இருந்து ஆண்டிருக்கிறார்கள். கரிகாலன் என்னும் மன்னன் காஞ்சியை அழகு செய்திருக்கின்றான்.

கி. மு. 150 - இல் இருந்த பதஞ்சலி முனிவர், காஞ்சிமா நகரத்தைப் பற்றிக் குறித்துள்ளார்.

எனவே இது சங்க காலத் தலைநகரங்களைப் போன்று தொன்மையான நகரமே ஆகும்.

மேலும் வடமொழிப் புராணங்கள், இந்தியாவில் உள்ள புண்ணிய நகரங்கள் ஏழனுள் காஞ்சிபுரமும் ஒன்று என்று போற்றிப் பாராட்டுகின்றன. அக்காலத்தில் தேரோடும் அழகான தெருக்களையும் தொன்மையான குடிகளையும் மதிலையும் பெற்றுத் திகழ்ந்திருக்கின்றது.

தமிழரின் பொற்காலம் எனப் போற்றப்பெறும் சங்க காலத்திற்குப் பிறகு இருநூறு முன்னூறு ஆண்டுகள் இருண்ட காலமாய் இருந்திருக்கின்றன. தமிழகம் முதன் முதல் பிறமொழியாளராகிய களப்பிரர் ஆட்சிக்கு உள்ளாகித் தன் சீரும் சிறப்பும் இழந்த காலம் இதுவே.

கி. பி. 3 ஆம் நூற்றாண்டின் இடையில் பல்லவர் என்னும் ஓர் அரச மரபினர் தமிழகத்தின் வட பகுதியைக் கைப்பற்றிக் காஞ்சிமா நகரத்தைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சார்ந்துள்ள பகுதியையும், வடக்கே கிருஷ்ணை என்னும் பேராறு வரையிலுள்ள பகுதியையும் ஆட்சிபுரியத் தொடங்கினர்.

இந்தப் பல்லவர்கள் வடமேற்கு நாட்டிலிருந்து வந்த அயலவர்கள் என்றும், ஈழ நாட்டிலிருந்து வந்த தமிழர்கள் என்றும், தென்னாட்டிலேயே இருந்தவர்கள் என்றும் வரலாற்று வல்லுநர்களால் பலவிதமாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் யாவரே யாயினும் ஆகுக!

பல்லவர்களுடைய செப்பேடுகள், முதற்காலப் பகுதியில் பிராகிருத மொழியிலும், இடைக்காலப் பகுதியில் வடமொழியிலும், கி. பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் பிற்காலப் பகுதியில் வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வரையப் பெற்றுள்ளன.

பல்லவர் ஆட்சி தொடங்கிய காலத்தில் வடக்கே இருந்த பௌத்த சமயமும்

ஆகிய இருபாலரும் நடனத்தில்வல்லவராய் இருந்தனர் என்பதும், இருபாலரும் கலந்து ஆடி வந்தனர் என்பதும் அறியக் கிடக்கின்றது.

பல்லவர் காலம் ஏறத்தாழ கி. பி. 250 முதல் 900 வரை என்று கூறலாம். இந்தக் காலத்திற்குப் பிறகு இராசராச சோழனும் இராசேந்திர சோழனும் விளங்கிய பிற் காலச் சோழர் ஆட்சி வளர்ச்சியுற்றது. அக் காலத்தில், சங்க காலத் தமிழில் இல்லாத அளவு வடமொழிக் கலப்புத் தமிழில் ஏற்பட்டுவிட்டது. சங்க இலக்கியத்திற்கும் பிற்காலச் சோழர் கால இலக்கியத்திற்கும் உண்டான மொழி நடை வேறுபாடு, இரண் டிற்கும் இடைப்பட்ட பல்லவர் காலத்தில் தான் தோன்றி வளர்ந்திருத்தல் வேண்டும் என்பது அறிஞர் கருத்து.

சங்க காலத்தில்அகவற்பாவே பேரிடம் பெற்று விளங்கியது; கலிப்பாவும் வெண்பா வும் ஓரளவு பயன்பட்டன. பல்லவர் காலத் தில் வடமொழிப் புலவர் குடிபுகுந்து வட மொழியைப் பரப்பினமையால் அம்மொழி யின் இலக்கண அமைப்புத் தமிழில் பரவி யது. அப்பரவலின் பயனாக விருத்தப் பாடல்கள் தமிழில் தோன்றின. இவ்வாறு தமிழ்ப் பாட்டிலக்கண முறையிலேயே வட மொழிக் கலப்பு உண்டானது பல்லவர் காலத்திலேயே ஆகும்.

இவ்வாறு சிற்பம் நடனம் இசை இலக் கியம் முதலிய கலைகளில் சிறந்து விளங்கிய பல்லவப் பேரரசின் தலைநகராம் காஞ்சிமா நகரத்தைப்பற்றித் திரு. K. N. தீக்சிட் என்னும் அறிஞர் கூறுகின்றார்.

"தென்னிந்திய நகரங்களிலேயே சிறப் பிலும் பழமையிலும் பழங்கால நினைவுச் சின்னத்திலும் காஞ்சிமாநகரத்திற்கு இணை யான நகரம் வேறொன்று இல்லை. இங்கே வேறு நகரங்களில் இல்லாத பல்லவர் சோழர் காலத்திய பௌத்த சமண சைவ வைணவக் கோயில்கள் உள்ளன" [Memoirs of the A. S. of India No. 63 (Preface)].

தற்போது 450 கோயில்களைப் பெற் றுள்ள காஞ்சிபுரம் எண்ணிறந்த கோயில் கட்கு மட்டுமே புகழ்பெற்றதன்று. மிக்க தேர்ச்சியுடனும் சிறந்த அறிவுடனும் அமைக்கப்பட்ட நகர அமைப்புக்கும் இந் நகரம் பெயர்பெற் றிருந்திருக்கிறது. இந்த நகர அமைப்புத் திட்டத்தைப்போல இந்தி யாவில் வேறு எந்த நகரத்திலும் இல்லை. மேனாட்டு நாகரீக நகரங்களில் காணப்படும் இருட்டுச் சந்துகளும் அழுக்குகளும் காஞ்சி யில் இல்லை. வீடுகள் சாலை மட்டத்திற்குப் பல அடிகள் உயர்த்திக் கட்டப்பட்டிருக் கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக ஏகாம்பரநாதர் கோவிலைச் சேர்ந்த தேரோடும் தெருக்களும் காமாட்சியம்மன் கோயிலைச் சேர்ந்த தேரோடும் வீதிகளும் ஒன்றுக்கொன்று இடையூறில்லாமல்அமைக் கப்பட்டுள்ளன. இவ்வாறு காஞ்சியின் நகர அமைப்பைப்பற்றி,நகர அமைப்புத்திட்டப் பொறியியல் வல்லுநரான பேராசிரியர் **கெட்டிசு** அவர்கள் கூறுகின்றார்கள்.

இன்றும் காலவெள்ளத்தை வென்று நிலவுகின்ற பெருமையுள்ள காஞ்சி மாநகரம் தனது பழமையான வரலாற்றை, இடிபாடுகள் மூலமாகவும் கோயில்கள் மூல மாகவும் மறைந்து வெளிப்படும் பொருள் கள் மூலமாகவும் நமக்கு அறிவித்து நிற் கின்றது.

முன்னுரை :

உலகெலாம் குந்தர் குலம் விளங்க வந்த குலவிளக்கே! முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் வள்ளலே! குன்றுதோறாடும் குமரனே! எந்தை கந்தக் கடவுளே! கலியுகத்தில் எம் மக்களைக் கரையேற்ற வந்த கண்கண்ட தெய்வமே!, —உன்னை வணங்குகிறேன்!

அழியாத அடிச்சுவட்டில்......!

தினந்தினம் உன்னைப் பாடி, 'திருவடித் தாமரை மலர்களைத் தொழுது வரும் தெய்வக் கொள்கையரன்றோ நம் செங்குந்தர் குலமக்கள்! காலத்தால் அழியாத

மரபும், பட்டமும்

முசுகுந்தச் சக்ரவர்த்தி தவம் செய்து நவவீரரையும் இலக்கத்தொன்பதின்மரையும், படைத்தலைவர்களாகவும் துணைவர்களாகவும் பெற்றார். இவர்கள் கருவூரில் தங்கி உரிய மாதர்களை மணந்தனர். வீரவாகுதேவர் புட்பகந்தி தம்பிகளுக்கு சித்திரவல்லி என்ற பெண்ணும், அனகன், சனகன் என்ற ஆண்மக்களும் பிறந்தனர். மற்றைய வீரர்களுக்கும் அவரவர் மனைவியிடத்தே 1898 ஆண் மக்களும், பல பெண் மக்களும் பிறந்தனர். இம் மக்கள் பலரோடும் இலக்கத்தொன்பதின்மரும் கூடி சேனைத் தலைவர்களாகவும், படைத் துணைவராகவும் விளங்கினர்.

காஞ்சி மாநாட்டின் "குரல்" ஒலிக்கட்டும்!

புலவர். சி. ஈ. எஸ். பெருமாள் அவர்கள்,
செயலர், மாநாட்டு விளம்பரக் குழு, காஞ்சிபுரம்.

அடிச்சுவடு-நம்முடையது. அறம் வழுவாத நம் முந்தையரின் நெறிமுறை, இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறது; கந்தர் சஷ்டி விரதம், இன்னும் காக்கப்பட்டு வருகிறது - நம்மிடத்தில்!

வீர வரலாறு படைத்தவர்கள்

நம் முருகப் பெருமான் ஆறுமுகம் கொண்டபோது, உடன் தோன்றிய வீரவாகுதேவர் முதலான இலக்கத்தொன்பதின்மர் வழித் தோன்றி வீரவரலாறு படைத்துப் புவிமீதில் புகழ்மேவிய இனமன்றோ-நம் செங்குந்தர் இனம்!

வீரவாகுதேவர் பெற்ற சித்திரவல்லியை முசுகுந்தன் மணந்து அங்கிவன்மன் என்னும் மகனை ஈன்றார். அங்கிவன்மன் சோழ மண்டலத்துக்கு அதிபதி ஆனார்.

வீரவாகு தேவரின் மக்களாகிய அனகன், ஜனகன் ஆகியோரின் வழித் தோன்றல்கள் நாம்; 'ஆயிரத்துத் தொள்ளாயிரவர்' என்னும் பீடுறு பட்டம் நமக்குண்டு.

காஞ்சியில் ஆட்சி

வீரவாகுதேவரின் இரு குமாரர்களாகிய அனகனும் சனகனும் காஞ்சிபுரம்

முதலான இடங்களில் முடிசூட்டி ஆண்டு வந்தனர். அவர்களுடையே சந்ததியாரே கைக்கோளர் என்றும், செங்குந்தர் என்றும், சேனைத்தலைவர் என்றும், கயிலாய பரம்பரையார் என்றும், சோணாட்டு முதலிகள் என்றும், உபசுப்பிரமணிய மரபினர் என்றும் அழைக்கப்படுகின்றனர். —இது கந்தபுராண வரலாறு.

'முதலியர்' பட்டம்

காஞ்சீபுரத்தை ஆண்டு வந்த பல்லவ அரசன் காலத்தே, 'செங்குந்தர்' என்னும் மரபினர் குறுநில மன்னராகவும், படைத் தலைவராகவும் விளங்கி மிகுந்த செல்வராய் இருந்தார். கரிகால்சோழன் வேளாளரைத் தமிழருள்ளே முதன்மையாக வைத்தது போன்று, பல்லவ அரசன் செங்குந்தருள்ளும் 'முதலியர்' என்று பெயர் கொடுத்து இருந்தான் - என்று மதுரைச் செந்தமிழ்க் குறிப்பு கூறுகிறது.

இதனை வலியுறுத்தி, ஈட்டி எழுபது என்னும் நூல், 'இந்திரன் அயன் மால் தேவர் யாவர்க்கும் முதன்மையாக, வந்த பான்மையினுல் சூல மழுப்படை யத்தனார்க்கு, முந்திய நாமந்தானும் முதலியர் ஆகையால், செங்குந்தர் சந்ததிக்கும் அப்பேர் முதலியர் என்று கூறும்' என்றுரைக்கிறது.

தர்ம ஆட்சி

தியாகராசரைநிறுவி வழிபட்டவிடங்கம் என்னும் பெயர் பெற்ற ஏழு தலங்களிலும், மாகாளம் என வழங்கும் ஏழு தலங்களிலும், மற்றும் வெவ்வேறு தலங்களிலும் செங்குந்தர் தர்மகர்த்தராய் 'தர்ம ஆட்சி' நடத்தியதாக வரலாறு கூறுகிறது.

இதனை, 'விடங்கம் ஏழ் ஆதி வீதி விடங்கம் ஆரூர் வெண்காடு, நடங்கொளும் தில்லை மூதூர் பஞ்ச நன்னதி சாய்க்காடும், இடங்கொள் மாகாளம் ஏழும், இடைமருதூர்செங்காடும், தொடங்கிய தரும ஆட்சி செங்குந்தர் தொகுதி வாழி!' - என ஈட்டி எழுபது என்னும் நூல் பேசுகிறது. அம்மட்டோ?

செங்குந்தர் பேராண்மை

தென்னாட்டிலே கடற்கரையிலுள்ள திருச்செந்தூருக்குக் கப்பலின்மேற்சென்று, அவ்வூரிலிருந்த சுபன் எனும் செங்குந்தனைத் துணையாகக் கொண்டு, ஈழ நாட்டரசனை ஒரே நாளில் வென்று வாகை சூடி, அங்குள பொருள்களைத் திரையாகக் கொண்டு வந்தவர்கள் வீர செங்குந்தர்கள் அல்லவோ!

போரிலே மிகவல்லவனுகிய 'வல்லான்' என்பானுடன் போரிட்டு வென்று, வீர சபதத்தை முடித்து, பேராண்மையைக் காட்டியவர்களன்றோ நம் செங்குந்தர்கள்!

பண்பு காத்துப் பாராண்ட குறுநில மன்னர்களாய் - மதியூக மந்திரிகளாய் - படைத் தலைவர்களாய் - புகழ் பரப்பிவந்த இனமன்றோ - நம் செங்குந்தர் இனம்!

புலவர் பாடும் புகழுடையவர்கள்

ஒழுக்கத்தின் கொள்கையராய்'**கைக்கோளர்**' (கை-ஒழுககம்; கோளர் - கொள்கையர்) எனவும், பகைவரின் உதிரத்தால் தோய்ந்த குந்தம் எனும் ஆயுதத்தை உடையவராய்ச் '**செங்குந்தர்**' எனவும், அறுமுகக் கடவுள் உடன்தோன்றிய வீர வாகுதேவர் முதலானோர் வழிவந்தவராய் '**உப சுப்பிரமணிய மரபினர்**' எனவும். பெருமிதத்தோடு போற்றப்பட்டவர்கள் நாம்!

குமாரம் முதலான நிகண்டு நூலார், 'கந்தனுக்கு இளையோர்; கைக்கோளர்; செங்குந்தர்!'-என்று பலபடப் பாராட்டப் பட்ட இனமன்றோ - நம் செங்குந்தர் இனம்!

'திக்கெட்டும் போற்றும்
திரல்வீர செங்குந்தர்
முக்கட் செம்மேனி
முதல்வனருள்-கைக்கொண்டே
முக்கட் கணிசெய்ய
வைத்தனரால் நெய்தொழிலை
வெஃகப் படாதவரார்
வேண்டி!'

—என்று புகழ்மாலை சூட்டும் வண்ணம், பாருலக மக்களுக்கு மானம் காத்து மதிப்புக் கொடுத்து வருபவர்கள் நாம்; பாவமற்ற தொழில்களிலே நெய்யும் தொழிலையே தேர்ந்தெடுத்து உபதேச முறையில் பாடமாக ஏற்றுக்கொண்ட இனமன்றோ - நம் செங்குந்தர் இனம்!

'ஆர்கலி உலகில் அன்புசான்ற சீர்கெழு தகைசால் செய்ய செங்குந்தரே!' - என்று புலவர் பெருமக்களால் பாடிப் பரவப்பட்ட இனமன்றோ-நம் செங்குந்தர் இனம்!

ஆண்ட பெருமை ஆரறிவார்?

நமது செங்குந்தர் குலத்தின் ஆதித் தலைவர் வீரவாகுதேவரேயாவார். அவரது ஆட்சி முறைக்கு வரையறை செய்த வண்ணம், கிழக்கே சிவபுரத்தை - மேற்கே திருவிரிஞ்சிபுரத்தை - தெற்கே தொந்திபுரத்தை—வடக்கே சோழசிங்கபுரத்தை- நாற்றிசை நாடுகளாகவும், அவற்றுள் அறுபத்தெட்டு கிளை நாடுகளாகவும், கிளை நாடுகள் ஒவ்வொன்றுள்ளும் நூற்றுக் கணக்கான கிராமங்களாகவும் கொண்டு வாழ்ந்தவர்கள் நாம்!

மகாநாடு கண்ட காஞ்சி

நகரங்களில் நனி சிறந்தது காஞ்சிபுரம் அல்லவா! 'நகரேஷு காஞ்சி' என்று வடமொழி வாணர்களால் வருணிக்கப்பட்டதும், காமகோடி பீட ஈசுவரியாய் அன்னை காமாட்சி கடைக்கண் சாற்றி அமர்ந்தருளியதும் காஞ்சிபுரம் அல்லவா!

ஆம். இத்தகு எழில்நலம் சான்ற காஞ்சிபுரமே நம்மனோரின் ஆண்டவர் தானமாக—மகாநாடாக — தலைநாடாகப் பெற்று, வழி வழியாக ஆண்டு வந்த நெடிய பாரம்பரியத்துக்கு உரிமை பூண்ட இனமன்றோ—நம் செங்குந்தர் இனம்!

இனம் காட்டும் சான்றோர்

தில்லையில் கொடி ஏற்றியோர், திருமூலர், நரசிங்க முனையரையர், இடங்கழிப் பெருமான், முனைய வள்ளல், மெய்ப்பொருள் நாயனார், செருத்துணை நாயனார், கோட்புலி, கூற்றுவ நாயனார், எறிபத்த நாயனார், தண்டியடிகள், பொய்யாமொழிப் புலவர், ஒட்டக்கூத்தர், இரட்டைப் புலவர், படிக்காசுத் தம்பிரான் — இவர்களெல்லாம் நம்மினத்தவரே.

எங்கே? இங்கே?

இத்தனை ஏற்றங்களை—சிறப்புக்களைப் பெற்றுப் பெருமிதத்தோடு வாழ்ந்து வந்த நம் செங்குந்தர் இனம், இன்று எங்கே? கால் வயிற்றுக் கூழுக்கும் அலையும் அவலம் இங்கே!

நினைத்துப் பார்க்கிறேன். நெஞ்சம் புண்ணாகிறது; வேதனை விரிவடைகிறது; கண்ணீர், குளமாகிறது.

ஆம். தன்னிலை மறந்து, தன்னிலை குலைந்து மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் — வறுமைக் கோட்டிற்கும் கீழே — தினம் தினம் செத்துப் பிழைத்து வரும் நம் இன மக்களின் இழிநிலை எங்கே?

வாழ்வா? சாவா?

கண்ணீரும் செந்நீரும் கொட்டிக் காத்து வளர்த்திட்ட நம் செங்குந்தர் சமுதாயம், செல்லரித்த சமுதாயமானது எத்தனை நாளாய்?

பஞ்சோடு போராடும் பஞ்சைகளாய்- நலிந்து மெலிந்து, கூனிக் குறுகி வேலை

செய்து பிழைத்திடும் கூலிகளாய்—தோட்டத் தொழிலாளிகளாய் — நைந்து வீழும் நெசவுத் தொழிலாளிகளாய் — மாறியது எத்தனை நாளாய்?

எண்ணிப் பார்க்கிறேன்; ஏங்கித் தவிக்கிறேன்; ஏக்கப் பெருமூச்சு விடுகிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலுள்ள நம் இன மக்களுக்கு இனி வாழ்வே இல்லையா? விடிவே இல்லையா?

இந்த இக்கட்டான நிலையில் இன்று நாம் தள்ளப்பட்டு இருப்பது கொடுமை!

இந்தக் கொடுமை இழிந்தோட—நம் குலமக்கள் பிற சமுதாயத்தவரோடு ஏற்றமுற - காஞ்சி மாநில செங்குந்தர் மாநாட்டில் ஒருங்கே கூடிடுவோம்!

தாயினும் சாலப் பரிந்து நோக்கும் நமது முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை, மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் நம் செங்குந்தர்களைச் சேர்த்திட வேண்டிக் 'குரல் கொடுப்போம்! திறல் முடிப்போம்! காஞ்சி மாநாட்டின் குரல் 'உலகெலாக ஒலிக்கட்டும்! வெல்க செங்குந்தம்! வாழ்க செங்குந்தர்!

14வது செங்குந்தர் மாநில மாநாட்டிற்கு
எங்களின் இதயங்கனிந்த நல் வாழ்த்துக்கள்!

மேல்களத்தூர் வரசக்தி விநாயகர்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிமிடெட் K. H. No. 29.

மேல்களத்தூர் அஞ்சல். அரக்கோணம் வட்டம். வ. ஆ.

திரு. நா. க. சண்முக முதலியார்,
செயலாளர்.

திரு. N. A. கோபால் முதலியார்,
தலைவர்.

இயக்குநர்கள்:

T. விவேகானந்த முதலியார்,
A. K. கணேச முதலியார்.
V. K. சுப்பிரமணிய முதலியார்,
T. உலகநாத முதலியார்.



வீரமும், விழிப்பும்

நல்லாசிரியர். புலவர். கோ. இளையபெருமாள்,
தலைவர்,
ஆரணி நகர செங்குந்தர் சங்கம், ஆரணி, வ. ஆ.

மானத்தைக் காக்கவுடை வழங்கும் தூய
மரபுவரு செங்குந்தர் மானங் காக்க,
ஈனத்தைப் போக்கிமன எழுச்சி யூட்டும்
இனவேங்கை யொடு சேவல் இருபால் நிற்க
ஞானத்தின் திருவுருவாய் நண்ணும் வேலை
நடுவினிலே பெற்றிருக்கும் நமது சின்னம்
வானத்தில் பறக்கின்ற வனப்பைக் கண்டு
வணங்கிமன மொழிமெய்யால் வாழ்த்து வோமே. (1)

அஞ்ஞான வடிவாக அமைந்த சூரன்
ஆணவத்தை அழித்தருளும் ஆற்றல் தோன்ற
இஞ்ஞாலத் துறுபுலிதன் னிடத்தில் ஓர்பால்
இருளகற்றி விழிப்பூட்டும் இயல்பி னேடு
செஞ்ஞாயிற் றொளிகாட்டும் சேவல் ஓர்பால்
சிறப்பினெடு வீற்றிருக்கும் செய்கை தோன்ற
மெய்ஞ்ஞான வேலிடையில் மேவி நிற்றல்
வென்றிதரு கொடிகாட்டும் விளக்க மாகும். (2)

படிகாத்த முடிமன்னர் பக்கம் சார்ந்து
படைத்துணை யாய்ச் சென்றதுநம் பழமை யாகும்.
அடிதாக்க வந்தாலும் ஆங்கி லேயர்
அடக்குமுறைக் கஞ்சாமல் அன்பு காட்டிக்
கொடிகாக்க உயிர்கொடுத்துக் குவல யத்தில்
குன்றாத புகழ்விளக்கும் குமரன் போல
நெடிதாக நம்புகழை நிலைக்கச் செய்ய
நெஞ்சுறுதி கொண்டுழைத்தல் நேர்மை யாகும். (3)

நூலாயும் மரபுதித்த நோன்பு செய்தோர்
நுண்ணறிவால் மிக்குயர்ந்த நோக்கம் கொண்டோர்

காலாட்டித் தறிக்குழியில் கால மெல்லாம்
கஞ்சிவரு மெனவுழைத்துக் கலங்க லாமோ ?
மேலான நெய்தொழிலைச் செய்த லோடு
வேறுபல தொழில்களையும் விரும்பி யேற்று
நாலாறும் தெரிந்தவராய் நாடு போற்ற
நல்லதொரு சமுதாயம் நாம்காண் போமே. (4)

சீலமிகு செங்குந்தர் சிறப்புக் குன்றி
சீர்குலைந்து வருவதனைச் சிந்தை செய்து
ஞாலமிசை ஆங்காங்கே நண்ணி வாழும்
நலிவடைந்தோர் நலம்பெருக்கும் நாட்டங் கொண்டு
வேலவனின் விழுத்துணையை வேண்டி நின்று
வீரமொடு விழிப்புணர்ச்சி விளங்கப் பெற்று
கோலமிகு நமதுகுலக் கொடியின் கீழே
கூடிடுவோம் வாழவழி தேடு வோமே! (5)

14வது செங்குந்தர் மாநில மாநாட்டிற்கு நல் வாழ்த்துக்கள்!

செங்குந்தம் வெல்க!

நெ. 109, அப்துல்லாபுரம்

செங்குந்த மகாஜன சங்கம்

தூசி அஞ்சல் செய்யார் வட்டம் வ. ஆ. மாவட்டம்.

தொடக்கம்: 15—7—1983 631703.

ப. மு. ஆறுமுகம், பொதுச்செயலர்.
ஆ. சிவமணி, துணைத் தலைவர்.
அ. ஆறுமுகம், தலைவர்.

அ. தங்கவேல், துணைச்செயலர்.
S. K. ருத்திரகுமாரன், பொருளாளர்.

செயற்குழு உறுப்பினர்கள்:
ச. சுப்பிரமணியம், தா. மோகனம், M. ஜெயவேல், K. முருகன்,
S. சிவானந்தம், மு. ஞானவேல், மு. குழந்தைவேல், மு. கோபால்,
மு. கோவிந்தராஜி. S. திருநாவுக்கரசு.

கச்சியேகம்பன் கருணை!

சொற்கவிமணி. புலவர். மா. வெங்கடேசன், எம்.ஏ.,
காஞ்சிபுரம்.

1. அன்னைகா மாட்சி அணைக்கக் குழைந்தருள்வோன்
தன்னை அடைந்தால் தமிழ்நெஞ்சே!—பின்னை
பிழைக்க ஒருவரது பின்செல்ல வேண்டா
தழைக்க அருள்வான் தணிந்து !

2. பண்ணெடுத்துப் பாடும் பரவைதுணை வற்கன்று
கண்ணளித்த ஏகம்பன் கால்தொழுதால் —புண்ணுறுத்தும்
நெஞ்சத்தை மாற்றி நிலையளிக்க மாட்டானோ ?
அஞ்சத் தகுவதுமுண் டோ ?

3. அழுக்கைக் களைந்தாடை அன்பால் அளித்தோர்
பிழைக்கக்கை தந்த பெரியோன் — தழைக்க
அருளா தொழிவானோ ? அல்லலுறும் நெஞ்சே !
பொருளாக அன்னவன்சீர் போற்று !

4 கல்லால் எறிந்தவர்க்குக் காட்சியளித் தின்னருளால்
எல்லாரும் காணபதம் ஈந்தவன்யார் ? —சொல்லால்
அடித்தாலும் கம்பன் அகமகிழ்வான் ; காலன்
பிடித்தாலும் அன்னவன்சீர் பேசு !

5. ஏகம்பன் கோயில் இருக்கும் திசைநோக்கின்
போகரிய நோயும் புறம்நோக்கும் ! —ஆகும்
அருளின்பம் நோக்கி அளப்பாரும் உண்டோ ?
வருந்துன்பம் போக வணங்கு !

6. நாளெண்ணிக் கொண்டிருப்போன் நண்ணிடுமுன் ஏகம்பன்
தாளெண்ணி வாழ்வாய் ! தனிநெஞ்சே ! —கேளெண்ணி
நெஞ்சம்புண் ணாகி நிலைகெட்டு வாழ்க்கையிலே
விஞ்சுந் துயரனைத்தும் விட்டு !

7. மாவடியான் இன்ப மலரடியைப் போற்றுகின்ற
பாவடியே வாழ்வின் படியாகும் ! —சேவடியைப்
பாவித்தே கம்பப் பரமன் திருக்கோயில்
சேவித்தே நல்லுலகம் சேர் !

8. செம்பொன் திருக்கோயில் சேர்ந்து நிறையன்பால்
கம்பை தனில் மூழ்கிக் கைதொழுதால் — அம்புவியில்
துன்பப் பிறவித் தொடர்க்கடலில் மூழ்காமல்
இன்புற்று வாழ்ந்திடலாம் ; ஏகு !

செங்குந்தர் வேள்கைக்கிளையர்

பெருஞ்சொல்மணி. புலவர் தா. சுப்பிரமணியம், காஞ்சிபுரம்.

உலகம் யாவையும் படைத்தும் காத்தும் கரந்தும் பின் மறைத்தும் அருளியும் ஐந்தொழில் புரியும் பரம்பொருளாம் சிவபெருமான், தேவர்கள் குறை நீங்கவும் அசுரர்கள் தீய செயல்கள் மடியவும் ஆறுமுகச் சிவமாம் முருகப் பெருமானை அளித்த வரலாறு யாவரும் நன்கறிந்ததே. செவ்வேட் பரமனாகிய கந்தப் பெருமானுக்குச் சொந்தத் தம்பியர்களாக வீரவாகுத் தேவர் உள்ளிட்ட நவ வீரர்களையும் மற்றும் இலக்கம் வீரர்களையும் உடன் அளித்ததைக் கந்த புராணத்தில் பரக்கக் காணலாம்.

செங்குந்தர் சாதி பற்றிக் கூறும்போது ''கைக்கிளையர்'' —''கைக்கோளர்'' என்று கூறி வருகின்றனரே அதுபற்றி ஒரு சிறு ஆய்வை ஈண்டுக் காண்போம். செவ்வேளாம் முருகப் பெருமானுக்கு உற்ற துணைவர்களாக —பக்கபலமாக விளங்கியதனால், '' வேள் கைக்கிளையர் '' என்று கூறிவந்த சொற்றொடரில் 'வேள்' என்ற எழுவாய் மறைய, தோன்றா எழுவாய்த் தொடராக ''கைக்கிளையர்'' என்று மட்டும் கூறி வந்தனர். அதாவது, வேள்கைக்கு = வேளாகிய முருகப் பெருமானுக்கு, இளையர் = தம்பியர் என்ற பொருளில் வழங்கி வந்தது. காலப் போக்கில் வேள் மறைய, பொருள்விளங்காமையால்,''கைக்கிளையர்'' என்பது, ''கக்கிளையர்'' ''கைக்கோளர்'' என மருவி பல்வேறு சிதைவுகளுடன் வழங்கப்படுகிறது.

வேள் + கைக்கு + இளையர் என்ற சொற்றொடர் மிகவும் உரிமைப் பொருள் நிறைந்த தொடராகும். உலகியலில் ''அவருக்கு இவர் வலது கரம்'' என்பது போல, அவதார நோக்கமான சூரசம் மாரத்திற்கு மிக்க உறுதுணையாக வீரவாகு உள்ளிட்ட இலக்கத்தொன்பது வீரர்களும் விளங்கினர் என்பதைக் கந்த புராணம் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. 'வீரவாகு'என்பதற்குப்பொருள், வெற்றித் தோள்களையுடையவர் என்பது. நவ வீரர்களும் அவர் வழிவந்த செங்குந்தர் குலமும் மிக்க வீரமுடையயர் என்பதற்குச் சான்றாக வீரவாகு என்ற பெயரே விளக்கம் தருகிறது.

செங்குந்தர் என்ற குலப்பெயர், வீர மிக்க போர்க்கருவியாகிய குந்தத்தை— அதுவும் செங்குருதி தோய்ந்த செந்நிறமாகிய குந்தத்தை ஏந்தியவர்கள் என்று பொருள்படுவதால், செங்குந்தர் குல மரபின் வீர மாண்பை யாவரும் நன்கு அறியலாம். மேலும் ஒரு சிறப்பு; சூரசம் மாரத்திற்குப் பிறகு செங்குந்த வீர பரம்பரை, முசுகுந்தச் சக்ரவர்த்தியிடம் படைத்துணையாக இருந்து, வீராணத்தில் வல்லான் கம்பமேறி, வல்லாளனாகிய அசுரனையும் கோட்டையையும் அழித்து வெற்றிவாகை சூடிய வரலாற்றுச் சிறப்பு உடைய வீரப் பரணியை இத்தரணி நன்கு அறியும்.

ஒவ்வொரு குலத்திற்கும் பல கோத்திரங்கள் உண்டு. ஆனால் நம் செங்குந்தர் தமிழ்நாடு மட்டுமின்றிக் கடல்கடந்த நாடுகள் பலவற்றிலும் பரவி வாழ்ந்தாலும் அனைவருக்கும் ஒரே கோத்திரம் அது ''சிவ கோத்திரமாகும்''. இத்தகைய பெருமை நம் குலத்திற்கு மட்டுமே அமைந்த தனிச் சிறப்பாகும்.

புறப்பகையாகிய வீரத்தில் மட்டுமின்றி அகப்பகையாகிய புலம் வென்ற புன்மையில் காட்சியராக்கும் சைவ சித்தாந்தத்திலும், அமிழ்தினும் இனிய தமிழ் மொழிப் புலமையிலும், தேசியத் திருத்தொண்டிலும் சிறந்தவர்களாக நம் மரபினர் விளங்கி வருவது, யாவரும் நன்கு அறிந்ததே.

வேண்டுகோள்:

சாதி சமய மொழி வேறுபாடற்ற தேசிய உணர்வு பெருகவேண்டியது இன்றியமையாததே. ஆனல், இன்று நாட்டில் மற்ற இன மக்கள் முன்னேற்றத்தைப் பார்க்குமிடத்து, நாமும் நமது இனத்தைப் பாதுகாத்து சகல உரிமைகளும் பெறச் செய்வது நமது குல தருமமாகும். ஆகவே நம் கவிச் சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர் பெயராலும், கொடிகாத்த குமரன் பெயராலும் மற்றும் நம் குலத்தலைவர்கள் பெயராலும் செங்குந்தமித்திரன் துணை கொண்டு, சிற்றூர் பேரூர்களிலும் வட்ட மாவட்ட அளவிலும் மாநிலத்தில் வலிவான அமைப்புகளை அமைத்து, இன உணர்வைப் பெருக்கி ஆட்சியில் நமது பங்கை நாம் பெறவேண்டும். ஒன்றுபடுவோம், உரிமையை நிலைநாட்டுவோம்.

வெல்க செங்குந்தம்! வளர்க இனஉணர்வு!

வாழ்க செங்குந்தர் சமுதாயம்!

14வது செங்குந்தர் மாநில மாநாட்டிற்கு எங்களின் நல் வாழ்த்துக்கள்!

Jc. K. S. சம்பந்தம், B.A., B.P.Ed.
பந்தல் அமைப்பாளர்,

திருமணம் மற்றும் இதர விழாக்களுக்குச் சிறந்தமுறையில் அலங்காரத் துணிப்பந்தல் மற்றும் வண்ண அலங்கார ரெடிமேட் மேடை குறைந்த வாடகைக்கு அமைத்துத் தரப்படும்.

278, காந்தி ரோடு, காஞ்சிபுரம்-631501.

-:மாநாட்டுப் பந்தல் அமைப்பாளர்:-

எழுச்சி கொள்க, இளைஞர் படையே!

R. சோமசுந்தரம், M.A.B.L.,
தலைவர்,
தெ. ஆ. மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்,
விருத்தாசலம்-606 001.

1984 பிப்ரவரித் திங்கள் 4, 5. இந் நாள் ஒரு திருநாள். ஆம். ஏ! என் தாழ்ந்த தமிழினமே என விளித்து சொல்ல வொண்ணாத் துயரத்தோடு பள்ளத்தில் வீழ்ந்து கிடந்த தமிழினத்திற்குப் பகுத்தறிவு ஒளி தந்து, இருண்டு பட்டுக்கிடந்த இதயங்களுக்கு இத மளித்து, வாழ்வளித்த அறிஞர் அண்ணா அவதரித்த கவின்மிகு காஞ்சியில் நம் செங்குந்தர் மாநாடு நடைபெறும் நன்னாள்! வரலாறு தன் பொன்னேட்டில் பொறித்து வைத்துக் கொள்ள வேண்டிய புகழ்மிகு அத்தியாயங்களைத் தன்னகத்தேகொண்டு காலமெல்லாம் தறிக்குழியில் வறுமையோடு வாழ்க்கையை ஓட்டும் எண்ணற்ற ஏழைச் செங்குந்தர்களுக்கு நம்பிக்கைமுனை ஏற்படுத்தும் எழுச்சி நாள்!

காலமெல்லாம் கஷ்டப்பட்டு உழைத்து உழைத்து ஓடாகிப்போன தேக்கு மரத் தேகம் தேய்ந்தபின் —உழைத்து ஓய்ந்த பின் அரைவயிற்றுக்கும், கால்வயிற்றுக்கும் ஆலாய்ப் பறக்கும் அவல நிலை, இன்றைய நமது நிலை! ஆம். எண்ணற்ற இலட்சக் கணக்கான நம்மவர்கள் இலட்சியமற்றவர்களாக வாழ்ந்ததன் பயன் இது. நாளுக்கு நாள் நம்மவர் தொகை எண்ணிக்கையில் பெருகி வருகிறதே தவிர அதற்கு ஏற்பப் படித்த பட்டதாரிகள், தொழில் நுட்பத் துறை வல்லுநர்கள், அறிஞர்கள், அரசியல் வாதிகள் பெருகிவரவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. சொல்லிப் பூரிப்படைய ஒரு அமைச்சர் பெருமகன்கூட நம்மிடை இல்லை. இத்தகைய இழிநிலை இனியும் தொடர்ந்திடக் கூடாது. இந்நிலை மாறி நன்னிலை அடையும் முகத்தான் செய்ய வேண்டிய செயல்களை எண்ணிச் சிந்தனை செய்வதே இம்மாநாட்டின் வாயிலாக நாம் அடையும் பயன்!

"எண்ணரும் தோழா!
எழுக நீ உடனே!
மண்ணிடை உனக்கென
மலர்ந்தது வாழ்வு!
விண்ணிடைத் தேவரும்
வியந்து பாராட்டிட
நுண்ணிய வகையில்
நூற்றவர் முன்னோர்!"
—இது கவிதை வரிகள்

நம் நெசவுத் தொழிலைப் பெருமைப் படுத்தும் அருமை வரிகள். ஆண்டாண்டு காலமாக ஆடை நெய்தவர் நெஞ்சம் கோடை நிலமாய் வேதனையால் வெடித்து விம்மிட வாழும் நம்மவர்கள் இனியும் பழம்பெருமைப் பாய்விரித்து நாய் வாழ்க்கை வாழும் அவலநிலையை அகற்றும் வகையில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

ஊருக்கு ஒரிருவர் 'பிற்பட்டோர்' என்ற அமுதசுரபியின் அருட்பெருக்கால் படித்து முன்னேறும் பாங்கையும் அழிக்க நம்மை 'முற்படுத்தப்பட்டவர்' என்று முத்திரை குத்த நடக்கும் நாடக முயற்சிகளை முறியடிக்கவேண்டும். நமது நிலையை வாய்மூலம் சொல்லி வழி கேட்போம். இல்லையேல், வாக்குச் சீட்டுகளைப் பேச வைப்போம்! உண்மை நிலையை ஊருக்கு உணர்த்த நமது இனத்தவரின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒரு காலக் கட்டாயம்! இதற்கு இளைஞர்களின் சேவை மிகவும் தேவை

இப்படி ஆற்றவேண்டிய அரிய செயல்களை எண்ணித் திட்டமிட்டு வாழ வழி வகுத்துக் கொள்வதே இந்த மாநாட்டின் மகத்தான பணி. அதற்கு நம்மை நாமே தயார் படுத்திக்கொண்டு "கைத்தறிக் காவலர் காட்டிடும் வழியில் பொய்த்திரை அகற்றிப் புகழுடன் வெல்ல" இளைஞர் பட்டாளத்தை, கனவுலகில் சஞ்சரித்தது போதும்; களம்கண்டு வருக! எனக் கரம் கூப்பி அழைக்கின்றேன். இது என் வேண்டுகோள் மட்டும் அல்ல. துக்கத்தால் துவண்டு, இருண்டுள்ள இதயங்கள் ஒளி வீசத் தூண்டுகோலாகவும் அமைய வேண்டுமென ஆசைப்படுகின்றேன்.

வெல்க செங்குந்தம்!

வெல்க இளைஞர் படை!!

மருந்துகள் கொல்கின்றன?

டாக்டர். இ. எஸ். எஸ். இராமன்

நோய்கள் பெருகிவிட்டதுபோல், மருந்துகளும் பெருகிவிட்டன. நோய்களைக் குணமாக்க சர்வதேச மருந்துக் கம்பெனிகள் விழுதூன்றி 'நொடிந்த' நாட்டின் நோய்களைப் போக்கித் தாம் 'கொழுத்துக்' கொண்டிருக்கின்றன.

குதிரைச் சவாரியில் உண்மையில் தேகப் பயிற்சி குதிரைக்கே அன்றி சவாரி செய்பவருக்கு அல்ல!

சாதாரண இருமல் சளிக்கு மெத்தப் படித்த டாக்டரிடம் போனால் முதலில் ஒரு லிஸ்ட். செய்யப்பவேண்டிய டெஸ்டுகள். எக்ஸ்-ரே இத்யாதி. இத்தனையும் முடிந்தால் மேலும் ஒருலிஸ்ட். வாங்கவேண்டிய மருந்துகளின் 'பட்டியல்'. சாதாரணமாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்குள் போயிருக்க வேண்டிய நோய்க்கு 'ஐந்நூறு, நானூறு' அந்தஸ்துக் கிடைத்துவிட்டது.

உண்மையில் நோயாளி அணுகப்பட்டிருக்க வேண்டியது எப்படி? நோயாளியின் முறையீடுகள், நோயின் அறிகுறிகள், அவற்றின் முடிவுகள், இவற்றுக்கு நிதானமாக டாக்டர் நேரம் ஒதுக்கியிருந்தாலே போதும். நிவாரணம் எளிதில் கிடைக்கும்.

'விழுந்துவிட்டேன்... கால் வீங்கிவிட்டது. அவரிடம் போனேன். 30 மாத்திரைகள்... ஒரு மாத்திரை மட்டும் மூன்று ரூவா...'

வீக்கம் காலுக்கு மட்டுமல்ல; அவருடைய பர்ஸுக்கும்தான். இல்லையென்றால் தானாகக் கரையக்கூடிய அல்லது எளிய மாத்திரைகளால் கரையக் கூடியதற்கு ஏன் அவ்வளவு விலை உயர்ந்த மாத்திரைகள்?

மிகவும் வலிமைவாய்ந்த, விலையுயர்ந்த மருந்துகள் மட்டுமே சிறந்தவையல்ல. மிக விலையுயர்ந்த ஆன்டி-பயாடிக்குகள் (antibiotics) வந்துவிட்ட போதிலும் இன்றைக்கும் 'பெனிசிலினுக்கு' நிகரான மருந்து எதுவுமே இல்லை. இன்றைக்கும் அது ஆன்டி - பயாடிக்குகளின் ராணி. (Still it is the queen of antibiotics.)

நோயாளியின் 'அந்தஸ்து' நோய்க்கும் தரப்படுவது வேதனைக்குரிய விஷயம். காரணஸ்தர் டாக்டர் மட்டுமல்ல; அதை விரும்புகிற, வேண்டுகிற நோயாளியுமே.

அளவுக்குமீறித் தரப்படுகிற மருந்து அதிகச் செலவை மட்டுமல்ல, அதிக ஊறுகளையும் தரும் என்பது நிதர்சனம்.

இன்றுவரை நிகழ்ந்துள்ள முன்னேற்றங்கள் தமக்குத் 'தெரியும்' என்பதற்காகவே எழுதப்படுகிற மருந்துகள், மருந்துக் கம்பெனிப் பிரதிநிதியின் மென்சொல் (இனிக்க, இனிக்க, இளிக்க, இளிக்க) அவர் அள்ளி அள்ளித் தருகிற (கைகள்

சிவக்க) மாதிரி மருந்துகள், அதனுல் டாக்டரிடம் ஏற்படுகிற ஆளுமை (Influence) பிளாஸ்டிக்கிலும், ஜப்பான் ஆர்ட் பேப்பரிலுமாக வார்னிஷிக்கப்பட்ட விதவித கலர் அட்டைகள், இன்ன பிறவும், வந்திருக்கிற நோயாளிக்குத் தெரியாத பெயராக எழுதவேண்டுமே என்கிற 'கட்டாயம்' —யாவுமே வேண்டாத மருந்துகளை நோயாளிகளுக்குத் தந்து கொண்டிருக்கின்றன.

இவை போதாதென்று கடைக்காரருக்கும், டாக்டருக்கும் உள்ள நெருக்கம் வேறு இருக்கிறது. (Expiry அயிட்டம் சார் கொஞ்சம் தள்ளி விடுங்க...) விலை மலிவாக உள்ள மருந்துகள் அதிக லாபம் தருவதில்லை என்பதால் விலையுயர்ந்தவை எழுதப்படுகிறது. இவ்வளவும் சொல்லியாயிற்று. பாதிக்கப்படுகிறவர் யார்?

கால்கடுக்க பஸ் ஸ்டாண்டில் 'நிஷ்டை' செய்து ஆபிஸுக்குப் போய், மாலையில் பையுடன் மார்க்கெட்டுக்குப் போய் 'கை'யில் காய்கறி வாங்கி வரும் நடுத்தர வர்க்கம்; அதற்கும்கீழே உள்ள தாழ்ந்த வர்க்கம்.

இன்றைக்குத் தரமான கம்பெனிகள் என்று வேரூன்றிப் போயிருக்கிற மருந்துக் கம்பெனிகள் இந்தியத் திருநாட்டில் சம்பாதிக்கிற லாபம் மட்டும் 20 சதவீதம் முதல் 6000 சதவீதம் வரை. அதாவது நூறு ரூபாய் முதலீட்டுக்கு 6000 ரூபாய் வரை சம்பாதிக்கின்றன. அவற்றின் தயாரிப்புக்களின் தரம் மட்டும் என்னவோ 'ஸ்திரம்' தான். ஆனல் அதற்காக இப்படியா ஒருபிடி அவலுக்கு ஒருபோக விளைச்சலையே கேட்பது?

இவ்வளவு லாபம் கொழிப்பதால் தான் டாக்டர்களுக்கு நாட்காட்டிகள், விதவிதமான பொருட்கள், டயரிகள், நட்சத்திர ஹோட்டல் விருந்துகள் பரிமாறப்படுகின்றன. சரி சரி தங்கள் தயாரிப்புக்கள் தான் (சுதேசிக் கம்பெனிகளின் தயாரிப்புக்களை விட) உயர்ந்தவை என்று பறைசாற்ற என்னென்ன செய்கிறுர்கள் இவர்கள்?

What looks similar need not be the same! 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல!' என்றபாட்டி காலத்து வாக்கியத்தை எனமலிலும் ஸ்கிரீன் பிரிண்ட்டுகளிலும் ஊற்றி வைத்துவிட்டு, தங்கள் தயாரிப்புகளே'ஊறு அற்றவை' என்று டாக்டரை 'அமுக்கோ அமுக்கெ'ன்று அமுக்கி அவர் மூளையைச் சுத்தமாகத் துடைத்து விடுகிறுர்கள்.

'பார்மகாலஜி' (மருந்தியல்) நூலை மருந்துக்கும் தொட்டுப் பார்க்க நேரமில்லாத பிஸி டாக்டர்களுக்கு இவர்கள் ஓதுவதுதான் வேதம்.

ஒரு மருந்தைத் தனியாகக் கொடுத்தால் வேலை செய்யாது என்று 'பலமுனைத் தாக்குதல்' நடத்த ஒரு நோய்க்கே உண்டான நான்கைந்து மருந்துகளை வெவ்வேறு விகிதங்களில் கலந்து தங்கள் வியாபாரத்தை இந்தக் கம்பெனிகள் உயர்த்திக் கொள்கின்றன. சமீபத்தில் இந்திய அரசு இவ்வகை மருந்து கலப்புக்கள் சிலவற்றைத் தடைசெய்து 'சூர்ய நமஸ்காரம்' செய்திருக்கிறது.

ஒரு ரகசியம் மாத்திரம் புரிய மாட்டேன் என்கிறது. அதுதான் மேலை நாடுகளில் தடைசெய்யப்பட்ட மருந்துகள் இந்திய நாட்டில் பவனி வரும் (வெற்றி உலா!) விஷயம். புரிந்தவர் யாரோ?

ஒரு பைசாவுக்கும் உதவாத 'நித்திய கல்யாணிப் பூ' வெளி நாட்டுக்கு ஏற்றுமதியாகி பல ரூபாய் மதிப்புள்ள 'VIN CRISTIN' ஆக இறக்குமதியாகிற கதை நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

நம் நாட்டுப் பாட்டி வைத்தியம் வெளி நாட்டிலிருந்து அலோபதியில் உருமாறி வந்துகொண்டிருக்கிற இந்நேரத்தில் நம் விஞ்ஞானிகள், மருத்துவர்கள் ஏன் நமது பண்டைய முறைகளை அலட்சியம் செய்கிறுர்கள்? தப்பித் தவறி ஆர்வம் காட்டுகிறவர்களுக்கும் ஏன் நமது அரசு பாராமுகம் காட்டுகிறது? குறைந்த விலையில்; நிறைந்த நிவாரணத்தை, இந்திய மக்கள் எப்போது பெறப்போகிறுர்களோ? சிலநாள் உணவை மறந்து ஒன்றுக்கும் உதவாத தித்திப்புத் திரவத்தை' (அதுதான், டானிக்) ஏன் இவர்கள் வாங்குகிறுர்கள்? இயற்கை உணவின் முக்கியத்துவம் ஏன் அவர்களுக்குச் சொல்லித் தரப்படவில்லை? ஏன்? ஏன்? எல்லாமே நமக்குக் கேள்விக் குறிகள்தான்!

தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம்

கூறைநாடு, மயிலாடுதுறை - 609 002.

தென்னிந்திய செங்குந்தர் 14வது சமூக, மாதர், கைத்தறி, இளைஞர் மாநாடுகள் காஞ்சிபுரத்தில் 1984 பிப்ரவரி 4, 5, சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெற்ற போது தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம் வெளியிட்ட அறிக்கை.

பேரன்புகொண்ட செங்குந்தர் குலப் பெருமக்களே, தாய்மார்களே, சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு வணக்கங்கள்.

எங்கள் சங்கம் 5—6—1944ல் கூறைநாட்டில் நடைபெற்ற செங்குந்தர் சங்கத்தின் ஆறுவது ஆண்டு விழாவில் ஆரூர் சபாபதி வள்ளல் அவர்கள் தலைமையில் தலைமைச் சங்கச் செயலர் திரு. சி. நடராஜ செங்குந்தர் பி.ஏ., பி.எல்., அவர்களால் தொடக்கி வைக்கப்பட்டது.

தொடக்க காலத் தலைவராகத் மன்னை அமரர் பெரி. ராம. நடராஜனுர் அவர்களும், அமரர் ஆக்கூர் இராமலிங்கனுர் அவர்களும் சிறப்புறத் தலைமைப் பதவியை ஏற்றுச் செயலாற்றிய எங்கள் சங்கம் இன்று மன்னார்குடி திரு ஆர் என். சந்தான ராஜ கோபாலன் அவர்கள் தலைமையில் செயலாற்றி வருகின்றது. தொடக்க காலம் முதல் பொதுச் செயலாளராக திரு ச கு. பா. பழநிவேல் அவர்கள் செயலாற்றி வருகிறார்கள்.

தொடக்க காலத்தில் தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன சங்கம் என்றும் தஞ்சை ஜில்லா செங்குந்தர் கல்விநிதி என்றும் இரண்டு தனித்தனி அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றி வந்தது. பின்னர் இரண்டு அமைப்புகளையும் ஒன்று படுத்தி தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கல்விச் சங்கம் என்ற பெயரில் முறைப்படி 15—4—77ல் பதிவு செய்து செயலாற்றி வருகிறோம்.

அமைப்பு

தஞ்சை மாவட்டத்தில் 140க்கு மேற்பட்ட கிராமங்களில் நம் குலத்தவர் வசிக்கின்றனர். இருப்பினும் 63 கிராமங்களில் கிளைச் சங்கங்களை அமைத்து அவற்றின் தொடர்புடன் மாவட்டச் சங்கம் செயலாற்றி வருகின்றது. மேலும் கிளைச் சங்கங்களை அனைத்து கிராமங்களிலும் அமைக்க முயன்று வருகிறோம்.

கல்விப்பணி

ஆறும் வகுப்பு முதல் பட்டப்படிப்பு முடிய தஞ்சை மாவட்டத்தில் பிறந்த நம் குல மாணவர்களில் சிறந்த மதிப்பெண்கள் பெறும் ஏழை மாணவர்கள் இந்த ஆண்டு வரை 1233 பேர்களுக்கு உதவி அளித்து வருகிறோம். மேலும் மாணவர்கள் முதன்மையான மதிப்பெண்கள் பெற வேண்டும். அதுவே அவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை வகுத்துக் கொடுக்கும் என்பதை வலியுறுத்தக் கருதி எஸ். எஸ். எல். சி. தேர்வில் 500க்கு 375ம் அதற்கு மேலும் பெறுகிற எங்கள் மாவட்ட மாணவர்களுக்கும் மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்புத் தேர்வில் 1200க்கு 900க்கு மேல் பெறும் மாணவர்களில் உச்ச நிலையில் உள்ள மாணவர்களுக்கும் சிறப்பான பரிசுகள் வழங்கியும் பாராட்டியும் கடந்த 18 ஆண்டுகளாக ஊக்கம் கொடுத்து வருகிறோம். இதுவரை எஸ். எஸ். எல். சி. மாணவர்களில் 205 பேரும் மேல்நிலைப்பள்ளி 12ஆம் வகுப்பு மாணவர்கள் 12 பேரும் எங்கள் பாராட்டு தலைப் பெற்றுள்ளார்கள்.

மக்கள் கணக்கு

எங்கள் மாவட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை கல்வி, பொருளாதார அரசு வேலைவாய்ப்பு மற்றும் பல அம்சங்

களைக் கொண்ட மக்கள் கணக்கு எடுத்து வருகிறோம் அண்மையில் பிற்பட்டோர் நலக்குழுவிற்கு எடுத்துரைக்க தலைச்சங்க வேண்டுகோளின்படி மக்கள் கணக்கு எடுக்கப்பட்டது. அதன் தொகுப்பு இந்த அறிக்கையில் கொடுத்துள்ளோம்.

செங்குந்தர் மக்கள் கணக்கு

1.	மக்கள் தொகை	35,223
2.	குடும்பங்கள்	6,431
3.	நெசவுத்தொழில் குடும்பங்கள்	2,166

கல்வி நிலை

4.	5-வயதிற்குட்பட்டவர்கள்	3,010
5.	மாணவர்கள்	7,319
6.	எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்றவர்கள்	3,885
7.	எம். பி. பி. எஸ். தேர்ச்சி பெற்றவர்கள்	33
8.	பி. இ., தேர்ச்சி பெற்றவர்கள்	53
9.	தேர்ச்சி பெற்ற இதர பட்டதாரிகள்	893
10.	படிக்காதவர்கள்	20,030

வேலை - தொழில் செய்பவர்கள்

11.	அரசுப்பணியாளர்கள்	1,256
12.	தொழில் செய்வோர்	18,689
13.	படித்து வேலையற்றோர்	4,949

பொருளாதாரம்

எங்கள் சங்கத்திற்குப் பெருந் தொகையாக வைப்புநிதி ஏற்படுத்த இயலவில்லை. ஆண்டுதோறும் எங்கள் மாவட்டத்தில் உள்ள வணிகப் பெரு மக்களிடமும், நிலச் சொந்தக்காரர் களிடமும் உண்டியல் நிதி என்ற பெயரில் அவர்கள் சேமித்து அளிக்கும் தொகையும், சங்கத்தின் ஊக்கத்தினால் இன்று நல்ல நிலையில் வாழ்க்கை நடத்தும் பழைய மாணவர்களின் அன்பளிப்பும், திருமணங் களில் வழங்கும் நன்கொடைகளும் மூல தனத்தில் சிறிய வட்டித் தொகையும் மாவட்ட குல அறச் செல்வர்கள் வழங்கும் உதவித்தொகைகளும் எங்கள் பொருளா தார நிலையாகும்.

அண்மையில் எடுத்த மக்கள் கணக்கு நம்மில் உள்ள பொறியாளர்களையும் மருத்துவர்களையும் வழக்கறிஞர்களையும், ஆசிரியர்களையும் அறிமுகம் செய்து வைத் துள்ளது. அடுத்த கோடை விடுமுறையில் அவர்களைத் தனித்தனியே கூட்டி, அவர்கள் கருத்துக்களை அறிந்து நமது எதிர்காலப் பொருளாதார தொழில் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து வேலை வாய்ப்பு கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்பது நமது குறிக்கோளாக இருக்கின்றது.

தஞ்சை மாவட்டத்தில் இளைஞர் அணி, மகளிர் அணி, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி இவைகளை மாவட்ட அள விலும் ஆங்காங்கு கிராமங்களிலும், அமைப்புகளை ஏற்படுத்திச் செயல்படுத்த பொறுப்பாளர்களைக் கேட்டுக் கொண்டு உள்ளோம். எல்லா அமைப்புகளும் தஞ்சை ஜில்லா செங்குந்த மகாஜன கலவிச் சங்கத்தின் உப அமைப்புகளாகச் செய லாற்ற விரும்புகிறோம். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தீர்மானத் திற்கு இணங்க நமது பெயருக்கு பின்னல் இதுவரையில் இணைத்திருந்த முதலியார் என்ற பட்டப்பெயரை நீக்கி செங்குந்தர் என்று சேர்த்துக் கொள்ள தீர்மானம் செய்து நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

எங்கள் மாவட்டச் சங்கப் பொருளாதார நிலையை உயர்த்த வணிகப் பெருமக்களிடமும் நிலச் சொந்தக்காரர் களிடமும் தக்க உதவியை எதிர்நோக்கி இருக்கிறோம்.

மாவட்டக் கிளைகளின் ஒத்துழைப் பினாலும் செயற்குழு உறுப்பினர்களின் இடையறாத ஊக்கத்தினாலும் கடந்த நாற்பது ஆண்டுகாலமாகக் குலப்பணி ஆற்றி வருகின்றோம்.

மற்ற மாவட்டங்களிலும் இப்பணி நடைபெற்று வருவதைக் கண்டும் கேட்டும் மகிழ்ச்சி அடைகிறோம். எங்களுக்கு அறி வுரைகள் வழங்கி, வாழ்த்தி வரும் அனை வருக்கும் எங்கள் தஞ்சை மாவட்ட செங் குந்தப் பெருமக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். வணக்கம்.

காஞ்சிபுரம் செங்குந்தர்
மாநில மாநாட்டு எழுச்சிக்கவிகள்

செந்தமிழ்த் தலைவன் செவ்வேள் முருகன்
குந்தர்கள் குடிக்கு இறைவன் நம்குலத்தார்
எந்த வகையினிலே வாழ்கின்றார் என்பதனைச்
சிந்தனை செய்திடவே சீர்காஞ்சி வாருங்கள்.

எழுபத்தி இரண்டு நாடுகளைக் கொண்டவர் நாம்
மெழுகுவர்த்தி போல நலம் மற்றவர்க்கே உழைக்கின்றோம்
சொற்றமிழால் உரைப்பதற்கும் உணர்வை பெறுவதற்கும்
கற்றவரும் மற்றவரும் காஞ்சி நகர் வந்திடுவீர்!
மாநிலத்தீர்! மாநாடு கூட்டுகின்றார் மாநகரில்
பாநலத்தீர் பாவையுடன் பதிக் காஞ்சி வந்திடுவீர்
நாநலமும் நம் நலமும் நாடு காணும் வாய்ப்பிதுதான்
தேன்இனிய செங்குந்தர் குலம் ஒன்று சேர்ந்திடுவோம்.
மேன்மக்கள் என்று சொல்லி மேன்மை எலாம் பறித்திடவே
கோன் மக்கள் குந்தர்களின் குறை களைய வில்லை ஐயா!
தான், மக்கள் தன்வீடு எனக் காலம் தாழ்த்திடாமல்
தேனீக்கள் போல நாம் சேர்ந்திடுவோம் காஞ்சியிலே!
நற்குடிகள் நாட்டுக்கு நல்லாடை கொடுப்பவர்கள்
பொற்புடைய பூமியிலே புல்லுக்கும் தாழ்வா நாம்
நற்பணிகள் பெறுவதற்கு நாம் தகுதி என்பதனை
மற்றவர்கள் உரைப்ப தெல்லாம் மனங் கொள்ள வேண்டாமோ?
வீரவாகு பரம்பரை நாம் வீரமதில் சிறந்தவர் நாம்
பாரம் பரியமதை தினம் பாடுகின்றோம் பாட்டினிலே
ஈரம் உடையவர்கள் ஈட்டி எழுபது நூல் கண்டவர்கள்
தீரமிலா வாழ்வதெற்கு சிந்திக்க வேண்டாமோ?
எத்தனையோ குறைகளை நாம் எண்ணித் தொலையாது
அத்தனையும் நன்மைகளாய் ஆகும் நாள் எந்நாளோ
இத்தனையும் பேசிட என் உடன்பிறப்பே எழுந்திடுவீர்
பித்தன் மொழி என்று பேசாமல் பணி புரிய!
கால் குழியில் நாம் இறங்கி கால் வயிறும் நிரம்பாது
காலமெல்லாம் உழைத்தோமே கண்டதென்ன சொல்லுங்கள்
மேல் நிலைக்கு வருவ தெங்கே மேன்மைகளைப் பெறுவதெங்கே
ஏன் என்று சிந்தித்து எழுந்திடுவீர் காஞ்சிநகர்!
எங்கும் செங்குந்தருக்கு இனிஇல்லை இன்னலெனச்
சங்கு முழங்குஞ் சமயமிது—பொங்குகவே

நல்வாழ்வு நம்நாடு நம்மக்கள் தாம்கண்டு
தங்கும் தமிழ்போல் தழைத்து.

வாழ்த்து

மாநாடு வெற்றி பெற மாநிலத்தார் வாழ்வு பெற
கோனாட்சி மேன்மை பெற குந்தர் குலம் வாழியவே!

பாட்டு

காவடிச் சிந்துபோல் பாடுதல்] [ஏக தாளம்.

குந்தர்கள் குலமே குமரனின் மரபே
செந்தமிழ் மக்களே வாரீர்
சீர்பெறு காஞ்சியில் சேரீர்! (கு)

வாடிய பயிர்க்கு வான் மழை போல
வந்தது மாநில மாநாடு—நீ
சொந்தமுடன் பள்ளுப் பாடு (கு)

நாடிய எண்ணம் நல்லவை எல்லாம்
நம் குல மக்களே பெறலாம்—இதை
நாடினால் நாம் சித்தி பெறலாம். (கு)

காஞ்சியில் காணுவோம் மாநாடு—அதை
கருத்தினில் கொண்டு நீ பாடு—நம்
கடமையாய் எண்ணி நீ பாடு. (கு)

மேல்நிலை பெறுகின்ற காலமிது—குந்தர்கள்
மேன்மையை உணர்கின்ற காலமிது—நம்
மேன்மையை உணர்கின்ற காலமிது. (கு)

பால்பொங்கி விழுந்திட்ட பொங்கலிலே—மகிழ்
பண்டிகை தந்திட்ட இன்பத்திலே—சேர்ந்து
உயர்நிலே பெற்றிட நீ கூடு. (கு)

நான்என்று மார்தட்டும் நம்முருகன்—என்றும்
நமக்குத்துணே செய்வான் நம்முருகன்
நமக்குத் துணை செய்வான் நம் முருகன். (கு)

எத்தனை பெருமக்கள் கூடி இங்கே
எடுத்துரைக்கின்ருர் கேள் நற்சங்கே
மத்தகம் போன்ற வீரர் நெஞ்சில்
மதித்திடும் வல்லமை தீரமம்மா. (கு)

—மாநாட்டுக் குழுவினர்

"வெற்றிக்கு வழிகோல"

K. சோமசுந்தரம், M.A., B.Sc., M.Ed.,
(தலைவர், பண்பாட்டு விளையாட்டுக் குழு) பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்.

—இளைஞர் பகுதி

எந்த உயிரினத்திலும் இளமைக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. இளமைப் பருவம் அழகு நிரம்பிய பருவம். இளமை அழகையும் புதிய கோணத்தையும் தோற்றுவிக்கிறது. இளமைக்கு ஆர்வம் அதிகம். செயல்பாடும் அவ்வாறே. ஆகவே இளைஞர் முன்னேற்றம் வீட்டையும் நாட்டையும் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் இதற்கு இன்றியமையாத தேவை தகுந்த "வழிகாட்டல்". இளைஞர்களிடையே நல்லிணக்கமும், பிறருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு மதிக்கின்ற பண்பு நலனும் இருந்தால் முன்னேற்றம் அவர்க்கு மிக எளிதில் கைகூடும்.

இளைஞர்கள் முன்னேற அவர்களிடம் சில திறமைகளும் பண்பு நலன்களும் அமையவேண்டும். அவற்றுள் நல்லாரிணக்கம், கலந்துரையாடல், தக்கவர்களின் அறிவுரையைக் கேட்டல், முயற்சி, உழைப்பு—ஆகியவை முக்கியமானவைகளாகும். நம் இளைஞர்கள் இடையே உணர்வு பூர்வமான ஒருமைப்பாடும், புரிந்துகொண்டு செயல்படும் திறனும் இருந்தால் வாழ்வில் எத்துறையிலும் எடுத்துவைக்கும் அடிகள் வெற்றிக்கே வழிகோலும்.

செங்குந்த இளைஞர் சங்கங்கள் சமுதாயத்திற்குச் சிறந்த சேவை செய்ய முடியும். இப்படிப்பட்ட சங்கங்கள் இயக்கத்திற்குப் புதிய வேகத்தையும் புதியபார்வையையும் கொடுக்க முடியும்.

இளைஞர் முன்னேற்றம், வளர்ச்சி—என்பவை செயலில் விளையும்போதுதான் சமுதாயம் அதன் பயனை அனுபவிக்க முடியும். செங்குந்தர் சமுதாய வளர்ச்சி என்பது இளைஞர்கள் கல்வியிலும் தொழிலிலும் முன்னேறும்வளர்ச்சியைப் பொறுத்தது. தொழில் முனைவர்களாக நம் இளைஞர்கள் உயரும்போதுதான் செங்குந்தர் இனம் உயரும். கருத்தொருமித்தவர்கள் இடையே கலந்துரையாடல்கள் ஏற்படும் போது இது நடைமுறை சாத்தியமாகும். முயற்சியும் உழைப்பும்தான் நம் இளைஞர்களின் குறிக்கோள்களாக இருக்க வேண்டும்.

பொறுப்பான பதவிகளிலும், தொழில் துறையில் சிறப்பான நிலைகளிலும் இருப்பவர்கள் இக்கருத்துக்கள் — எண்ணங்கள்— செயல்பட உதவிட வேண்டும். இளைஞர்கள் அவர்களை அணுகி 'வழிகாட்டல்' பெறலாம். பொருளாதார உதவி கொடுங்கள் என்று கேட்பதைவிட 'வழிகாட்டுங்கள்' என்று கேட்டால் விழி நிச்சயம் நம் பக்கம் திரும்பும். கேட்க நினைத்தது கேட்காமலேயே கிடைக்கும்.

செங்குந்தர் சமுதாய மேம்பாடு என்பது பொருளாதார மேம்பாட்டில்தான் சிறக்கும். சிறந்த கல்விமான்கள், அறிவியல் அறிஞர்கள், அரசியல் நிபுணர்கள்—தேவைதான். ஆனல் அரசு அலுவலகங்களில் வேலைக்காக அலையும் நிலையில் இருப்பதில் இனியும் பயனில்லை. சொந்தத் தொழில் முயற்சி — சிறிய தொழிலாக இருந்தாலும் பெரிதாக்கி முன்னேறுவதில் தான் எதிர்காலம் இருக்கிறது.

தொழில் என்று சொல்லும்போது மிகப் பெரிய தொழில்களைப் பற்றியும் அதிக முதலீட்டைப் பற்றியும் நினைத்து, பயந்து ஒதுங்கிக்கொண்டே வந்தால் தொழிலே செய்ய முடியாது. அவரவர்

வசதிக்கும் வாய்ப்புக்கும் முதலீட்டிற்கும் ஏற்பத் தொழில்களில் ஈடுபடலாம். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற கருத்து தொழிலில் சிறியது—பெரியது, உயர்ந்தது—தாழ்ந்தது என்ற பேதங்களைப் போக்க உதவும்.

ரோட்டரி சங்கம், அரிமா சங்கம், ஜேசீஸ் சங்கம்—போன்ற சங்கங்கள் ஆங்காங்கு சேவை செய்வதில் ஈடுபட்டிருக்கின்றன. இளைஞர் முன்னேற்றம்—இந்த சங்கங்களின் முக்கிய குறிக்கோள்களுள் ஒன்று. தொழில் முயற்சியில் ஈடுபடுவோர்களுக்கு வழிகாட்டலும், வங்கிக் கடன் உதவிக்குப் பரிந்துரை செய்தலும், சங்கங்களின் மூலம் தகுந்த அரசு அலுவலர்களையும், தொழிலதிபர்களையும், அறிஞர் பெருமக்களையும் அழைத்து நேருக்கு நேர் பேட்டிகளின் மூலம் தொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதும் இச் சங்கங்களின் நடைமுறைப் பணிகள். செங்குந்த இளைஞர்கள் இப்படிப்பட்ட சங்கங்களின் உதவியைத் தாராளமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

எந்த ஒரு சமுதாயத்திலும் இளைஞர் முன்னேற்றம்தான் அச்சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அடிப்படை. நாட்டிலுள்ள செங்குந்த இளைஞர் சங்கங்கள் தங்களிடையே "இளைஞர் பரிவர்த்தனை" திட்டத்தை—Youth Exchange Programme—செயல்படுத்தலாம். உதாரணமாகமேட்டுப் பாளையத்திலுள்ள சங்கத்திலிருந்து நான்கு இளைஞர்கள் மயிலாடுதுறையில் உள்ள சங்கத்தின் அழைப்பின் பேரில் ஒரு வாரம் மயிலாடுதுறை சென்று அவர்களுடைய விருந்தினராகத் தங்கி இருந்து நம் சமூக இளைஞர்களைப் பற்றியும் வளர்ச்சியைப் பற்றியும் நேராக அறிந்துகொள்ளலாம். இதனால் சங்கங்களுக்குச் செலவு ஒன்றும் ஏற்படாது. பரிவர்த்தனைத் திட்டத்தில் சேரும் இளைஞர்கள் பயணச் செலவை ஏற்கவேண்டும். விருந்தோம்பல்—அதாவது உணவு, இருப்பிடம், சென்ற இடத்தில் போக்குவரத்து ஏற்பாடுகள்—ஆகியவை அழைக்கும் சங்கத்தைச் சார்ந்தவை. நான்கு இளைஞர்கள் நான்கு வீடுகளில் விருந்தினராகத் தங்கலாம். இதற்கு நம் சமுதாயத்தைச் சேர்ந்த நான்கு பெரியவர்கள் உதவி செய்யலாம். இதனால் இரண்டு சங்கங்களுக்கும் தனிச் செலவு ஒன்றும் இல்லை. தளராத முயற்சியும் உழைப்பும் இத்திட்டத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கவேண்டும். நம் சமுதாய வளர்ச்சியில் நாட்டமுள்ள சிலர் தங்களைச் சற்று அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதின் மூலம் இத்திட்டம் வெற்றியடையும்.

நம் சமுதாய இளைஞர்களிடையே விழிப்புணர்வும் அறிவார்ந்த பெருநோக்கும்வளர இப்படிப்பட்ட திட்டங்கள் வழி செய்யலாம். அனுபவம் உள்ளவர்களின் வழிகாட்டல் மூலம் இத்திட்டங்கள் சிறந்த பயன் அளிக்கக்கூடும்.

